
August 2025

# தமிழ்

**நற்றமிழரின் நாடித்துடிப்பு**




VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
Traditional taste that Lingers

# iதமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

**August 2025** சுவடி — 15
ஓலை — 6

**வணக்கம் பல**

‘நரிக்கு நாட்டாமை கிடைத்தால் கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும்.’ என்று தமிழில் ஒரு சொலவடை உண்டு. அமெரிக்கா எப்போதுமே எது நடந்தாலும், பெரியண்ணன் தோரணையுடன் கருத்து சொல்கிறேன் பேர்வழி என்று கலகத்தை உண்டு பண்ணுவதும், எளிய நாடுகளிடத்தில், தன் அதிகாரத் தோரணையைக் காட்டுவதுமாகவே நடக்கிறது. ‘எளியோரை வலியோர் அடித்தால், வலியோரை தெய்வம் அடிக்கும்’ என்பதும் தமிழ் முதுமொழிதான்!

அமெரிக்க எதிர்ப்பு நாடுகளின் மாநாட்டுக்கு முன்பாக, அமெரிக்கா, தன் பண மதிப்பை உயர்த்துவதற்கும், இறக்குமதிக்கான வரி கூட்டுவதற்குமான செயல்களில் ஈடுபட, பூனைக்கு மணி கட்ட உலக நாடுகள் முன் வந்திருப்பது ஒரு நல்ல தொடக்கம். அது உறுதியாகச் செயல்பட்டு வெற்றி பெற வேண்டுமே தவிர, அவிழ்த்து விட்ட நெல்லிக்காய் மூட்டைபோல் சிதறிப் போய்விடாமல் காப்பதையும் கூட்டணி நாடுகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கோயிலை மையப்படுத்தி தாய்லாந்தும் கம்போடியாவும் நடத்திய குடுமிப்பிடி சண்டையில் வெளிப்பட்டிருப்பது எல்லைப் பிரச்சினை மட்டுமல்ல, வீணான தொல்லைப் பிரச்சினையும் கூட. இதனை இரு நாடுகளுக்கும் பொதுவாக நின்று சீர்செய்ய வேண்டியதிலும், உண்மையை உறுதிப்படுத்துவதிலும், உலக நாடுகள் வழிகாட்ட வேண்டும்.

பிரம்மபுத்திரா நதியில் சீனா கட்டும் அணை, பேராபத்தை உண்டு பண்ணக் கூடியதாக இருக்கிறது. எப்போதுமே அந்நாடு மோதல் போக்கைக் கொண்டிருக்கிறது. எதேச்சாதிகாரத்துக்கு காலம் தகுந்த பாடத்தை வழங்கும்.

நெடுங்காலமாக வேடிக்கை பார்ப்பதை மட்டுமே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறதோ என்ற ஐயம், ஐ.நா. அமைப்பு மீது இருந்து வருகிறது. எப்போதுதான் தானாக முன்வந்து பிரச்சினைகளை தீர்க்கப் போகிறது என்பதை நாமும் எதிர்பார்ப்பது வேடிக்கை!

உலகில் அவ்வப்போது நிகழ்கின்ற தலையாயச் செய்திகளை எல்லாம் தன்னகத்தே கொண்டு தலைப்புச் செய்திகளாகத் தரும் ‘அய் தமிழ்’ கலை, அறிவியல், சுற்றுச்சூழல், பண்பாடு என ஆவணப் பெட்டகமாக மலர்கின்றது.

வழமை போல் வரவேற்று வாசியுங்கள்!... நேசியுங்கள்!...

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...



தவிர்ப்போம் போர்
கண் கெட்ட பிறகு
தமிழே தமிழே
அராஜக தந்திரம்
சேரமான் கனவு
தல வலம்
அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்
வளம் காப்போம்
மருத்துவ தமிழ்
வெறுப்போம் வெறுப்பை!

**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam


**Contact us:**
*editor@ithamil.com*

(பொறுப்பு துறப்பு: இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது. படைப்புக்கள் யாவும் படைப்பாளிகளின் கருத்துக்களே. அதற்கு எவ்வகையிலும் அய் தமிழ் பொறுப்பேற்காது.)

# தவிர்ப்போம்

### தாய்லாந்து – கம்போடியா நாடுகள் மோதல்!

தாய்லாந்து, கம்போடியா இடையே நிலவும் தொடர் பதற்றம் ஜூலை 24 அன்று, எல்லைப் பகுதியில் கடுமையான மோதலாக வெடித்தது. அதன் விளைவாகக் குறைந்தபட்சம் 12 தாய்லாந்து நாட்டவர் கொல்லப்பட்டு இருப்பதாகவும், அவர்களில் பெரும்பாலானவர்கள் பொதுமக்கள் எனவும் தாய்லாந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




கம்போடியா தரப்பில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதா, எத்தனை பேர் பலியாகியுள்ளனர் என்பது தெரியவில்லை.இந்த மோதல் தொடங்கியதற்குக் காரணம் எல்லையில் நடந்த துப்பாக்கிச் சூடு என்றும் இருதரப்பும் பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொள்கின்றன. கம்போடியா ஏவுகணைகளை ஏவியதாக தாய்லாந்து குற்றம் சாட்டுகிறது. கம்போடியாவின் ராணுவ நிலைகள் மீது தாய்லாந்து விமானம் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது.

பதற்றத்திற்கு காரணம் என்ன?

இது சமீபத்தில் தொடங்கிய சச்சரவு இல்லை. தாய்லாந்து, கம்போடியா இடையிலான சர்ச்சை ஒரு நூற்றாண்டுக்கும் முன்பே தொடங்கியது. அதாவது, கம்போடியா பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருந்து விடுதலை அடைந்தபோது, இரு நாடுகள் இடையே எல்லை வகுக்கக்கப்பட்டபோது, இந்த சச்சரவு தொடங்கியது.ஆனால், 2008ஆம் ஆண்டில்தான் இரு நாடுகளுக்கும் இடையிலான இந்தப் பிரச்னை அதிகாரபூர்வமாக தீவிரமடைந்தது. இரு நாடுகளுக்கு இடையிலான சர்ச்சைக்குரிய பகுதியில் 11ஆம் நூற்றாண்டு கோவில் ஒன்று அமைந்துள்ளது. அதை, யுனெஸ்கோ பாரம்பரிய தலமாக பதிவு செய்வதற்கு கம்போடியா முயன்றதே அதற்குக் காரணம்.

அதைத் தொடர்ந்து, அடுத்தடுத்த ஆண்டுகளில்

# போர்

அவ்வப்போது நடந்த மோதல்களில் இருதரப்பிலும் ராணுவ வீரர்கள், பொது மக்கள் எனப் பலர் கொல்லப்பட்டனர்.

கடந்த மே மாதம் நடைபெற்ற மோதலில் ஒரு கம்போடிய வீரர் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து மீண்டும் பதற்றம் ஏற்பட்டது. இந்தப் பதற்றம், இரு நாடுகளுக்கும் இடையே கடந்த பத்து ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மோசமான நிலையை எட்டியுள்ளது. கடந்த இரண்டு மாதங்களில், இரு நாடுகளுமே பரஸ்பரம் எல்லைக் கட்டுப்பாடுகளை விதித்து வந்தன. தாய்லாந்தில் இருந்து காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட பொருட்களை இறக்குமதி செய்ய கம்போடியா தடை விதித்தது. அங்கிருந்து பெறப்பட்டு வந்த மின்சாரம் மற்றும் இணைய சேவைகளையும் நிறுத்தியது.

ஜூலை 24ஆம் தேதி என்ன நடந்தது என்பது பற்றி தாய்லாந்தும் கம்போடியாவும் வெவ்வேறு விளக்கங்களை அளித்துள்ளன. உள்ளூர் நேரப்படி காலை சுமார் 07:30 மணிக்கு எல்லையில் உள்ள தாய்லாந்து ராணுவ நிலைகளை உளவு பார்க்க கம்போடிய ராணுவம் டிரோன்களை அனுப்பியதாக தாய்லாந்தின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூறுகிறது.

அதன் பின்னர், “ஏவுகணைகளால் ஏவப்படும் எறிகுண்டுகளை ஏந்திய கம்போடிய வீரர்கள் எல்லையில் குவியத் தொடங்கினர். தாய்லாந்து தரப்பில் இருந்த வீரர்கள் கூக்குரலிட்டுப் பேச்சுவார்த்தை நடத்த முயன்றனர். ஆனால் அந்த முயற்சி பலன் அளிக்கவில்லை” என தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அதோடு, கம்போடிய வீரர்கள் காலை சுமார் 08:20 மணிக்கு தாக்குதலைத் தொடங்கியதால் தாய்லாந்து தரப்பினர் பதில் தாக்குதல் நடத்த வேண்டியிருந்ததாகவும் அவர் கூறினார்.பிஎம்—



21 ராக்கெட் லாஞ்சர்கள், பீரங்கிகள் உள்ளிட்ட கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி தாய்லாந்து எல்லைப் பகுதியில் அமைந்திருந்த வீடுகள், மருத்துவமனை, பெட்ரோல் பங்க் உள்ளிட்ட பொது இடங்களையும் சேதப்படுத்தியதாக கம்போடியா மீது தாய்லாந்து குற்றம் சுமத்தியுள்ளது. ஆனால், தாய்லாந்து வீரர்கள்தான் காலை 06:30 மணிக்கு மோதலைத் தொடங்கியதாக கம்போடியா பயன்படுத்தி, கம்போடிய பகுதியில் வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாக சோசியாட்டா குற்றம் சாட்டினார். கம்போடியாவுடனான பிரச்னை "நுட்பமானது" என்றும், அதைக் கவனமாக, சர்வதேச சட்டத்திற்கு உட்பட்டுத் தீர்க்க வேண்டும் என்றும் தாய்லாந்தின் இடைக்கால பிரதமர் பும்தம் வெச்சயாச்சை கூறினார்.



கூறுகிறது. அதாவது, முந்தைய ஒப்பந்தத்தை மீறிய தாய்லாந்து வீரர்கள், எல்லை அருகே இருக்கும் கெமர்—இந்து கோவில் வரை முன்னேறி வந்து முள்வேலி அமைத்ததாகவும் கம்போடியா தரப்பில் குற்றம் சாட்டப்படுகிறது.

அதன் பின்னர் "தாய்லாந்து வீரர்கள் காலை 7:00 மணிக்குப் பிறகு ஒரு டிரோனை செலுத்தியதாகவும், சுமார் 08:30 மணிக்கு வானத்தை நோக்கி சுட்டதாகவும்" கம்போடியா தேசிய பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் மாலி சோசியாட்டா தெரிவித்தார். காலை 08:46 மணிக்கு, தாய்லாந்து படையினர் முன்னறிவிப்பின்றி கம்போடிய படைகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக மாலி சோசியாட்டாவை மேற்கோள் காட்டி ப்னோம் பென் போஸ்ட் நாளிதழ் குறிப்பிட்டுள்ளது. மேலும், "அதனால், தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கான உரிமையைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை" என அவர் கூறியதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இவற்றோடு, தாய்லாந்து அதிகப்படியான படைகளைக் குவித்து, கனரக ஆயுதங்களைப்

இந்தப் பிரச்னையை அமைதியாக தீர்க்கவே கம்போடியா விரும்புவதாகவும், "ஆயுதப் படை ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆயுதப் படை மூலம் பதிலடி கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்றும் அந்நாட்டுப் பிரதமர் ஹுன் மனெட் கூறினார்.கடந்த காலங்களில் தீவிரமான துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்று இருந்தாலும் பதற்றம் விரைவிலேயே தணிக்கப்பட்டது. அதே பாதை மீண்டும் தேர்வு செய்யப்படும் என பிபிசி செய்தியாளர் ஜோனதன் ஹெட் கருதுகிறார். அதேவேளையில், தற்போது இந்த சண்டையில் இருந்து நம்பிக்கையுடன் பின்வாங்கத் துணியும் தலைவர்கள் இருதரப்பிலும் இல்லை என்றும் அவர் எச்சரிக்கிறார்.

## தாய்லாந்து மற்றும் கம்போடியாவுக்கு செல்வது பாதுகாப்பானதா?

தற்போது வரை இந்த மோதல் குறிப்பிட்ட ஒரு பகுதியில் மட்டுமே நடைபெறுகிறது.இருப்பினும், சமீபத்திய வாரங்களில் எல்லைப் பகுதிகள் மூடப்பட்டதைத் தொடர்ந்து, பயணிகளை இந்தப் பகுதியில் "குறிப்பாக பிரேஹ் விஹோர் கோவில், தா இக்வை கோவில், தா முயென் தோம் கோவில்




போன்ற சுற்றுலாத் தலங்களில் கூடுதல் கவனம்“ செலுத்துமாறு ஏற்கெனவே வலியுறுத்தப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் தாய்லாந்து எல்லையைத் தவிர்க்கும்படி கம்போடியாவில் இருக்கும் தனது குடிமக்களை சீனா வலியுறுத்தியுள்ளது.

சிவன் கோவிலின் ஆயிரம் ஆண்டு வரலாறு

கம்போடியாவின் சமவெளிகளில் உயரமான பீடபூமியின் விளிம்பில் அமைந்துள்ள ப்ரே விஹார் கோயில், சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்கிறது யுனெஸ்கோ. இந்தக் கோவில் கம்போடிய மக்களின் நம்பிக்கைக்குரிய முக்கியமான மதத் தளம் என்பது குறிப்பிடத்தக்கது. 11ஆம் நூற்றாண்டில் இந்த ஆலயத்தின் பிரதான கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் ஒன்பதாம் நூற்றாண்டில் அங்கு உருவாக்கப்பட்ட துறவி மடம் ஒன்றே பிற்காலத்தில் மிகப்பெரிய ஆலயமாக கட்டப்பட்டது என்று ஆலய வரலாறு கூறுகிறது.தொலைதூர இடத்தில் அமைந்துள்ள இந்த யுனெஸ்கோ பாரம்பரிய தளம் நன்கு பாதுகாக்கப்படுகிறது. மிகச்சிறந்த கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாக திகழும் இந்த கோவில் செதுக்கப்பட்ட கற்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

ப்ரே விஹார் கோவில் தகராறில் சர்வதேச நீதிமன்றம் 1962 ஜூன் 15 அன்று தனது தீர்ப்பை வழங்கியது .தனது பிரதேசத்தில் ப்ரே விஹார் கோவில் இடிபாடுகள் இருக்கும் ஒரு பகுதியை தாய்லாந்து ஆக்கிரமித்துள்ளதாக, சர்வதேச நீதிமன்றத்தில் கம்போடியா புகார் அளித்திருந்தது. இந்த இடம், கம்போடிய மக்களின் நம்பிக்கைக்குரிய முக்கியமான மதத் தளம் என்பது குறிப்பிடத்தக்கது..இந்தக் கோவில் யாருக்கு சொந்தம் என்பது குறித்து முடிவெடுக்கவும், 1954 முதல் அங்கு நிறுத்தப்பட்டுள்ள தாய்லாந்து படைகளை திரும்பப் பெற உத்தரவிட கோரியும் சர்வதேச நீதிமன்றத்தை அணுகியது கம்போடியா.


நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு எதிராக தாய்லாந்து முதற்கட்ட ஆட்சேபனைகளை தாக்கல் செய்தது, அவை நீதிமன்றத்தால் 1961 மே 26 அன்று நிராகரிக்கப்பட்டன. 1962 ஜூன் 15 அன்று அதன் இறுதித் தீர்ப்பில், 1904 ஆம் ஆண்டு பிராங்கோ—சியாமிஸ் ஒப்பந்தம் சர்ச்சைக்குரிய பகுதியை நீர்நிலைக் கோட்டின்படி வரையறுத்ததாகக் கூறியது. மேலும் கூட்டு எல்லை நிர்ணய ஆணையத்தால் தயாரிக்கப்பட்ட வரைபடம், கம்போடியாவின் எல்லைக்குள் கோயிலைக் காட்டியது.

இந்த வரைபடத்தை ஏற்க வேண்டிய கட்டாயம் இல்லை என்று தாய்லாந்து வாதிட்டது. மேலும், ‘’இந்த வரைபடத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒருவேளை வரைபடத்தை ஏற்றுக்கொண்டிருந்தாலும், அது தவறான எண்ணத்திலேயே செய்யப்பட்டிருக்கும்‘’

என்று தாய்லாந்து வாதிட்டதுஇருப்பினும், தாய்லாந்து உண்மையிலுமே அந்த வரைபடத்தை ஏற்றுக்கொண்டதாகவும், கோயில் கம்போடிய எல்லைக்குள் அமைந்துள்ளது என்றும் நீதிமன்றம் முடிவு செய்தது.

அத்துடன், அங்கு நிறுத்தப்பட்டுள்ள ராணுவ அல்லது காவல்துறை துருப்புக்கள் அனைத்தையும் தாய்லாந்து உடனடியாக அகற்ற வேண்டும் என்றும், 1954க்குப் பிறகு ஆலயத்தில் இருந்து அகற்றப்பட்ட அனைத்தையும் கம்போடியாவிற்குத் திருப்பித் தர வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இடையிலான மோதல் 'போராக உருவெடுக்கக்கூடும்' என தாய்லாந்து எச்சரித்துள்ளது. இந்த மோதலால் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பொதுமக்கள் வசிக்கும் பகுதிகள் மீது கம்போடியா ஷெல் தாக்குதல் நடத்தியதாக தாய்லாந்து குற்றம் சாட்டியுள்ளது. ராக்கெட்டுகள் வீசப்படும் எல்லைக்குள் உள்ள அனைத்து கிராமங்களையும் காலி செய்துள்ளது. பொதுமக்கள் மீது கிளஸ்டர் வெடிமருந்துகள் ஏற்படுத்தும் தாக்கத்தின் காரணமாக உலகின் பெரும்பாலான பகுதிகளில் கிளஸ்டர் வெடிமருந்துகளைப் பயன்பாட்டிற்கு




தடைசெய்யப்பட்டுள்ளன. ஆனால் தாய்லாந்து கிளஸ்டர் வெடிமருந்துகளை பயன்படுத்துவதாக கம்போடியா குற்றம் சாட்டியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு தாய்லாந்து பதிலளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எச்சரிக்கை விடுத்த தாய்லாந்து — காரணம் என்ன?

எல்லையில் ஏற்பட்ட கண்ணிவெடி வெடிப்பில் தாய்லாந்து ராணுவ வீரர் ஒருவர் காயமடைந்தார். இதைத் தொடர்ந்து, கம்போடியாவிலிருந்து தனது தூதரை தாய்லாந்து திரும்ப அழைத்துக் கொண்டதால் இரு நாடுகளுக்கும் இடையே தற்போது பதற்றம் ஏற்பட்டுள்ளது.அதன் பிறகு, தாய்லாந்தும் கம்போடியாவும் முதலில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக ஒருவர் மீது மற்றொருவர் குற்றம் சாட்டிக்கொண்டன.எல்லைக்கு அருகே தாய்லாந்து துருப்புக்களைக் கண்காணிக்க கம்போடிய ராணுவம் டிரோன்களை நிறுத்தியபோது மோதல் தொடங்கியதாக தாய்லாந்து கூறுகிறது.

தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும்

அமைதியை காக்க வேண்டுகோள் விடுக்கும் சர்வதேச நாடுகள்

"விரோதப் போக்கை உடனடியாக நிறுத்தவும், பொதுமக்களைப் பாதுகாக்கவும், மோதலை அமைதியான முறையில் தீர்க்க வேண்டும்" என இரு நாடுகளையும் அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது. "தாய்லாந்து—கம்போடியா எல்லையில் வன்முறை அதிகரிப்பது குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம், பொதுமக்கள் உயிரிழப்புகள் குறித்த செய்திகள் கவலைகளை



அதிகரிக்கின்றன” என்று அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் டாமி பிகோட் வழக்கமான ஊடக சந்திப்பு ஒன்றில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

கம்போடியா மற்றும் தாய்லாந்துடன் அரசியல் மற்றும் உத்தி ரீதியிலான உறவுகளைக் கொண்டுள்ள சீனா, மோதல் குறித்து “ஆழ்ந்த கவலை” கொண்டிருப்பதாகக் கூறியது. இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை மற்றும் ஆலோசனை மூலம் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வார்கள் என சீனா நம்பிக்கை வெளியிட்டுள்ளது. ஆஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளும் இரு நாடுகளிடமும் அமைதிக்காக வேண்டுகோள் விடுத்துள்ளன.

தாய்லாந்து — கம்போடியா இடையே நீண்ட காலமாக புகைந்து கொண்டிருந்த எல்லைப் பிரச்சினை, தற்போது ராணுவ மோதலாக வெடித்துள்ளது. கம்போடிய ராணுவ நிலைகளைக் குறிவைத்து வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது தாய்லாந்து. கம்போடியா ராக்கெட், பீரங்கிக் குண்டுகளைப் பயன்படுத்தியதாலேயே இந்த பதில் நடவடிக்கை என்று தாய்லாந்து விளக்கமும் அளித்துள்ளது.

தாய்லாந்து தரப்பில் ஒரு சிறுவன் உள்பட 11 பொதுமக்களும், ஒரு ராணுவ வீரரும் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கம்போடியா இழப்பு குறித்து அதிகாரபூர்வமாக ஏதும் தகவல் இல்லை. இரண்டும் சிறிய நாடுகள், இரண்டுமே சுற்றுலாவுக்கு பெயர் பெற்றவை. ஆனால், சமீப காலமாக இரண்டும் போரை நோக்கி போகுமளவுக்கு என்ன நடந்தது என்று அலசுவோம்.

மோதலின் பின்னணி என்ன?: தாய்லாந்து — கம்போடியா இடையேயான பிரச்சினை நூற்றாண்டு பழமையானது. 1953 வரை கம்போடியா நாடு பிரஞ்சு ஆதிக்கத்தில் இருந்தது. அப்போது இந்த இரு நாடுகளுக்கும் இடையேயான எல்லை வரையறுக்கப்பட்டது. 1907—ல் உருவாக்கப்பட்ட அந்த வரைபடம் தான் இப்போதைய சிக்கல்களுக்கு மூலக்காரணம் எனலாம். இரு நாடுகளும் சுமார் 800 கி.மீ எல்லையை பகிர்ந்து கொள்கின்றன. இப்பகுதி யாருடையது என்பதில் நீடிக்கும் சிக்கல்தான் இன்னும் நீடிக்கிறது.சர்ச்சைக்குரிய இந்த எல்லையில் கெமர் பேரரசின் அரசர் 7—வது ஜெயவர்மர் கட்டிய மூன்று கட்டிடங்களுடன் கூடிய தொல்லியல் வளாகம் உள்ளது. இதில் ஓர் இந்துக் கோயில், புத்த வழிபாட்டுத் தலம், ஒரு மருத்துவமனை உள்ளது. இவற்றை உள்ளடக்கிய கோயில் வளாகத்தின் மீது இரு நாடுகளுமே நீண்ட காலமாக உரிமை கோருகின்றன.

இவையெல்லாம் இருக்க, புதிய மோதலுக்கான பிரச்சினை மே மாதம் தொடங்கியது. மே மாதம் கம்போடியா ராணுவ வீரர் ஒருவர், சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டார். அதிலிருந்தே கம்போடியாவும், தாய்லாந்தும் பழிக்குப்பழி நடவடிக்கைகளை

தொடங்கிவிட்டன. எல்லையில் கெடுபிடிகள், கம்போடிய காய்கறி, பழங்களுக்கு தாய்லாந்தில் தடை, தாய்லாந்து படங்களுக்கும், இணைய சேவைக்கும் கம்போடியாவில் தடை என போட்டாபோட்டிகள் நீண்டன.

ஆனால், கடந்த புதன்கிழமை இது ராணுவ மோதலாக வெடித்தது. அன்றைய தினம் வழக்கமான ரோந்தில் இருந்த தாய்லாந்து ராணுவ



வீரர்கள் ஐந்து பேர் கண்ணிவெடித் தாக்குதலில் காயமடைந்தனர். இது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது. தாய்லாந்து அதிகாரிகள், 'இந்த கண்ணிவெடிகள் புதிதாக வைக்கப்பட்டவை' என்று குற்றஞ்சாட்டினர். உடனடியாக கம்போடியாவுக்கான தாய்லாந்து தூதரை திரும்பப் பெற்றதோடு, கம்போடிய தூதரையும் திருப்பி அனுப்பினர். கம்போடியாவும் அதையே செய்தது. கூடவே, புதிதாக கண்ணிவெடிகள் வைக்கப்பட்டதாக கூறிய குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்தது.

அடுத்து என்ன? — கம்போடியாவில் ஒற்றைக் கட்சி ஆட்சி நடக்கிறது. அதன் தலைவராக ஹுன் சென் 40 ஆண்டுகளாக இருந்தார். கடந்த 2023—ல் அவர் அவரது மகன் ஹுன் மானெட்டுக்கு அதிகாரத்தை ஒப்படைத்தார். ஆனாலும் ஹுன் மானெட் தந்தையின் புகழ் வெளிச்சத்தில் தான் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறார் என்ற விமர்சனம் பரவலாக இருக்கிறது. இந்நிலையில், எல்லைப் பிரச்சினை, நாட்டுப்பற்று ஆகியனவற்றை தூக்கிப் பிடிப்பதன் மூலம் மகனுக்கான அரசியல் முக்கியத்துவத்தை உயர்த்த முடியும் என்ற நம்பிக்கையில் ஹுன் சென் இதையெல்லாம் ஊக்குவிப்பதாகக் கூறப்படுகிறது.

இன்னொருபுறம், வரும் ஆகஸ்ட் 1—ம் தேதி முதல் தாய்லாந்தும், கம்போடியாவும் அமெரிக்காவின் 36% இறக்குமதி வரிக்கு ஆளாக இருக்கின்றன. அதன் மீதான விவாதங்கள், அரசியல் சர்ச்சைகளை திசை திருப்பவே இந்த புதிய மோதல் என்றும் கூறப்படுகிறது.

தாய்லாந்துக்கு ஏற்கெனவே உள்நாட்டு அரசியல் சிக்கல் இருக்கின்றது. தாய்லாந்து பிரதமராக இருந்த பீட்டோங்டார்ன் ஷினவத்ரா மீது கட்சிக்குள்ளேயே அதிருப்தி. எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க அவர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பது கட்சியினரின் புகார்.

பீட்டோங்டார்ன் ஷினவத்ரா

முன்னாள் பிரதமர் தக்‌ஷின் ஷினவத்ராவின் மகளான இவர், கம்போடியா முன்னாள் அதிபர் ஹுன் சென்னுடன் பேசிய தொலைபேசி உரையாடல் கசிந்தது, அவர் மீதான வெறுப்புக்கு மேலும் தூபம் போட்டது. அந்த கசிந்த உரையாடலில், ஹுன் சென்னை அவர் மாமா என்று அழைப்பதும், கூடவே எதுவாக இருந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன்




ஆசியான் கூட்டமைப்பின் தற்போதைய தலைவரான மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம், எல்லை விவகாரத்தில் தாய்லாந்து — கம்போடியா அமைதி காக்க வலியுறுத்தியுள்ளார். ஆனால், அதைத் தாண்டி எதுவும் ஆசியான் செய்துவிடாது. அதன் கொள்கைகள் அப்படி!

இந்நிலையில், இப்போதைய ஒரே வாய்ப்பு சீனாதான். சீனாவுக்கு மட்டுமே கம்போடியா, தாய்லாந்து நாடுகள் மீது சமமான செல்வாக்கு இருக்கிறது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். அது உண்மையென்றாலும் கூட, சீனா வர்த்தக ரீதியாக கம்போடியாவுடன் அதிக நெருக்கம் பாராட்டும் நாடு. அதனால், ஏற்கெனவே தாய்லாந்து,கம்போடியாவில் சீன ஆதிக்கம் மேலோங்கியிருப்பதாக கருதும் தாய்லாந்து அரசியல்வாதிகள் சீன தலையீட்டை விரும்பவில்லை.

என்று சொல்லியிருந்ததும் தாய்லாந்து அரசியலில் புயலைக் கிளப்பியது.

மேலும், தாய்லாந்து ராணுவத் தலைமை பற்றியும் அவர் விமர்சித்திருந்தது அம்பலமானது. தாய்லாந்து அரசியல் ஆதிக்கம் செலுத்தக் கூடியதாகவே அந்நாட்டு ராணுவ இருக்கும் நிலையில், அவரின் பேச்சு ராணுவத்தினரையும் ஆவேசமடைய வைத்துள்ளது. பழைய குடும்ப நட்புக்காக நாட்டின் நலனை அடகுவைத்துவிட்டார் என்ற விமர்சனங்கள் வலுக்க, பீடோங்டார்ன் ஷினவத்ராவை அந்நாட்டு நீதிமன்றம் இடைநீக்கம் செய்தது. அதனால் அவரது கட்சி பியூ தாய் தற்போது சிக்கலில் உள்ளது. இப்போது ராணுவம் சொல்வதற்கு கீழ்ப்படியும் நிலையில் தாய்லாந்து அரசு உள்ளது.

தீர்வு என்ன? — சர்ச்சைகள் நீளும் சூழலில் கம்போடியா ஏற்கெனவே சர்வதேச நீதிமன்றத்தில், தாய்லந்துடனான எல்லைப் பிரச்சினையை தீர்த்துவைக்கக் கோரியுள்ளது. ஆனால், தாய்லாந்து சர்வதேச நீதிமன்றத் தீர்ப்பை ஏற்பதற்கில்லை என்று ஏற்கெனவே கூறிவிட்டதால், இதனால் பலனொன்றும் இருக்கப் போவதில்லை.

தென்கிழக்கு ஆசிய நாடுகளை உள்ளடக்கிய

தாய்லாந்து காபந்து பிரதமர் ஃபும்தாம் வெச்சாயாச்சி, இரு நாடுகளுக்கும் இடையேயான மோதல் முடிவுக்குவந்தால் தான் பேச்சுவார்த்தையை தொடங்க முடியும் என்று பிடிவாதம் காட்டுகிறார். ஆனால், கம்போடிய பிரதமர் ஹுன் மானெட், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தலையிட்டு தாய்லாந்தின் அத்துமீறல் குறித்து அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்த வேண்டும் என்று கோரியுள்ளார்.

இந்நிலையில், தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தின் அமைதி, ஸ்திரத்தன்மையைப் பேண கம்போடியா — தாய்லாந்து எல்லைப் பிரச்சினை ஒரு முழு வீச்சு போராக உருவாகாமல் தடுக்கப்பட வேண்டும் என்ற வலியுறுத்தல்கள் எழத் தொடங்கியுள்ளன.

தாய்லாந்து — கம்போடியா நிபந்தனையற்ற போர் நிறுத்தத்துக்கு ஒப்புதல்: மலேசிய பிரதமர் தகவல்

தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகள் நிபந்தனையற்ற உடனடி போர்நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார். தாய்லாந்தின் தற்காலிகப் பிரதமர் பும்தம் வெச்சயாசாய்

மற்றும் கம்போடியாவின் பிரதமர் ஹுன் மானெட் ஆகியோர் இன்று மலேசியாவின் புத்ரஜெயாவில் உள்ள பிரதமர் அன்வரின் அதிகாரப்பூர்வ இல்லத்தில் போர்நிறுத்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். கம்போடியா மற்றும் தாய்லாந்து



தலைவர்களுடன் இணைந்து பேசிய மலேசிய பிரதமர் அன்வர், “கம்போடியா மற்றும் தாய்லாந்து இடையே மிகவும் நேர்மறையான முன்னேற்றத்தை காணும் வகையில் நல்ல முடிவுகளை நாங்கள் கண்டிருக்கிறோம்.” என்று அறிவித்தார்.

அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின் தலைவர்களுடனும் இணைந்து மோதலுக்கு அமைதியான தீர்வைக் காண மலேசியா நெருங்கிய தொடர்பில் உள்ளது என அன்வர் கூறினார். இன்று (ஜூலை 28) நள்ளிரவு அமலுக்கு வரும் வகையில் கம்போடியாவும் தாய்லாந்தும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அன்வர் தெரிவித்தார். இது இரு நாடுகளுக்கு இடையேயான பதற்றத்தைத் தணிப்பதற்கும், அமைதி மற்றும் பாதுகாப்பை மீட்டெடுப்பதற்குமான நடவடிக்கையில் முதல் படியாகும் என்றும் அன்வர் கூறினார்.


எல்லையில் ஏற்பட்ட கண்ணிவெடி தாக்குதலில் 5 தாய்லாந்து வீரர்கள் காயமடைந்ததைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையே மோதல் வெடித்தது. மோதல்களைத் தொடங்கியதற்காக இரு தரப்பினரும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டி வருகின்றனர். 5—வது நாளாக நீடிக்கும் இந்த போரில் இருதரப்பிலும் இதுவரை 35 பேர் உயிரிழந்தனர். இரு தரப்பிலும் 2,60,000—க்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்த்துள்ளனர். இரு நாடுகளும் தங்கள் தூதர்களை திரும்ப பெற்றதுடன், இரு நாடுகளுக்கு இடையிலான அனைத்து எல்லைகளும் மூடப்பட்டுள்ளன.

கம்போடியா பிரதமர் ஹூன் மானெட், தாய்லாந்து தற்காலிக பிரதமர் பும்தம் வெச்சயாசாய் ஆகியோருடன் மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் இன்று இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை நடத்தினார். சீனா, அமெரிக்க பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர். இதில், எந்த நிபந்தனையுமின்றி போரை நிறுத்த இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.முன்னதாக, அமெரிக்காவுடனான வர்த்தகம் பாதிக்கும் என எச்சரித்ததைத் தொடர்ந்து இரு நாடுகளும் போர் நிறுத்தத்தை ஒப்புக்கொண்டுள்ளதாக டிரம்ப் கூறியிருந்தார்.

இந்நிலையில் இன்று பேச்சுவார்த்தைக்குப் பின்னர் கம்போடியா பிரதமர் ஹூன் மானெட் கூறுகையில், “அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் அறிவுறுத்தலின்பேரில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. தாய்லாந்து, கம்போடியா இரு நாடுகளும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளன” என்று எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




# சொல்றாங்க... சொல்றாங்க...



இஸ்ரேல் போரை நிறுத்தாவிட்டால் பாலத்தீனம் தனி நாடாக அங்கீகரிக்கப்படும்

**கெய்ர் ஸ்டார்மர்**

(சொல்றதைக் கேட்க நல்லாத்தான் இருக்கு. ஆனா செயல்பாட்டுக்கு வருமா?)



"தன்னை மதிக்காத பாஜக கூட்டணியில் இருந்து ஓபிஎஸ் வெளியேற வேண்டும்."

**பண்ருட்டி ராமச்சந்திரன்**

(உங்களுக்குத் தெரிஞ்சது அவங்களுக்குத் தெரியாம போகுதே!..)



"ஒரு தந்தையாகப் பெருமை கொள்கிறேன் ரஹீமா"

**ஏ.ஆர்.ரஹ்மான்**

(மகள் தந்தைக்கு ஆற்றும் உதவிகளில் இந்தக் கடமையும் ஒன்று)



"பணம் சம்பாதிக்கத்தான் சினிமாவுக்கு வந்தேன்!"

**விஜய் சேதுபதி**

(இந்தத் துறையில் இருந்து இப்படி சொல்றதுக்கும் ஒரு நேர்மை வேணும்)

# கண் கெட்ட

### ட்ரம்ப் – பிரிக்ஸ் மோதல் !

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற 17வது பிரிக்ஸ் உச்சிமாநாடு, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் வரிகளை விமர்சித்து, ஈரான் மீதான அமெரிக்க—இஸ்ரேல் தாக்குதலைக் கண்டித்ததை அடுத்து, டிரம்ப்பிடமிருந்து கோபமான எதிர்வினையைத் தூண்டியது. பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா (தென்னாப்பிரிக்கா பின்னர் இணைந்தது) ஆகியவற்றைக் குறிக்கும் பொருளாதார சுருக்கமாகத் தொடங்கிய பிரிக்ஸ், உலகளாவிய தெற்கின் முக்கிய நிறுவனக் குரலாக உருவெடுத்துள்ளது .

கடந்த ஆண்டு, பிரிக்ஸ் ஐந்து புதிய உறுப்பினர்களைச் சேர்த்தது — எகிப்து, எத்தியோப்பியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஈரான் மற்றும் இந்தோனேசியா. உலகளாவிய தவறுகள் காரணமாக இந்த ஆண்டு உச்சிமாநாடு அதிக முக்கியத்துவம் பெற்றது. ஒரு உறுப்பு நாடான ஈரான் தாக்கப்பட்ட சில வாரங்களுக்குப் பிறகு இது நடந்தது. உச்சிமாநாட்டில், உறுப்பு நாடுகள், பெரும்பாலும் வெவ்வேறு வெளியுறவுக் கொள்கை திசைகளில் இழுத்து, திரு. டிரம்பின் வரி அச்சுறுத்தல்கள் மற்றும் ஈரான் மீதான தாக்குதல் ஆகிய இரண்டு விஷயங்களில் ஒற்றுமையைக் காட்டின. பிரிக்ஸ் நாடுகளின் மீது வரிகள் விதிக்கப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மீண்டும் எச்சரித்துள்ளார். இந்தக் குழு விரைவில் முடிவுக்கு வரும் என்றும் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசும்போது பிரிக்ஸ் நாடுகள் அமெரிக்க டாலரின் ஆதிக்கத்தைக் கைப்பற்ற முயற்சித்ததாகக் குற்றம்சாட்டிய டிரம்ப் கடினமான நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிவித்துள்ளார். எனினும் எந்த நாட்டின் பெயரையும் டிரம்ப் குறிப்பிடவில்லை. பிரிக்ஸ் அமைப்பின் முக்கிய உறுப்பினர்களான இந்தியா, ரஷ்யா மற்றும் சீனா இடையே முத்தரப்பு உறவுகளை மேம்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் வேளையில் டிரம்ப்பிடமிருந்து இந்த அச்சுறுத்தல் வந்துள்ளது. சமீபத்திய பிரிக்ஸ் உச்சிமாநாட்டிற்குப் பிறகு, இந்த கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகள் மீது வரிகள் அதிகரிக்கப்படும் என டிரம்ப் எச்சரித்திருந்தார். இந்தியா மற்றும் சீனா இடையேயான உறவுகளை இயல்புநிலைக்கு கொண்டு வர ரஷ்யா தொடர்ந்து முயற்சித்து வருகிறது, சீனாவும் அதற்கு நேர்மறையாக பதிலளித்துள்ளது.

சீனா, ரஷ்யா மற்றும் இந்தியா இடையேயான முத்தரப்பு ஒத்துழைப்பு இந்த மூன்று நாடுகளின் நலன்களை மட்டுமல்ல, இந்தப் பிராந்தியம் மற்றும் உலகத்தில் அமைதி, பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை பராமரிக்க உதவுகிறது என சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் லின் ஜியான். முத்தரப்பு ஒத்துழைப்பை முன்னெடுத்துச் செல்ல ரஷ்யா





# பிறகு


## ஆல்மண்ட் சியா & டியர்பெயில் ஜோர்டான்

மற்றும் இந்தியா உடன் பேச்சுவார்த்தை நடத்த சீனா தயாராக இருப்பதாகவும் லின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா—இந்தியா—சீனா (ஆர்ஐசி) அமைப்பை மீண்டும் தொடங்குவது தொடர்பாக இந்தியா மற்றும் சீனா உடன் ரஷ்யா பேச்சுவார்த்தையில் உள்ளது என அந்நாட்டின் துணை வெளியுறவு அமைச்சர் ஆண்ட்ரெய் ருடென்கோ முன்னர் தெரிவித்திருந்தார். இதே கருத்து தொடர்பாக தான் சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் லின் ஜியானும் பேசியிருந்தார்.

“டிரம்ப் ஏன் பிரிக்ஸ் அமைப்பைத் தாக்குகிறார் ? டிரம்பின் எரிச்சல், 2023 இல் தென்னாப்பிரிக்காவில் மற்றும் 2024 இல் ரஷ்யாவில் பிரிக்ஸ் பிரகடனங்களிலிருந்து தோன்றியதாகத் தெரிகிறது, அங்கு உறுப்பினர்கள் உள்ளூர் நாணயங்கள் மற்றும் பிற வழிமுறைகளைப் பயன்படுத்தி பிரிக்ஸ் நாடுகளுக்குள் வர்த்தகம் மற்றும் முதலீட்டை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்ட பிரிக்ஸ் எல்லை தாண்டிய கொடுப்பனவு முயற்சியைப் பற்றி விவாதித்தனர். ரஷ்யா மீதான மேற்கத்திய தடைகள் உலகளாவிய தெற்கில் வர்த்தக பங்காளிகளுக்கு ஏற்படுத்திய பிரச்சினைகள் காரணமாக இந்த முயற்சி வேகத்தை அதிகரித்தது.”

பிரிக்ஸ் அமெரிக்க எதிர்ப்பு என்ற டிரம்பின் விமர்சனத்தை இந்தியா நிராகரித்துள்ளது. மார்ச் 2025 இல், வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், அமெரிக்க டாலரை மாற்றும் திட்டம் இந்தியாவிடம் இல்லை என்று கூறியிருந்தார். கட்டண தகராறுகளைத் தீர்க்க டிரம்ப் நிர்வாகத்துடன் வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதில்






அரசாங்கத்தின் கவனம் இப்போது உள்ளது. ஆனால் அதே நேரத்தில், இந்தியா பிரிக்ஸுக்கு உறுதியளித்துள்ளது, இது இப்போது உலக மக்கள்தொகையில் பாதி, உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 40% மற்றும் உலக வர்த்தகத்தில் கால் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. “அனைத்து சவால்கள் இருந்தபோதிலும், ரியோ பிரகடனம் பல்வேறு விஷயங்களில் பிரிக்ஸ் உறுப்பினர்களுக்குள் அடிப்படை ஒற்றுமை மற்றும் ஒருமித்த கருத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது”.

டாலர் மற்றும் பிரிக்ஸ் பற்றி டிரம்ப் என்ன கூறினார்?

வெள்ளை மாளிகையில் மசோதாவை ஒன்றைப் பற்றி பேசிய டிரம்ப் அதனை புகழ்ந்ததோடு, இந்த மசோதா அமெரிக்கா டாலரை வலுப்படுத்தும் என்று தெரிவித்திருந்தார். அப்போது பிரிக்ஸ் பற்றி குறிப்பிட்ட டிரம்ப், “பிரிக்ஸ் என்று அழைக்கப்படுகிற சிறிய குழு ஒன்று உள்ளது, அது விரைவில் முடிவுக்கு வர உள்ளது. அது அமெரிக்க டாலர், அதன் ஆதிக்கம் மற்றும் தரங்களைக் கைப்பற்ற முயற்சித்தது. பிரிக்ஸ் தற்போதும் இதைத்தான் விரும்புகிறது.” என்றார்.

“பிரிக்ஸ் குழுவில் உள்ள அனைத்து நாடுகள் மீது 10 சதவிகிதம் வரி விதிக்கப்போவதாக நான் கூறினேன். அதற்கு அடுத்த நாள் அவர்கள் சந்திப்பு நடைபெற இருந்தது, ஆனால் ஒருவருமே வரவில்லை.” என டிரம்ப் நகைச்சுவையாக தெரிவித்திருந்தார். டாலரை வலுப்படுத்துவது பற்றியும் அதனை உலகளாவிய நாணயமாக வைத்திருப்பது பற்றியும் பேசிய டிரம்ப், “நாங்கள் டாலரை வீழ்ச்சியடைய விடமாட்டோம். டாலர் உலகளாவிய நாணயம் என்கிற நிலையை நாம் இழந்தால். அது ஒரு உலகப் போரை இழப்பதற்குச் சமம்“ எனக் கூறினார்.

மேலும் அவர், “நான் இந்த பிரிக்ஸ் நாடுகள் குழுவைப் பற்றி கேள்விப்பட்டபோது அவர்கள் மீது கடினமான நிலைப்பாட்டை எடுத்தேன். இந்த நாடுகள் எப்போதாவது ஒன்றாக வந்தால், இந்தக் குழு முடிந்துவிடும்,” எனத் தெரிவித்தார். 17வது பிரிக்ஸ் உச்சிமாநாடு பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் ஜூலை 6 மற்றும் 7 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்த சந்திப்பிற்குப் பிறகு டிரம்ப் கூடுதலாக 10 சதவிகிதம் வரி விதிக்கப்படும் என எச்சரித்திருந்தார்.

“பிரிக்ஸின் அமெரிக்க எதிர்ப்பு கொள்கைகளுடன் தங்களை தொடர்புபடுத்திக் கொள்ளும் எந்த நாடுகளின் மீதும் 10 சதவிகிதம் கூடுதல் வரி விதிக்கப்படும். இந்த கொள்கையில் எந்த விதிவிலக்கும் இருக்காது” என ஜூலை 7ஆம் தேதியிட்ட சமூக ஊடகப் பதிவில் டிரம்ப் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் வியாழன் ஜூலை 17, வெள்ளை மாளிகையில் டிரம்ப் ஆற்றிய உரையிலும் இந்த அச்சுறுத்தலைக் குறிப்பிட்டிருந்தார்.

பிரிக்ஸின் நிகழ்ச்சி நிரலில் என்ன இருந்தது?

பிரிக்ஸ் ரியோ பிரகடனத்தில் உலகளாவிய நிர்வாகம் மற்றும் சர்வதேச நிலைத்தன்மையை மேம்படுத்துவது தொடர்பான பேச்சுக்கள் இருந்தன. இதோடு ஒருதலைபட்சமான வரிகளும் விவாதிக்கப்பட்டன.

எனினும் அறிக்கையில் அமெரிக்கா பற்றிய குறிப்பு இல்லை. வர்த்தகப் போக்கை சிதைத்த உலக வர்த்தக நிறுவனத்தின் விதிகளை மீறும் ஒருதலைபட்சமான வரி மற்றும் வரியில்லா நடவடிக்கைகளின் அதிகரித்த பயன்பாடு பற்றி பிரிக்ஸ் நாடுகள் கவலை கொள்வதாக ரியோ பிரகடனம் தெரிவிக்கிறது. இவை போக, ஒருதலைபட்சமான

அச்சுறுத்தல் நடவடிக்கைகளைத் திணிப்பது சர்வதேச சட்ட மீறல் மற்றும் ஒருதலைபட்சமான பொருளாதார தடைகள் தீங்கான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அந்த பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.உலகவர்த்தகநிறுவனத்தின் விதிகளின் படி வர்த்தகம் மேற்கொள்ள வேண்டும் என்றும் பலதரப்பு வர்த்தக அமைப்புகள் பற்றியும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




டிரம்ப்பின் அச்சுறுத்தலும் ஆர்ஜசியை வலுப்படுத்தும் முயற்சிகளும்

2020ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் சீனா இடையேயான மோதலுக்குப் பிறகு இரு நாடுகளுக்கு இடையேயான உறவுகள் மோசமடைந்தது. அதன்பிறகு ஆர்ஜசி தொடர்பாக எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. ஆர்ஜசி அமைப்பை மீண்டும் தொடங்குவது பற்றி வெளியுறவு அமைச்சகம் பரிசீலிப்பதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்ட நிலையில் இது தொடர்பாக எந்த முடிவும் “பரஸ்பரம் சவுகரியமான முறையில்” மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் ஐந்து ஆண்டுகளில் முதல் முறையாக ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டத்தில் கலந்து கொள்ள டியான்ஜினுக்குச் சென்றபோது ஆர்ஜசி பற்றி விவாதிக்கப்பட்டது.

“ஒருதலைபட்சவாதம், பாதுகாப்புவாதம் மற்றும் அதிகார அரசியல் மற்றும் அச்சுறுத்தும் போக்கு உலகிற்கு தீவிரமான சவால்களாக உள்ளன” என சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி கடந்த ஜூலை 14 அன்று அமைச்சர் ஜெய்சங்கர் உடனான கூட்டத்தில் தெரிவித்தார். எனவே இரு நாடுகளும் “நல்லிணக்கத்துடன் வாழ்ந்து இருவரும் வெற்றி பெற உதவுவதற்கு” வழிகளை கண்டுபிடிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா—அமெரிக்கா உறவில் சீனாவின் கருத்து என்ன?

ரஷ்யாவின் எண்ணெய்யை அதிகமாக வாங்கும் நாடுகளில் இந்தியாவும் சீனாவும் ஒன்று. இந்த இரு நாடுகளும் டிரம்ப்பின் 100 சதவிகித கூடுதல் வரி அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளன. இதன் மூலம் ரஷ்யாவை ஒரு ஒப்பந்தத்திற்கு சம்மதிக்க அழுத்தம் கொடுத்து யுக்ரேன் போரை 50 நாட்களுக்குள் முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா நினைக்கிறது. டிரம்ப்பின் இரண்டாம் ஆட்சிக் காலத்தில் இந்தியா—அமெரிக்கா உறவுகளில் ஏற்பட்ட கசப்புத்தன்மை பற்றி சீன வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஜூலை 13 அன்று சீன செய்தி ஊடகமான குவான்சாவில் எழுதியுள்ள கட்டுரையில் ஃபுடான் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜீ சாவோ தற்போது அமெரிக்கா மற்றும் இந்தியா இடையே நடைபெற்று வரும் வர்த்தக மோதல் பற்றி குறிப்பிட்டிருந்தார்.அமெரிக்கா, இந்தியாவைக் கட்டுப்படுத்த பாகிஸ்தானைப் பயன்படுத்தும் உத்தியை எடுத்து இரு நாடுகளுக்கும் இடையே “வற்புறுத்தப்பட்ட இணக்கத்தை” ஊக்குவிக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

சீனாவின் முன்னணி விமர்சகரான பேராசிரியர் ஜின் கன்ரோங் இது போன்ற கருத்தை தெரிவித்துள்ளார். “இந்தியா—அமெரிக்க உறவுகள் மோசமடைந்து வரும் நிலையில் அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் இடையேயான உறவுகள் சமீபத்தில் மேம்பட்டுள்ளன” என்றார். ஜூன் மாதம் கனடாவில் ஜி—7 உச்சிமாநாட்டில்

கலந்து கொண்டபோது பிரதமர் நரேந்திர மோதி டிரம்பை சந்திக்க தவறினார். அதன் பிறகு டிரம்ப் பாகிஸ்தான் ராணுவ தளபதி ஃபீல்ட் மார்ஷல் அசிம் முனிரை வெள்ளை மாளிகையில் வைத்து சந்தித்ததால் இந்தியா மேலும் ஏமாற்றமடைந்தது.




பிரிக்ஸ் நாடுகள் டாலருக்கு மாற்றைத் தேடுகின்றவா?

சீனா மற்றும் ரஷ்யா உடனான அமெரிக்காவின் உறவுகள் பதற்றமாக உள்ளன. யுக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்குப் பிறகு சீனாவும் ரஷ்யாவும் நெருக்கமாகியுள்ளதாக வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.இருநாடுகளும் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தும் உலக ஒழுங்கை நிராகரிப்பது பற்றியும் பல்முனை உலகை உருவாக்குவது பற்றியும் பேசுகின்றன உலகில் நீண்ட காலமாக அமெரிக்காவின் நாணயமான டாலரின் ஆதிக்கத்திற்கு சவால்விட இருநாடுகளும் முயற்சி செய்வதற்கு இது தான் காரணம்

2023ஆம் ஆண்டு சீன அதிபர் ஜீ ஜின்பிங் தான் ஆசியா, ஆப்ரிக்கா மற்றும் தென் அமெரிக்க நாடுகளுடன் டாலருக்குப் பதிலாக சீன நாணயமான யுவானில் வர்த்தகம் செய்ய விரும்புவதாக தெரிவித்திருந்தார். சீனா ஏற்கெனவே ரஷ்யாவுடன் யுவானில் தான் வர்த்தகம் செய்து வருகிறது. ரஷ்யாவும் அதே தான் செய்து வருகிறது, ஏனென்றால் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் அதன் மீது கடுமையான பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் மற்றும் அதன் கூட்டாளிகள் பல ரஷ்ய வங்கிகளை முக்கியமான சர்வதேச பேமெண்ட் அமைப்பான ஸ்விஃப்ட்டில் இருந்து விலக்கியுள்ளன. “ஸ்விஃப்ட் பேங்கின் இண்டர்நேஷனல் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் மேற்குலக நாடுகளால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. எந்த நாட்டின் மீதும் பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டால் அவை இந்த அமைப்பிலிருந்து விலக்கி வைக்கப்படும்“ என்றார். “ரஷ்யா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடைகளைப் பார்க்கையில், தங்களுடைய வங்கிகளும் எதிர்காலத்தில் முடக்கப்படலாம் என பிரிக்ஸ் நாடுகள் அச்சம் கொள்கின்றன. இதனால் அவை ஒரு நிதி வலையமைப்பை உருவாக்க முயற்சிக்கின்றன” எனத் தெரிவித்தார்.


நிஜமாகவே டாலரின் மாற்றுக்கான தேடல் உள்ளதா?

இந்தக் கேள்விக்குப் பதிலளித்த ரபிந்திர சச்தேவ், “பிரிக்ஸ் நாடுகள் அத்தகைய ஒன்றை திட்டமிட்டு வருகின்றன, ஆனால் அது கூடிய விரைவில் நடக்கப்போவதில்லை. எனினும் சில முன்னெடுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. பிரேசில் உடன் யுவானில் வர்த்தகம் செய்கிறது சீனா. சவுதி அரேபியா உடன் நாணயம் தொடர்பான ஒப்பந்தம் ஒன்றை கையெழுத்திட்டுள்ளது சீனா, இந்தியா ரஷ்யாவுடன் இதே போன்ற ஒப்பந்தம் ஒன்றை கையெழுத்திட்டுள்ளது. இத்தகைய போக்குகள் தொடங்கிவிட்டன” எனத் தெரிவித்தார். ஆனால் டாலருக்கு எதிராக வேறு நாணயத்தை நிறுத்துவது என்பது அசாத்தியமானது என ரபிந்திர சச்தேவ் நம்புகிறார். வளரும் நாடுகள் கூட்டமைப்பான ஙிஸிமிசிஷி—ல் உள்ள நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது 10% கூடுதல் வரி விதிப்பதாக மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.இந்த குழு ஏதேனும் திட்டத்துடன் மீண்டும் உருவானால் உடனடியாக கலைக்கப்படும் என்றும் பேசியிருக்கிறார்.

அமெரிக்க எதிர்ப்பு கொள்கை!

“நான் இந்த பிரிக்ஸ் பற்றி கேட்கும்போது, அடிப்படையில் ஆறு நாடுகள், அவர்களை மிகவும் கடுமையாக தாக்கினேன். அவர்க உண்மையில் அர்த்தமுள்ள வகையில் உருவானால், அது விரைவில் முடிவடையும்“ என நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடாமல் எச்சரித்தார் ட்ரம்ப். “நம்முடன் யாரும் விளையாட அனுமதிக்கக் கூடாது” என்றார். பிரிக்ஸ் அமைப்பின் அமெரிக்க—எதிர்ப்பு கொள்கைகளுடன் இணையும் எந்தவொரு நாட்டுக்கும் ஜுலை 6—ம் தேதி அறிவித்த புதிய வரி பொருந்தும் என அறிவித்தார் ட்ரம்ப்.

உலகளாவிய முக்கிய பொருளாதார மன்றங்களாக இருக்கும் ஜி7, ஜி20 போன்றவை நாடுகளுக்கு இடையிலான முரண்களால் பாதிக்கப்பட்டுள்ளது. மற்றும் அமெரிக்க அதிபரின் ‘அமெரிக்கா முதலில்’




கொள்கையால் சீர்குலைந்து வருகிறது. இந்த நிலையில், பலதரப்பு ராஜாந்திர நடவடிக்கைகளை விரும்பும் நாடுகளுக்கான புகலிடமாகத் தன்னைக் காட்டிக்கொள்கிறது பிரிக்ஸ் அமைப்பு. ட்ரம்ப் பிரிக்ஸ் அமைப்பு உலகின் இருப்பு நாணயமாக டாலரின் இடத்தை நீக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்குகிறது எனத் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறார்.

1. உலகளாவிய தெற்கு | விளிம்புகளிலிருந்து மையம் வரை—ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற 17வது பிரிக்ஸ் உச்சிமாநாடு, அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளுடனும் பல்வேறு உறவுகளை ஏற்படுத்திக் கொண்டதுடன், உலகளாவிய மோதல்களையும் சந்தித்தது. இன்றைய உலகில் தெற்கு—தெற்கு ஒத்துழைப்பு என்ற யோசனை எதிர்கொள்ளும் வாக்குறுதிகள் மற்றும் சவால்கள் இரண்டின் குறிப்பிடத்தக்க பிரதிபலிப்பை இது வழங்கியது என்று ஸ்ரீனிவாசன் ரமணி எழுதுகிறார்.

2. பாரசீகப் புதிரைத் தீர்க்க இஸ்ரேல் தவறிவிட்டது—12 நாள் மோதல் ஈரானின் அணுசக்தி திறன்களை அழிக்கவில்லை; இது இன்னும் முடிவடையாத ஒரு போர் என்று ஸ்டான்லி ஜானி எழுதுகிறார்.

3. அதிகரித்து வரும் சீனா—அமெரிக்கப் போட்டியில் புவிசார் அரசியல் முக்கிய காரணியாக அரிய பூமிகள் வெளிப்படுகின்றன.

உலகளாவிய அரிய மண் விநியோகச் சங்கிலியில் சீனா ஆதிக்கம் செலுத்தி வருவதாலும், அதிகரித்து வரும் வர்த்தக பதட்டங்களுக்கு மத்தியில் ஏற்றுமதிகள் மீதான பிடியை இறுக்குவதாலும், அமெரிக்கா இப்போது அதன் மூலோபாய சார்புநிலையைக் குறைக்க மாற்று ஆதாரங்களைத் தீவிரமாகத் தேடி வருவதாக ஸ்மிருதி எஸ் எழுதுகிறார்.

4. பிரான்செஸ்கா அல்பானீஸ் | தூதரைச் சுடுதல்—0அமெரிக்காவால் அனுமதிக்கப்பட்ட ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர், ‘அனைத்து கண்களும் காசாவை நோக்கி இருக்க வேண்டும், அங்கு குழந்தைகள் தங்கள் தாய்மார்களின் கைகளில் பட்டினியால் இறந்து கொண்டிருக்கிறார்கள்’ என்று ஆதித்ய நாராயண் எழுதுகிறார்.

5. க்ரோக் | தொந்தரவான ஏற்றம்—எலோன் மஸ்க் கட்டுப்பாட்டில் உள்ள சாட்பாட், அடால்ஃப் ஹிட்லரைப் புகழ்ந்தும், யூத மக்கள் குறித்த சர்ச்சைக்குரிய கருத்துக்களுடன் ஒரு சர்ச்சையைத் தொடங்கியது

ஆனால் பிரிக்ஸ், தாங்கள் அமெரிக்கா எதிர்ப்பாளர்கள் இல்லை எனக் கூறிவருகிறது.

பிரிக்ஸ் நாடுகள் இடையே ஒரு பொதுவான கரன்சியை பயன்படுத்தும் முயற்சிகளைக் கடந்த பிப்ரவரி மாதம் பிரேசில் கைவிட்டது. அதைத்தொடர்ந்து உள்ளூர் நாணயங்களில் நிதிப்பரிவர்த்தனைகளை எளிதாக்கவும், வர்த்தகங்களுக்கு உதவும் வகையிலும் ‘பிரிக்ஸ் பே’ என்ற எல்லை தாண்டிய கட்டண முறையை உருவாக்க அந்த அமைப்பு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. **BRICS** பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளைக் கடந்து தன்னை விரிவுபடுத்தியிருக்கிறது. கடந்த ஆண்டு ஈரான் மற்றும் இந்தோனேசியா நாடுகள் இதில் இணைந்தன. பிரேசிலில் கடந்த ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் பிரிக்ஸ் நாடுகளின் தலைவர்கள் அமெரிக்காவின் இராணுவ மற்றும் வர்த்தக கொள்கைகளை மறைமுகமாக விமர்சித்தனர்.

பிரிக்ஸ் நாடுகளில் பிரேசிலை மட்டும் குறிவைத்து ட்ரம்ப் 50% வரி விதித்துள்ளார். இது ஆகஸ்ட் மாதம் நடைமுறைக்கு வரும். மேலும் அமெரிக்கா நியாயமற்றதாகக் கருதும் பிரேசிலின் வர்த்தக கொள்கைகள் மீது விசாரணை நடத்த ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்




## தமிழரின் தொன்மையை மறைக்க முயற்சி!

**கீ**ழடி அகழாய்வு முடிவுகளை அங்கீகரிக்க அறிவியல் ரீதியான தரவுகள் தேவை என்று மத்திய அரசின் கலாசார மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார். மேலும், "கீழடி அகழாய்வு குறித்து அளிக்கப்பட்டுள்ள அறிக்கைகள் அறிவியல் பூர்வமானவை அல்ல; அவற்றுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு முன்பு மேலும் பல ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். கூடுதல் தகவல்கள், சான்றுகள், கூடுதல் அறிவியல்பூர்வமான ஆய்வுகள் தேவைப்படுகின்றன' என்றும் அவர் கூறியுள்ளார்.

கீழடியில் 2014— 2015 மற்றும் 2015— 2016 ஆகிய ஆண்டுகளில் இந்தியத் தொல்லியல் துறை அதிகாரியான முனைவர் அமர்நாத் இராமகிருட்டிணன் தலைமையில் வைகையாற்றின் தோற்றுவாயிலிருந்து அது கடலில் கலக்கும் இடம்வரை இருகரைகள் நெடுகிலும் ஆய்வு நடத்தப்பட்டு 293 தொல்லியல் ஆய்வு சுவடுகள் கண்டறியப்பட்டன. இவற்றில் மதுரை அருகே கீழடி என்ற இடத்தைத் தேர்ந்தெடுத்து முதலில் தொல்லியல் ஆய்வு நடத்தப்பட்டது. இதன்மூலம் 5,800—க்கும் மேற்பட்ட தொல்பொருள்கள் கண்டறியப்பட்டன.

முதன்முதலாக செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடங்களின் சுவடுகள் கண்டறியப்பட்டன.



ஒடுகள், உறைக்கிணறுகள், கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்புகள் அடங்கிய ஏராளமான பானை ஓடுகளும் கண்டறியப்பட்டன. அதில் ஒரு பானை ஓட்டில் மீன் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. பாண்டியரின் சின்னமான மீன் சின்னம் கிடைத்ததால் இது பண்டைய மதுரையாக இருந்திருக்கலாம் என்பது




பழ. நெடுமாறன்

தெளிவாகிறது.

மேலும், அங்கு கண்டறியப்பட்ட பழம்பொருள்களின் மூலம் கீழடி நாகரிகம் ஒரு நகர்ப்புற நாகரிகமே என்பது நிறுவப்பட்டுள்ளது. இதன் காலம் கி.மு. 6—ஆம் நூற்றாண்டு என்பதும் தமிழகத்தின் தொல்லியல் ஆய்வு வரலாற்றில் இது ஒரு மாபெரும் கண்டுபிடிப்பாகும் என்பதும் வரலாற்றுபூர்வமான உண்மைகளாகும்.

1926—ஆம் ஆண்டில் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தின்போது சிந்து மாநிலத்தில் சர் ஜான் மார்ஷல் என்ற தொல்லியல் அதிகாரி நடத்திய அகழாய்வில் சிந்துவெளி நாகரிகம் கண்டறியப்பட்டது. இந்திய வரலாற்றில் ஆரியர் இந்தியாவில் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே மிகத் தொன்மையான நாகரிகம் இது என்பதை உலகம் உணர்ந்தது. இயற்கை காரணங்களினால் சிந்துவெளி நாகரிகம் அழிந்து 1,000 ஆண்டுகளுக்குப் பின்னரே ஆரியர்கள் இந்தியாவுக்குள் அடியெடுத்து வைத்தனர் என்பதையும் உலகம் உணர்ந்தது.

சிந்துவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்ட 88 ஆண்டுகளுக்குப் பின்னர் கண்டறியப்பட்ட மிகத் தொன்மையான நாகரிகம் கீழடி வைகைக்கரை நாகரிகமே என்பது நிலைநாட்டப்பட்டது. சிந்து சமவெளி அகழாய்வில் குதிரையின் எலும்பு கிடைக்கவில்லை. அதைப்போலவே கீழடியிலும் குதிரை எலும்பு கிடைக்கவில்லை. எனவே, இந்த இரு நாகரிகங்களும் ஆரியர் வருகைக்கு முற்பட்ட நாகரிகங்களாகும்.

இதற்கான தரவுகளைத் தொகுத்து ஆராய்ந்ததுடன், அங்கு கிடைத்த 4,000—த்துக்கும் மேற்பட்ட தொல்பொருள்களை மிகப் பாதுகாப்புடன் வைத்து, அவற்றில் விலங்குகளின்



எலும்புகளை புணேவில் உள்ள டெக்கான் கல்லூரி அகழாய்வு பரிசோதனைக்கூடத்துக்கு அனுப்பி அறிவியல்பூர்வமாக ஆராயப்பட்டு அறிக்கை அளித்துள்ளனர். பசு, காளை, பன்றி, மான் போன்ற பல்வேறு விலங்கினங்களின் எலும்புகள் இவை என அந்த பரிசோதனைக்கூடம் அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.

மேலும், அங்கு கிடைத்த பானை ஓடுகளிலும், தங்கக் கட்டிகளிலும் பொறிக்கப்பட்டிருந்த பிராமி தமிழ் எழுத்துகளின் மூலம் அவை கி.மு. 2—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பது கண்டறியப்பட்டது. தமிழ் பிராமி எழுத்து தமிழ்நாட்டில் தோன்றி இந்தியாவின் மற்ற பகுதிகளுக்குச் சென்றிருக்க வேண்டுமெனச் சிந்துவெளி அறிஞரான மறைந்த ஐராவதம் மகாதேவன் ஏற்கெனவே கூறியுள்ளார். ஏனெனில், தமிழகத்தில் மட்டும்தான் எங்கு தோண்டினாலும் பானை ஓடுகளில் தமிழ் பிராமி எழுத்துகளைப் பார்க்க முடியுமே தவிர, இந்தியாவில் வேறெங்கும் இதுபோன்ற எழுத்து முறையைப் பார்க்க முடியாது.




புதுச்சேரியில் உள்ள "பிரெஞ்சு பேலினாலஜி மற்றும் பேலியோஈகாலஜி பரிசோதனைக்கூடத்தில் பணியாற்றிவரும் அறிவியல் அறிஞர்களால் நன்கு ஆராயப்பட்டு அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல அமெரிக்காவில் உள்ள "பீட்டா அனலிட்டிக்' மையத்துக்கு சில பொருள்கள் இந்திய அரசினால் அனுப்பிவைக்கப்பட்டு அந்த மையம் "ரிப்போர்ட் ஆஃப் ரேடியோகார்பன் டேட்டிங் அனலைஸிஸ்' என்ற ஆய்வறிக்கையை அளித்துள்ளது.

இந்தியாவில் புணே, புதுச்சேரி ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் தரம்வாய்ந்ததும், இந்திய அரசினால் ஒப்புக்கொள்ளப்பட்டதுமான ஆய்வு மையங்களும், அமெரிக்காவில் உள்ள ஆய்வு மையமும் கீழடியில் கிடைத்த பழம்பொருள்களை ஆராய்ந்து கி.மு. 6—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனத் தெளிவான அறிக்கையை அளித்துள்ளன.

அசோகர் காலத்தில் அவர் வெளியிட்ட பெரிய சாசனங்களை நாம் பார்க்கலாம். அரசரின் சாசனம் யார் வேண்டுமானாலும் எழுதிக் கொடுத்து யார் வேண்டுமானாலும் வெளியிடலாம். ஆனால், ஒரு பானையில் ஒரு பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது என்றால், எளிய மாந்தன் ஒருவன் தன்னுடைய பெயரைப் பொறித்துவைக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றுள்ளான் என்பது தெரிவதுடன், அந்தக் காலத்தில் வாழ்ந்த சமுதாயம் கல்வி அறிவுமிக்க சமுதாயமாக இருந்தது என்பதை இந்த ஆதாரம் விளக்குகிறது.


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा



எனக் கருதப்பட்டதை கி . மு . 5 — ஆம் நூற்றாண்டு என அவர் நிறுவினார்.

தமிழ் பிராமி எழுத்துமுறை தொல்தமிழேயாகும். இது வடமொழி பிராமி அல்ல என்று முதன்முதலில் எழுத்தாய்வுக்கான விதையை கே.வி. சுப்பிரமணிய ஐயர் ஊன்றினார் என்பது நினைவுகூரத்தக்கது.

வட இந்தியாவில் நடைபெற்ற எந்த தொல்லியல் ஆய்விலும் இதுபோன்ற பானை ஓடுகளிலோ அல்லது மற்ற பொருள்களிலோ எழுத்துப் பொறிப்புகள் எதுவும் கிடைத்ததில்லை. அவை தமிழ்நாட்டில் மட்டும்தான் கிடைக்கின்றன. அதனால்தான் தொல்லியல் அறிஞர்கள் ஐராவதம் மகாதேவன், பேராசிரியர் இராசன் ஆகியோர் நம் பிராமி எழுத்துகளைப் பொறுமையாக ஆய்வு செய்ய வேண்டும் என்று கூறினர்.

எழுத்து என்பது உடனடியாக உருவாகிவிடாது. முதலில் குறியீடுகள் மக்களால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். பிறகு அந்த குறியீடுகளே எழுத்தாக மாற்றம் பெற்றிருக்க வேண்டும். கீழடியின் நடுப்பகுதியில் குறியீடுகளும், மேற்பகுதிக்கு வரும்போது எழுத்துகளும் கிடைத்துள்ளன.

புதுவை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனைவர் கே. இராசன், கொடுமணல், பொருந்தல் ஆகிய இடங்களில் மேற்கொண்ட ஆய்வுகள் தமிழகத் தொல்லியல் ஆய்வில் மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்தின. அசோகர் பிராமிக்குப் பின் தோன்றிய எழுத்தமைப்பே தமிழி என்னும் தமிழ் பிராமி எழுத்தாகும் என்ற கருதுகோளை அவருடைய ஆய்வு தகர்த்தது.

பொருந்தலில் பானை ஓட்டுக் குறியீடுகளையும் தொல்தமிழ் எழுத்துகளையும் அவர் கண்டறிந்தார். அத்துடன் நெல்மணிகள் இருந்த பானையில் எழுத்துப் பொறிப்பு இருந்ததையும் கண்டறிந்து அந்த நெல்மணிகளைக் கனிம பகுப்பாய்வுக்கு அனுப்பி தமிழ் எழுத்தின் தொன்மை மேலும் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை நிறுவினார். அதாவது கி.மு.3—ஆம் நூற்றாண்டு

பாண்டியர்களின் சின்னமான மீன் சின்னம் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் இங்கே கிடைத்துள்ளதால் இதுதான் பண்டை மதுரையாக இருக்கும் என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. கீழடியின் கால அளவைப் பார்த்தால் கி.மு.500 முதல் 10—ஆம் நூற்றாண்டு வரை இங்கு மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கின்றன.

கீழடியில் அகழாய்வு தொடக்கக் கட்டத்தில் கிடைத்த சான்றாதாரங்களை அடிப்படையாக வைத்து ஆய்வுக் குழுத் தலைவரான அமர்நாத் இராமகிருட்டிணன் இடைக்கால அறிக்கை ஒன்றைத் தயாரித்து இந்தியத் தொல்லியல் ஆய்வு துறைக்கு அனுப்பினார். அது கிடைத்தவுடனேயே சில நாள்களில் அவரை அசாம் மாநிலத்துக்கு இடமாற்றம் செய்தது இந்திய அரசு.

ஆய்வுக் குழுத் தலைவரை மேலும் தொடர்ந்து ஆய்வுகள் நடத்துவதற்கு அனுமதித்தால்தானே



அமைச்சர் எதிர்பார்க்கும் முடிவுகள் கிடைக்கும். ஆக, கீழடி ஆய்வு குறித்த உண்மைகள் வெளிவரக் கூடாது என்ற நோக்கத்துடனேயே இந்திய அரசு செயல்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது.

இதற்கு முன்பாக ஆதிச்சநல்லூர் பகுதியில் அகழாய்வு நடத்தப்பட்டபோது, அங்கு கிடைத்த முதுமக்கள் தாழியில் மனித எலும்புக்கூடு ஒன்று முழுமையாகக் கிடைத்தது. அதை ஆய்வுக்காக மைசூருக்கு எடுத்துச் சென்றனர். அதன் முடிவு இன்றுவரை வெளியிடப்படவில்லை.

கி.பி. 2004—2005—ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூரில் பி. சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற அகழாய்வு குறித்து அவர் அரசுக்கு அனுப்பிய அறிக்கையையும் இன்றுவரை இந்திய அரசு வெளியிடாமல் மறைத்துள்ளது.



இது குறித்து சென்னை உயர்நீதிமன்ற தலையீட்டின் பேரில் இரண்டு பொருள்கள் பீட்டா ஆய்வகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு அதன் அடிப்படையில் அந்தப் பொருள்களின் காலம் கி.மு. 905 என்பது நிறுவப்பட்டது. ஆனால், சத்தியமூர்த்தியின் அறிக்கை இன்னமும் வெளியிடப்படவில்லை.

தமிழர்களின் தொன்மை வெளி உலகுக்கு தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகவே தமிழ்நாட்டில் நடைபெற்ற அகழாய்வு பற்றிய உண்மைகள் தொடர்ந்து மறைக்கப்படுகின்றன. நல்லவேளையாக கீழடியில் நடைபெற்ற அகழாய்வைத் தொடர்ந்து அங்கு கிடைத்த பொருள்களின் காலம் கி.மு.6—ஆம் நூற்றாண்டு என்பதை தமிழக அரசின் தொல்லியல் ஆய்வுத் துறை நிலைநாட்டியுள்ளது.

இந்த ஆய்வு இன்னமும் தொடர வேண்டும். தொடர்ந்தால் இந்தியாவின் ஆதிகுடிகள் தமிழர்களே என்ற உண்மை நிலைநிறுத்தப்படும்.

# அராஜக

### பிரம்மபுத்திரா நதியில் மிகப்பெரிய அணைக்கட்டும் சீனா:

பிரம்மபுத்திரா நதியில் மிகப்பெரிய அணைக்கட்டும் பணியை தொடங்கி இந்தியாவுக்கு அதிர்ச்சி கொடுத்துள்ளது சீனா. இந்த அணை கட்டப்பட்டால் இந்தியாவுக்கு என்ன பாதிப்பு. நமது அண்டை நாடான சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் திபெத்தில் யார்லங் சாங்போ நதியில் ரூ.14 லட்சம் கோடி மதிப்பில் பிரமாண்டமான அணை கட்ட சீனா திட்டமிட்டுள்ளது. அருணாச்சலம் பிரதேசத்துக்கு அருகில் ஓடும் இந்த நதி இந்தியாவில் பிரம்மபுத்திரா என அழைக்கப்படுகிறது.

கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என்றும் நிபுணர்கள் எச்சரித்து வருகின்றனர். இங்கு அணை கட்டுப்படுவது குறித்து கடந்த ஆண்டு இந்தியா, சீனாவிடம் கவலை தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில் சீனா அணைக்கட்டுவது குறித்து எந்த கவலையும் வேண்டாம் என அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா கூறியிருக்கிறார். இது குறித்து பேசிய அவர், திபெத்தில் சீனா அணைக்கட்டுவது குறித்து எந்த கவலையும் வேண்டாம். பிரம்மபுத்திரா ஒரு வலிமையான நதி, இந்த நதி ஒரே ஒரு நீர் ஆதாரத்தை மட்டுமே சார்ந்தது இல்லை. பிரம்மபுத்திராவின் நீரோட்டத்தை சீனா தொந்தரவு செய்தால், தண்ணீர் வரத்து குறையும்.



சீன பிரதமர் லீ கெச்சியாங் அணை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார். தற்போது அணைக்கட்டும் பணி சீனா தொடங்கியுள்ளது. இந்த அணை கட்டப்பட்டால் இந்தியா மற்றும் வங்க தேசத்தில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் என்றும், இதனால் கோடிக்கணக்கான மக்கள்

இதன் விளைவாக பல்லுயிர் பெருக்கம் குறையும். இங்கு பிரமாண்டமான அணை கட்டப்படுவதை குறித்து சீனாவுடனும், நம் அண்டை நாடுகளுடனும் ஒன்றிய அரசு பேச்சுவார்த்தை நடத்தி உரிய முடிவு எடுக்கும் நம்புகிறேன் என்று கூறியிருக்கிறார். இந்த விவகாரத்தில் உடனடியாக இந்தியா தலையிட்டு பேச்சுவார்த்தை நடத்தி சுமுக முடிவை எடுக்க

# தந்திரம்!

டெஸ்ஸா வாங்

வேண்டும் என்பதில் அனைவரும் விருப்பமாக உள்ளது.


சீனா — இந்தியா இடையேயான எல்லைப் பிரச்சினை பல தசம காலமாக நீடிக்கும் தொடர்கதையாக இருக்க, இப்போது இன்னொரு வடிவில் இந்தியாவுக்கு புதிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருக்கிறது சீனா.

அது, திபத்திய தன்னாட்சிப் பிராந்தியத்தில் உள்ள ‘யார்லங் ஸாங்போ’ (இந்தியாவில் பிரம்மபுத்திரா) நதியின் குறுக்கே உலகின் மெகா அணையைக் கட்டி எழுப்புவதற்கான தொடக்க விழா. சீனப் பிரதமர் லீ கியாங் தலைமையில் கடந்த ஜூலை 19 நடந்துள்ளது. மெகா அணைக்கான தொடக்க விழா குறித்த செய்திகள் சீன அரசு ஊடகங்களில் அதிகாரபூர்வமாக வெளியாக, அது இந்தியா, வங்கதேச நாடுகளுக்கு அச்சத்தைக் கடத்தியுள்ளது.

திபெத்தில் பிறந்து இந்தியா வழியாக வங்கதேசம் ‘யார்லங் ஸாங்போ’ நதி திபெத்திய பீடபூமியின் வழியாக பாய்கிறது. இந்த நதியின் குறுக்கே மெகா அணை கட்டப்பட்டால் கீழ் நதிப் பகுதியில் வாழும் இந்தியா, வங்கதேச மக்கள் லட்சக்கணக்கானோர் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என்ற கவலைகள் எழுந்துள்ளன. இந்தியாவில் நுழைந்ததும் இந்த நதி பிரம்மபுத்திரா என்று அழைக்கப்படுகிறது.

இந்த அணை 167 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் கட்டப்படவுள்ளது. ‘மொடுடோ’ நீர்மின் நிலையம் என பெயர் கூட சீனா சூட்டிவிட்டது. இந்த மெகா அணை கட்டப்பட்டுவிட்டால், உலகின் மிகப் பெரிய அணை புதிய சாதனை நிகழ்த்தப்படும். தற்போது, ‘த்ரீ கார்ஜஸ் டேம்’ மூலம் உலகின் மிகப் பெரிய அணையைக் கொண்டிருப்பதும் சீனாதான் என்பதும் கவனிக்கத்தக்கது. இந்தப் புதிய மெகா அணையைப் பொறுத்தவரையில், ‘த்ரீ கார்ஜஸ்’ அணையில் இருந்து உற்பத்தியாவதைவிட மும்மடங்கு






அதிகமாக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஆற்றல் கொண்டது என மதிப்பிடப்பிடப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் திபெத் கிராமப்புற மக்களின் மின் தேவையை உறுதி செய்ய இந்த அணை கட்டுப்படுவதாக சீனா தெரிவிக்கின்றது. ஆனால், நீர்மின் நிலையம் அமைக்கும் சீனாவின் திட்டத்தின் பின்னணியில் பல்வேறு காரணங்களும் இருக்கின்றன.

எதிர்ப்புக்கான காரணங்கள்.

பல்துறை நிபுணர்கள் சீனாவின் இந்த மெகா அணைத் திட்டத்தை எதிர்க்கின்றனர். இந்த நதியின் தென் பகுதி இந்தியாவின் அருணாச்சலப் பிரதேசம், அசாம் மாநிலங்களிலும், வங்கதேசத்திலும் பாய்கிறது. இதனால், அதன் குறுக்கே மெகா அணை எழுப்பப்பட்டால் ஏற்படும் தாக்கங்கள் மோசமானதாக இருக்கும் என்று அவர்கள் அஞ்சுகின்றனர்.

இதே கருத்தை கடந்த 2020—ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் 'லோயி இன்ஸ்டிட்யூட்' வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. "திபெத்திய பீடபூமியில் உள்ள நதிகளின் மீது சீனா தனது ஆதிக்கத்தை செலுத்துவது இந்தியப் பொருளாதாரத்தின் மீது அதிகாரம் செலுத்த வழிவகுக்கும்" என்று சுட்டிக்காட்டியது.

கடந்த சில நட்களுக்கு முன்னர் அருணாச்சலப் பிரதேச முதல்வர் பெமா காண்டு அளித்த ஊடகப் பேட்டி ஒன்றில், "இந்த அணை கட்டப்பட்டால் ஸியாங், பிரம்மபுத்திரா நதிகள் குறிப்பிடத்தக்க அளவு வறண்டு போகும். இதனால், அந்த நதியை நம்பியிருக்கும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படும். இது மிகவும் கவலைக்குரிய விஷயம். ஏனென்றால் இதனை சீனா நமக்கெதிரான ஓர் ஆயுதமாக பயன்படுத்தும். தண்ணீரை தடுத்து பேராபத்தை விளைவிப்பதால் இதனை 'வாட்டர் வெடிகுண்டு' என்று சொல்லலாம்.

சீனா தான் திட்டமிட்டது போல் இந்த மெகா அணையைக் கட்டிவிட்டால், அதிலிருந்து திடீரென அதிகளவில் தண்ணீரை வெளியேற்றினால், ஸியாங் நதி சுற்றுவட்டாரப் பகுதி அழிந்துவிடும். அதனைச் சுற்றி வசிக்கும் ஆதி பழங்குடியினர் தங்கள் நிலம், உடைமைகள் அழிவதை காண நேரும். உயிரிழப்புகளையும் சந்திக்க நேரிடும்" என்று கூறியிருந்தார். கடந்த ஜனவரி மாதமே, இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஒருவரும், "மெகா அணைகள் திட்டத்தால் கீழ் நதிப் பகுதியில் உள்ள தேசங்கள், அதன் மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை சீனா உறுதி செய்ய வேண்டும். இந்த அணை கட்டுமானம் தொடர்பாக கீழ் நதிப் பகுதியில் உள்ள நாடுகளுடன் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும்," என்று வலியுறுத்தியிருந்தார்.

இந்த எதிர்ப்புக் குரல்கள், கண்டனங்கள், கவலைகளோடு இந்தியா நிறுத்திக் கொள்ளவில்லை. பிரம்மபுத்திரா நதியில் நீர்மின் நிலையம் கட்டுவது பற்றியும் இந்தியா பரிசீலித்து வருகிறது. சீனா மெகா அணையிலிருந்து அதிகப்படியான நீரை வெளியேற்றினால், அதனைத் தடுக்க ஒரு பஃபர் அணையாக இதனைக் கட்டமைக்க முயற்சிக்கிறது.

இந்தியா மட்டுமல்ல, சீனாவின் மெகா அணை விவகாரத்தில் வங்கதேசமும் தனது கவலையைப் பதிவு செய்துள்ளது. கடந்த பிப்ரவரி மாதமே மெகா அணை திட்ட விவரத்தை பகிரும்படி



சீனாவுக்கு வங்கதேசம் கடிதம் எழுதியது. இத்தனை சிக்கல்கள் இருக்க, சீன வெளியுறவு அமைச்சகமோ, மெகா அணை கட்டுவது சீனாவின் உரிமை என்று கூறுகிறது. கீழ் நதியில் உள்ள நாடுகளின் மீதான தாக்கங்கள் குறித்து ஏற்கெனவே அலசிவிட்டதாகவும் கூறுகிறது.

மெகா அணையும், மெகா அரசியலும்!

சீனாவின் மெகா அணைத் திட்டம் வெறும் நீர்மின் நிலையத் திட்டம் மட்டுமல்ல, அது இந்தியாவுக்கான அச்சுறுத்தல் ஒருபுறம், திபெத் பிராந்தியத்தின் மீதான ஆதிக்கத்தை அதிகரிப்பது இன்னொரு புறம் என மெகா அரசியலாகவும் உள்ளது.

முதலில் மெகா அணை அமையவுள்ள இடமானது, உலகின் மிக ஆழமான, நீளமான நிலப்பரப்பு பள்ளத்தாக்கு. இதில்தான் பிரம்மபுத்திரா நதி ஒரு துல்லியமான யு வடிவ திரும்புதலைக் கொள்கிறது. நம்சா பார்வா மலையை சுற்றியப் பகுதியில் இது நிகழ்கிறது. இவ்வாறு இந்த நதி 'யு' வடிவில் வளைந்து திரும்புவதை 'தி கிரேட் பெண்ட்' என்றழைக்கின்றனர். இந்த இயற்கையில் குறுக்கிட சீனா திட்டமிட்டுகிறது. நம்சா பார்வா மலைகளில் 20 கிமீ நீளத்தில் குகைகளைக் குடைந்து அதன் வழியாக பிரம்மபுத்திரா நீரை திருப்பிவிட திட்டமிடப்பட்டுள்ளது. பொறியாளர்கள் முதல் பணியாக இந்த குகைப் பாதை அமைக்கும் பணியை மேற்கொள்கிறார்கள். குகைப் பாதையின் மூலம் ஐந்தடுக்கு மின் நிலையத்துக்குத் தேவையான தண்ணீர் திருப்பி விடப்படும்.

இந்த நீர்மின் நிலையம் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் திபெத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, பிற பகுதிகளின் தேவைக்காக மடைமாற்றப்படும் எனத் தெரிகிறது. குறிப்பாக சீனாவின் கிழக்குப் பகுதிகளில் உள்ள மெட்ரோ நகரங்கள் மின் தட்டுப்பாட்டை சந்தித்து வரும் சூழலில் அப்பகுதிகளுக்கு இந்த மின்சாரம் பயனளிக்கும் என்று சீனா கருதுகிறது. சீன அதிபர் ஜி ஜின்பிங் தனிப்பட்ட முறையில் இந்த மின் திட்டத்தை வரவேற்கிறார். இத்திட்டத்துக்கு 'ஸிடியாங்டாங்ஸோங்' என்று நாமகரம் செய்துள்ளார். இதற்கு, 'மேற்கே உற்பத்தியாகும் மின்சாரத்தை கிழக்குக்கு அனுப்புவது' என்று அர்த்தமாம்.

சீன அரசாங்கமும், அரசு ஊடகமும் இந்த நீர் மின்திட்டம் தூய்மையான எரிசக்தியை நல்கும், திபெத்திய கிராமப்புற பகுதிகளுக்கு மின்சார தன்னிறைவு தரும் என்று கூறுகின்றன. ஆனால், சூழலியல் செயற்பாட்டாளர்கள், இது திபெத் நிலத்தையும், திபெத்திய மக்களையும் சுரண்டும் செயல் என்று சீனாவை விமர்சிக்கின்றனர். இந்த நீர்மின் நிலையத்திட்டத்துக்கு பிரம்மபுத்திரா நதியின் கீழ்ப் பகுதி தேசங்களான இந்தியா, வங்கதேசம் எதிர்ப்பதற்கு முன்னதாகவே திபெத்தியர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துவிட்டனர். எதிர்ப்புக் குரல் எழுப்பியவர்கள் அடி, உதை, கைது என்று துன்புறுத்தப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

இதையும் தாண்டி சூழலியல் ஆர்வலர்களின் இன்னொரு அக்கறை, இந்த மெகா அணை அமையும் பகுதி நிலநடுக்கங்கள் ஏற்படக் கூடிய பகுதி. அப்படி இருக்கையில் அங்கே மெகா அணை அமைப்பது நிலநடுக்கம் ஏற்பட்டால் ஊகிக்க முடியாத பாதிப்பை ஏற்படுத்தும் என்கின்றனர். கூடவே, திபெத்திய பள்ளத்தாக்குகள் பல்லுயிர் பெருக்கத்துக்கு பெயர் பெற்றவை, அங்கே மெகா அணை அமைப்பது பல்வேறு சீரழிவுகளை இயற்கை வளங்களுக்கு ஏற்படுத்தும் என்று கணிக்கின்றனர்.

திபெத் நிலப்பரப்பு அரசியலைப் போல இந்தியாவுக்கு நெருக்கடி ஏற்படுத்தவும் சீனா மெகா அணை திட்டத்தை கையிலெடுத்துள்ளது. அருணாச்சல் முதல்வர் குறிப்பிட்டதுபோல் இது ஒரு 'வாட்டர் வெடிகுண்டு' திட்டம்தான். போரை நவீன காலத்தில் களத்தில் ஆயுதங்களோடு மோதுவது மட்டுமல்லாது, பயோ வார்ஃபேர், வாட்டர் வார்ஃபேர் என்றெல்லாம் நடத்தலாம் என்பதை அவ்வப்போது சில தேசங்கள் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் மெகா அணை ஓர் எச்சரிக்கை மணி!



சரித்திரத் தொடர்

# சேரமான் கனவு

## பாகம் - 2 அத்தியாயம் 8

### 8 பேரலையால் வெளிப்பட்ட பேரன்பு!

**கொற்றவன்**

சில நொடிகளில், வாழ்க்கையில் என்னவெல்லாமோ நடந்து விடுகிறது.

விண்மீன் விழுகிறது! மின்னல் பிளக்கிறது! பூகம்பம் நிகழ்கிறது! சக்தி வாய்ந்த பல இயற்கை நிகழ்வுகள் எல்லாம் ஒரு சில நொடிகளில் தொடங்கி முடிந்து விடுகிறது. மனித வாழ்க்கையும் அதற்கு உட்பட்டதுதான்! அரசன் ஆண்டியாகிறான். ஆண்டி அரசனாகிறான்!

சலிப்பதும் வியப்பதும் மனித மனத்தின் இயல்புதான்! ஆனால் அதில்தான் அற்பங்களும் அற்புதங்களும் ஒளிந்திருக்கிறது. இந்த உண்மையைத் தெளிவாக உள்வாங்கி உணர்பவர்கள் சலனமற்ற சித்த நிலைக்குச் சென்றவர்கள் போல, உன்னதமானவர்களாக உயர்ந்து ஒளிர்கிறார்கள்.

இந்த உண்மையைக் கண்டடைய வெகுசிலரே முயற்சிக்கிறார்கள். ஆனால் வாழ்க்கையோ, அதற்கான வாய்ப்புக்களை அவரவர் நிலைக்குத் தக்கவாறு எல்லோருக்கும் வழங்கிக் கொண்டே இருக்கிறது.

அப்படியான ஒரு வாய்ப்பைத்தான், தாலியாவுக்கும் வளவத்திரையனுக்கும், பவழத்தீவின் அன்றைய காலைப் பொழுது வழங்கியது.

மயங்கிச் சரிந்த தாலியாவைத் தாங்கிப் பிடிக்கப் பாய்ந்தபோது, அவர்கள் தலைக்கும் மேலாக உயர்ந்து ஒரு பேரலை எழும்பிவந்து மோதியதில், அவர்கள் இருவரும் அந்த அலையின் போக்கிலேயே சென்று கரை சேர்ந்து உருண்டனர்.

மோகத்தில் கட்டுண்ட நாகங்கள் போல, இருவரும் பின்னிப் பிணைந்து அலையோடு உருண்டு கரையொதுங்கிய அந்த நிகழ்வு சில கணங்கள்தான்!

வளவத்திரையனுக்கு அது சற்றும் எதிர்பாராது நடந்த நிகழ்வு! ஆனால், அது தாலியா எதிர்பார்த்திருந்த பலநாள் கனவு! ஒருதலைப் பட்சமாகத் தன் காதலை வளர்த்துக் கொண்டவளின் கையறு நிலை விவரிக்க முடியாத ஒன்று.

மயங்கிச் சரிந்தவளை வளவத்திரையன் தாங்கிப் பிடித்தபோது, அவனது கை பட்டவுடனேயே அவளது புலன்கள் எல்லாம் விழிப்படைந்ததில், அக்கணமே அவளது மயக்கம் முற்றாக நீங்கி விட்டிருந்தது.

ஆனால், பேரலை அவர்களை உருளச் செய்தபோது அவளுக்குள் ஒவ்வொரு தந்தியாக மோகயாழ் மீட்டப்பட்டுக் கொண்டே இருப்பதை உணர்ந்தவளாகவே, அவனோடு அவளது உருளும் படலம் நீண்டது.



அவர்கள் கரையில் ஒதுங்கியபோது, அவள் வளவத்திரையனின் மேல் படர்ந்து கிடந்தாள். என்ன நடக்கிறது என்பதை உணர்வதற்குள்ளாகவே எல்லாம் நடந்து முடிந்து விட்டாற்போல உணர்ந்தான் வளவத்திரையன்.

கடல்நீரில் முற்றாக நனைந்திருந்த இருவரின் மேனியிலும் நீர்த் திவலைகள் திரண்டு மின்னின.

தன்மேல் அசையாமல் கிடந்த தாலியாவை, ஒரு குழந்தையைத் தூக்கும் வண்ணம் மெல்லப் பிடித்து, தன் மடியோடு கிடத்தி அவளது வதனத்தை நோக்கினான்.

இமைமூடிக் கிடந்த தாலியாவுக்குள் புலன்கள் எல்லாமும் விழிப்படைந்த நிலையிலேயே இருந்தன. வளவத்திரையனின் மடியில் கிடப்பது புரிந்தும், அவள் விழி திறக்காமலே இருந்தாள்.

ஆனால் வளவத்திரையனோ, இன்னமும் அவள் மயக்கத்தில் இருப்பதாகவே எண்ணி, அவளைச் சுயநிலைக்குக் கொண்டுவர அவளது மென்பட்டுத் தோள்களைப் பிடித்துக் குலுக்கியபடியே, பெயர் சொல்லி அழைத்தான்.

“தாலியா... தாலியா...”

இன்பச் சுழலில் சுழன்றவளுக்கு, அக்குரல் எங்கேயோ தொலைதூரத்தில் கேட்பதாகவே பட்டது. இருப்பினும் தன் தோள்களைப் பிடித்து மெல்லக் குலுக்கும் வளவத்திரையனின் வலுவான கரங்களுக்கு அவள் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் இருக்கவே, மெல்ல முனகலுடன், “ம்ம்!...” என்றாள்.

அவளைக் கைத்தாங்கலுடன் மெதுவாக நிமிர்த்தி, தன் வலக்காலை மடக்கி அவளைத் தலைசாய்க்கச் செய்து மீண்டும் குரல் கொடுத்தான்.

“தாலியா...”

அவள் அப்போதுதான் கண் மலர்ந்தாள்.

“என்ன ஆயிற்று உனக்கு?” என்றவனின் வலக்கரம் ஆதரவாகத் தன் வலது தோளில் பதிந்திருந்ததை உணர்ந்தாள்.

தனக்குள் என்னவெல்லாமோ ஆயிற்று என்பதை அவள் எவ்விதம் உரைப்பாள்? பதில் கூறத் தெரியாதவளாய் அவனது கண்களை உற்று நோக்கினாள். அந்த நீள்விழிகளில் மயக்கமும், கிறக்கமும் கலந்திருந்தது.

அந்தக் காந்தக் கண்ணழகியின் பார்வை தன்னை இழுப்பதை உணர்ந்தவன் தடுமாறி, அவ்விழிகளைத் தவிர்க்க, கடற்ப்புறம் பார்வையைத் திருப்பினான்.

ஆனால் அவளோ, அவனையே வெறித்த வண்ணம் இருந்தாள். முற்றாக நிலை மறந்தவளின் செய்கை இன்னதென்று அனுமானிக்க முடியாதல்லவா?

சுயநினைவுற்ற பிறகும் அவள் தன் மடியில் இருப்பது முறையல்ல என நினைத்தவன், அவளைத் தூக்க எத்தனிக்கையில், அவனது இருகரங்களையும் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.



கழுத்தில் அழுத்திப் பிடித்திருந்த தன் கரங்களை எடுக்க முனைந்தான். அவளோ மேலும் இறுக்கிப் பிடித்துக் கெஞ்சினாள்.

"திரையரே! என்னை இப்போதே கொன்று விடுங்கள்! இதற்கு மேலும் விதியின் வசம் நான் ஓடிக் கொண்டிருக்க விரும்பவில்லை!" என அவனது கரங்களைக் கொண்டே தன் கழுத்தைப் பலங்கொண்ட மட்டும் அழுத்தினாள்.

அடுத்த கணமே அவன் தன் கரங்களை அவளது பிடியில் இருந்து உதறி விடுவித்து அவளது தோள்களைப் பற்றினான்.

"தாலியா, உனக்கென்ன பித்துப் பிடித்து விட்டதா? ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாய்?"

"எல்லாம் என் விதி!" என அழத் தொடங்கினாள்.

"தாலியா, என்ன இது?" என்றவன், அவளது செய்கைக்குப் பொருள் புரியாமல் நோக்க, அவள் அவனையே கூர்ந்து நோக்கினாள். அந்தப் பார்வையின் பொருள் இன்னதென அவனுக்குப் புரிந்தது.

"என்னை நீங்கள் ஏற்றுக் கொள்ளாமல் போனால் அந்தப் பெருங்கொடுமையே என்னைச் சிறிது சிறிதாகக் கொன்றுவிடும். அதற்குப் பதில் இக்கணமே என்னைக் கொன்று விடுங்கள்! உங்கள் மடியிலேயே என் உயிர் பிரியட்டும். அதைவிட பாக்கியம் எனக்கு வேறில்லை!" என்றவள், கன்னங்களில் ஒற்றியிருந்த அவனது கரங்களைத் தன் நீள்கழுத்துக்கு இறக்கிப் பிடித்து இறுக்கினாள்.

"ஏன் தாலியா, இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாய்?" என்றவனின் மனம் பெரும் போராட்டத்தில் அல்லாடியது. அவளிடமிருந்து தன் பார்வையை விலக்கி, அலைகடல் மேல் திருப்பினான்.

அங்கே கயல்விழியின் கவலை படர்ந்த முகம் தோன்றி மறைந்தது.

"தாலியா முதலில் எழுந்து உட்கார்!" என அவளைத் தூக்கியமர்த்தும் முனைப்புடன் அவள்

மனத்திடமும், துணிச்சலும், வாய்த் துடுக்கும் கொண்டவளாகவே அவளைப் பார்த்திருந்த வளவத்திரையனுக்கு இப்போது அவள் முற்றிலும் புதியவளாகவே தோன்றினாள். இவள் இதுநாள் வரை பார்த்திருந்த தாலியாதானா என ஐயம் தோன்றியது.

"தாலியா, நீயா இப்படியெல்லாம் பேசுகிறாய்? உன்னைத் தன்னம்பிக்கையான பெண்ணாக அல்லவா நினைத்திருந்தேன்?"

அவ்வாறு அவன் கேட்டதும், அவன் தோள் மீது தலையைச் சாய்த்து கொண்டு அழுதவாறே கூறினாள். "எல்லாம் விதியின் சதி என்பதைத் தவிர, நான் வேறென்ன சொல்ல முடியும்?"

"விதியையே மதியால் வெல்லக் கூடியவர்களும் இருக்கிறார்கள். நீ அவ்விதமானவள்."

"என்னால் மட்டுமல்ல, யாராலும் விதியை வெல்ல முடியாது! அதற்கு நான் மட்டுமல்ல, நீங்களும் கூடத்தான் சாட்சி! இதோ!... இந்தக் கடலன்னை இங்கு நடந்த அனைத்துக்குமே சாட்சி!" என்றவள் அவன் முகம் நோக்கினாள்.

"நீ வீணாகக் கற்பனை செய்து என்னையும்



குழப்பாதே!" என்றவன், அக்கணத்தில் சற்று குழப்பமாகத்தான் இருந்தான்.

அவன் கற்பனையிலும் நினைக்காத காட்சியெல்லாம் இங்கு அரங்கேறத்தான் செய்கிறது. இந்தப் பேரழகுச் சிலை இப்படித் தன் மடியில் படுத்துக் கிடக்கும் என அவன் ஒருபோதும் நினைக்கவில்லையே! இந்தக் கட்டழகியின் அங்கங்களை எல்லாம் தழுவிக் கொள்ளும்படி ஈர உடலுடன் கட்டிப் பிடித்து உருள நேரும் என நினைத்தனா அவன்? அதெல்லாமும் நடந்து விட்டதே!...

"இப்படியெல்லாம் நடக்கும் என நாம் இருவரும் நினைத்தோமா? நேற்று இப்படியெல்லாம் நடக்கும் என நான் நினைத்திருந்தால் அதுதான் கற்பனை! ஆனால் இன்று உண்மையாக நடந்த இந்தச் சம்பவம் கற்பனை அல்ல; அற்புதம்! இதை நிகழ்த்தியது நாம் இருவரும் இல்லை. இதுதான் விதி!"

தாலியா சொல்வதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இவளை ஏற்றுக் கொண்டால் அது கயல்விழிக்குச் செய்யும் துரோகம் ஆகுமே! அப்படியொரு நிலைக்கு ஆளாகக் கூடாது என எண்ணியவன், சில நொடிகள் கடலையே வெறிதான்.

மீண்டும் அங்கே கயல்விழியின் முகம் தோன்றி மறைந்தது.

தன் வலக்கரத்தின் மோதிர விரலைப் பார்த்தான். கடலரசி புறப்படும் நாளில் கயல்விழி ஆசையுடன் தந்த சோழ இலச்சினை பொறித்த அந்த மோதிரம் மின்னியது.

அதைக் கவனித்த தாலியா, அவனது வலக்கரத்தைப் பற்றியவாறே கூறினாள்.

"கயல்விழியைப் பற்றித்தானே யோசிக்கிறீர்கள்? உங்கள் மீது எந்தத் தவறும் இல்லை என்று கூறி என் நிலையை விளக்குகிறேன்."

"தாலியா, நீ என்ன கூறினாலும், இது சரியில்லை!"

"நீங்கள் வணங்கும் தமிழ்க் கடவுள் முருகனே வள்ளியும் தெய்வானையுமாகக் காட்சி அளிக்கவில்லையா?" அவள் அவ்விதம் கேட்டவுடன் எப்படி இதெல்லாமும் கூட இவள் அறிந்து வைத்திருக்கிறாள் என்ற வியப்பு மேலிட்டாலும், தன் கோபத்தைக் காட்டும் விதமாகக் கூறினான்.

"நீ வரம்பு மீறி யோசிக்கிறாய்."

"இல்லை! இயற்கையின் விதியை மீறி, நீங்கள்தான் யோசிக்கிறீர்கள்."

"இன்று அதிகாலை வரை நான் ஒரு தெள்ளிய நீரோடை! ஆனால் இப்போது நீங்கள் அதில் நீந்திக் குளித்து விட்டீர்கள். இனி இந்த நீரோடையில் உங்களைத் தவிர யாரும் நீந்த முடியாது."

"உனக்கு புத்தி மாறாட்டம் ஆகிவிட்டதென நினைக்கிறேன்!"

"நான் கூறும் உவமை உங்களுக்குப்

புரியவில்லையா? இல்லை, புரியாதது போல் நடிக்கிறீர்களா?"

அதைக் கேட்டு அவன் அமைதி காத்தான். அவளே மேலும் தொடர்ந்தாள்.

"அமைதியின்றி தவித்த மனதை ஆற்றுப்படுத்திக் கொள்ளவே நான் இங்கு வந்தேன்."

"அப்படித்தான் நானும் இங்கு வந்தேன்."

"பிறகெப்படி நாம் இருவரும் ஒரே இடத்துக்கு வந்து சேர்ந்தோம்?"

"அதுதான் ஏன் கேள்வியும்"

"ஆம்! அதற்குப் பதில்தான், இந்தக் கடலன்னை வழங்கினாள். இருவரும் உடலோடு உடல் கலந்து உருண்டு வந்தது மட்டுமல்ல, உள்ளக் கலப்பும் இந்தப் பவழதீவில் நிகழ வேண்டும் என்பதுதான் இயற்கையன்னை ஏற்படுத்திய இந்த விந்தைச் சந்திப்பு! எங்கள் நாட்டு வழக்கப்படி ஒரு பெண்ணை அவள் சம்மதத்துடன் கையைப் பிடித்து விட்டாலே அவள் அவனுக்குச் சொந்தமானவள் என்றுதான் பொருள். அதைவிடவும், அவள் ஆடை களைந்தபின் பார்த்தடோல்லாமல், கட்டியணைத்து ஆரத் தழுவிக் கொண்டு உருண்டபின், வேறு வழியே இல்லை! அவள் அவனுக்கு மட்டுமே சொந்தம்! இது இரண்டுமே எனக்கு உங்கள் மூலம் நிகழ்ந்து விட்டபின், இது இறைவன் ஏற்பாடு என்றுதானே சொல்ல வேண்டும்." இவ்வாறு கூறி நிறுத்திய தாலியா, வளவத்திரையனின் விழிகளைப் பார்க்க மாட்டாமல், கடலின் பக்கம் பார்வையைச் செலுத்தி அமைதியானாள்.

"இப்படியெல்லாம் பேசுவது உனக்கு அழகா? முறையா?" என்றான் வளவத்திரையன்.

"இதெல்லாம் அழகுதான்! முறைதான்!"

"என்ன?"

"எனக்கும், உங்களுக்கும் வேண்டுமானால் இது அழகில்லாமல், முறையில்லாமல் தோன்றலாம். ஆனால் கடலன்னைக்கு இதெல்லாம் முறை என்றுதான் பட்டிருக்கும் போலிருக்கிறது."

"ஏன் இப்படியெல்லாம் உளறுகிறாய்?"

"இந்தக் கடலன்னை தன் அலைக்கரத்தை அவ்வளவு உயரத்துக்கு அப்போது ஏன் எழுப்பினாள்? இப்போது நாம் அமர்ந்திருக்கும் இந்த இடத்தைக் கூட தொடாமல், எட்டியிருக்கும் அலைகள் அப்போது மட்டும் எட்டடிக்கும் மேலாக எப்படி எழுந்தது?"

அவள் எழுப்பிய கேள்வி நியாயமானதாகத்தான் இருந்தது. வளவத் திரையனும், தற்சமயம் ஆர்ப்பரிக்காமல் இருக்கும் கடலலைகளைப் பார்த்தவாறே அமைதி காத்தான்.

தாலியா அவன் வலக்கரத்தை எடுத்து தன் கன்னத்தில் ஒற்றினாள்.

அதேநேரம்...

தூரத்தில் தெரிந்த படகை அப்போதுதான் கவனித்தான் வளவத் திரையன்.

வில்லவன் நான்கு யவன வீரர்களுடன் அவர்களை நோக்கி படகில் வருவது தெரிந்தது.

"தாலியா, அங்கே பார்!" என்றவனின் பார்வை பதிந்த திக்கைப் பார்த்தவள் திடுக்கிட்டுப் போனாள்.

"ஐயோ, இந்த நிலையில் நம்மை அவர்கள் பார்த்தால், என்ன நினைப்பார்கள்? வாருங்கள். இந்தப் பாறையருகே மறைந்து கொள்வோம்." எனப் பதற்றத்துடன் ஈழ முற்பட்டவளை இழுத்தான். அவன் இழுத்த வேகத்தில் அப்படியே அவன் மீது சரிந்தாள் தாலியா.

அந்த மென்பட்டுப் பூவுடல் சரிந்த வேகத்தில் கடற்பரப்பில் சாய்ந்தான் வளவத் திரையன், தன் முகத்தில் படர்ந்திருந்த அவளது குழல் கரைகளை ஒதுக்கியவாறே, "எழாதே! பதறாதே! அவர்கள் பார்வையில் படாமல், நாம் இங்கிருந்து போக வேண்டும்." என்றான்.

"எப்படி அது முடியும்?"

"அதற்கொரு வழி இருக்கிறது தாலியா." என்றவன் தன் மீது கிடந்தவளை லாவகமாகப் பக்கவாட்டுக்குப் புரட்டியபடி கைகாட்டினான், "அதோ பார், தூரத்தில் மீண்டும் ஒரு பேரலை! அது கரையை நோக்கி உயரும்போது, அவர்களால் நம்மைப் பார்க்கவியலாது. அந்த நேரத்தில் நாம் விரைவாக கரையை ஒட்டிய இந்தத் அலையாத்தி வனத்துக்குள் ஓடி மறைய வேண்டும்."

"என்னால் முடியுமா?"

"உன்னால் முடியாததா? நிச்சயம் முடியும். சரி, தயாராகு."

அடுத்த சில நொடிகளில் வளவத் திரையன் கூறியபடியே அனைத்தும் நடந்தது. அலை எழும்பிய உயரத்தில் அவர்கள் பார்வையில் இருந்து படகு மறைந்தது. அதே நேரத்தில் அவர்களும் விரைவாக ஓடி அந்த அலையாத்திப் புதர்களுக்குள் மறைந்தார்கள்.

(கனவு தொடரும்...)


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

# கவிஞன்

ஒரு கவிஞன் தனக்காக மட்டும்
யோசிப்பதில்லை
சக இதயத்தின் குமுறல்களுக்கும்
நிறைவேறா ஆசைகளுக்கும்
தன்கவிதை தீணியாகிப் போகட்டும்
என்பதற்கும் சேர்த்து தான்
யோசிக்கிறான்..

சில சமயம் அவனுக்காகவும்
வாழ்ந்தும் போகிறான்
இருப்பினும் அவன் ஒருமையிலே
விமர்சிக்கப் படுகிறான்

ஒருமையிலே ஆரதிக்கப்படுகிறான்
ஒருமையில் சில நேரம்
நசுக்கவும் படுகிறான்...

**செ.இராமதனவந்தினி**

# புரட்சி !

மக்களுக்கு வேண்டியதை
நான் தீர்மானிக்க வேண்டும்
பகடைகளை உருட்டுகின்றேன்
உன்னுடைய தகமையையும்

நானே தீர்மானிப்பதாக உள்ளேன்
துரும்புச் சீட்டால் வெட்டுகின்றேன்
மக்கள் எதை எதிர்பார்க்கின்றார்கள்
கிளித்தட்டு மறிக்கின்றேன்

நான் எதைக் கொள்ள விரும்புவேனோ
அதையே அவர்களும் விரும்புவார்கள்
காயா பழமா
அதற்காக அவர்கள்
எத்தகைய அர்ப்பணிப்புக்களையும்
தியாகத்தையும் புரிவார்கள்

மற்றவர்கள் எல்லோரையும்
எதிரிகளாய் பிரகடனப்படுத்துவோம்
நான் தத்துவவாதி
எனவேதான்
புரட்சியை வழி நடத்துகின்றேன்

**நடராஜா முரளிதரன்**

# இரண்டாவது பழம்!

பெண் புரட்சி என்பது
ஏதேன் தோட்டத்து வேலி
தகர்த்துக் கிளம்பிய
முதல் பெண்ணிலிருந்தே
தொடங்கலாம்...

ஆண்கள் வேட்டையாடினர்
பெண்கள் சமைத்தனர்
என்ற இலகு வரலாற்றை
எழுதித்தர நான் தயாரில்லை
நேசிப்பது போராடுவது
பணி செய்வது"
எனும் பெண் வரலாறு
சிதையும் உளியை
கையிலெடுத்திருக்கின்றேன்
என் உளியின் முனை
தட்டும் இடமெல்லாம்
உயிர் பெறட்டும்
மிச்சம் மீதி துகள்களாகட்டும்
சமூகத்தின் சிதைவுகளை
எதிர்க்கத் துணித்ததனால்

நான் அடங்காப்பிடாரி என்றால்
அப்படியே இருக்கட்டும்
நீயூட்டனின் மூன்றாம் விதி
எடுத்துரைத்த
எதிர்வினையாய் நான்
ஏதேன் தோட்டத்தின்
இரண்டாவது பழம்
இப்போது என் கையில்

**கவிதா**

# சிட்டுக்குருவி!

சிட்டுக்குருவிகளின் கிசு கிசுத்த
காதல் பேச்சில்
தூக்கம் கலைந்த ஆதவன்
சினம் கொண்டு சிவந்தான்

சுட்டெரிக்க பின் தொடர
மரங்களில் மறைந்தன குருவிகள்
கோபத்தில் தவறுதலாக கழுகுகளின்
கழுத்தை கறுக்கினான்

குருவிகள் கொரில்லா போர் முறையில்
ஆதவனிடம் விளையாட்டு காட்டின
நடுவானம் வந்து

மனிதனை வெறுப்பேற்றினான்
குடைகொண்டு தன்னாட்சி செய்த
மனிதனின் அறிவு வியந்து

சிட்டுக் குருவி மீதான
கோபம் சொன்னான்
ஆதவனுக்கு உதவ
மனிதன் கைபேசி கோபரங்களை நட்டு
சிட்டு குருவிகளின் சிறகுகளை
காட்டுக்குள்ளே முடக்கினான்

**வி. பிச்சுமணி**

# சூர்யாவின் 46–வது படம்!



## அமர்க்களமாக ஆகட்டும் அரைசதம்!

நடிகர் தனுஷின் வாத்தி, துல்கர் சல்மானின் லக்கி பாஸ்கர் ஆகிய வெற்றி திரைப்படங்களின் இயக்குநர் வெங்கி அட்லுரி, சூர்யாவின் 46—வது படத்தை இயக்க, நாக வம்சி தயாரிக்கிறார். நடிகைகள் மமிதா பைஜூ, ராதிகா சரத் குமார், ரவீனா டண்டன் ஆகியோர் பிரதான பாத்திரங்களில் நடிக்க, ஜி.வி.பிரகாஷ் இசையில் உருவாகும் இந்தப் படத்தில், இளமையான தோற்றத்தில் சூர்யா நடித்து வரும் புகைப்படங்கள் வெளியாகி வைரலானது.

# ‘பிளாக்மெயில்’ படத்தின் இசை விழா!



## விரைவில் வெளியீட்டு விழா!

மு.மாறன் இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் ‘பிளாக்மெயில்.’ தேஜூ அஸ்வினி, பிந்து மாதவி, திலக் ரமேஷ் ஆகியோர் நடித்திருக்கும் இப்படத்திற்கு சாம் சி.எஸ் இசையமைத்திருக்கிறார். இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடந்துள்ள நிலையில், அடுத்த சில தினங்களில் வெளியீடும் காண்கிறது. ஆகஸ்ட் 1 ஆம் தேதி படம் வெளியாகிறது.

## ‘ஜனநாயகன்’ படத்துடன் மோதும் ‘பராசக்தி’?



### போட்டியென வந்துவிட்டாலே முன்னேறுவதுதான்!

சிவகார்த்திகேயன், ரவி மோகன், அதர்வா, ஸ்ரீலீலா உள்ளிட்ட பலர் நடிப்பில், சுதா கொங்கரா இயக்கும் படம் ‘பராசக்தி.’ டான் பிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார். அடுத்த ஆண்டு பொங்கல் விடுமுறைக்கு இப்படம் வெளியாகவுள்ளதாகக் கூறப்படுகிறது. விஜய்யின் கடைசிப் படமான ‘ஜனநாயகன்’ படமும் பொங்கலுக்கு வெளியாகும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே பொங்கல் பந்தயத்தில் ‘ஜனநாயகன்’ படத்துடன் ‘பராசக்தி’ போட்டியில் இறங்கத் தயாராகியுள்ளது.

## காந்தா வெளியீட்டுத் தேதி!



### மீண்டும் ஒரு வதனமே சந்திர பிம்பமோ?

நடிகர் துல்கர் சல்மான் தற்போது ‘காந்தா’ என்கிற படத்தில் நடித்து வருகிறார். தமிழ் சினிமாவின் முதல் சூப்பர் ஸ்டார் நடிகரான எம்.கே.தியாகராஜ பாகவதரின் வாழ்க்கை வரலாற்றுப் படமாக உருவாகும் இப்படத்தை செல்வராஜ் செல்வமணி இயக்க, பாக்யஸ்ரீ போர்ஸ் நாயகியாகவும் நடிகர் சமுத்திரகனி முக்கிய கதாபாத்திரத்திலும் நடிக்கின்றனர். ராணா டக்குபதி மற்றும் துல்கர் சல்மான் இணைந்து தயாரிக்கின்றனர். செப். 18 ஆம் தேதி வெளியாகவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# தல வலம்

## நல்லூர்

### (கல்யாண சுந்தரேஸ்வரர்)

புவனகிரி செயபாலன்



‘நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் றலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.’ — திருநாவுக்கரசர்

தேவாரப் பாடல் பெற்ற காவிரித் தென்கரைத்தலங்களில் 20வது தலம். திருஞானசம்பந்தர் 33, திருநாவுக்கரசர் 22. தேவாரப் பாடல் பெற்ற இக்கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்றிலும் சிறந்தது.

மூலவர் — கல்யாண சுந்தரேஸ்வரர், பஞ்சவர்ணேஸ்வரர்.

உற்சவர் — கல்யாண சுந்தரேஸ்வரர்.

அம்பாள் — கல்யாண சுந்தரி, கிரி சுந்தரி.

தீர்த்தம் — சப்த சாகரம்.



தலவிருட்சம் — வில்வம்.

புராணப் பெயர் — திருநல்லூர்

ஆகமம் — சிவாகமம்.

தொன்மம் — 2000 வருடங்களுக்கு முந்தியது.

சுந்தர கிரி

கைலாய மலையில் இருந்து வாயுவால் ஏவப்பட்ட இரு சிகரங்களில் ஒன்று இத்தலம். மற்றது ஆவூர். இச்சிகரத்தில் இறைவன் எழுந்தருளியுள்ளார். இது சுந்தர கிரி எனப்படுகிறது.

பெயர்

மூலவர் சுயம்புலிங்கமாக தாமர நிறத்தில் காட்சி அளிக்கிறார். இவர் தினமும் ஐந்து நிறங்களில் தோன்றுவதால், பஞ்சவர்ணேஸ்வரர் என்றும், அமர் நீதியார், அப்பர் இருவரும் அருள்புரிந்ததால் ஆண்டார் என்றும், அகத்தியருக்குத் தன் திருமணக் கோலத்தைக் காட்டி அருளியதால், கல்யாணசுந்தரர் என்றும், பேரழகுடன் விளங்குவதால் சுந்தர நாதன், சௌந்தரநாயகர் என்றும் போற்றப்படுகிறார்.

மாடக்கோவில்

மூலவர் இருக்கும் இடத்தைச் சென்று அடையாத வண்ணம், பல வளைவு கொண்ட சிறிய படிக்கட்டுகளுடன் மாடக்கோயிலாக கட்டப்பட்டுள்ளது. இந்த மாடக் கோவிலை மலை மல்கு கோவில், வானமருங் கோவில், வான்தேயும் கோவில் எனத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

மூலவர் கருவறை

ஈசன் கட்டுமலை மீது லிங்கத் திருமேனியாக 14 அடி உயர மேற்பரப்பில் கிழக்கு நோக்கி அருள் பாலிக்கிறார். கல்யாணக் கோலத்தில் ஈசனும் அம்பாளும் அமர்ந்த நிலையில் இருக்க, இருபுறமும் திருமாலும் பிரம்மனும் நின்ற கோலத்தில் உள்ளனர். பிருங்கி முனிவர் வண்டு வடிவத்தில் பூஜித்ததால், லிங்கத்தில் சில துளைகள் உள்ளன என்று திருவண்டுத்துறை நாதர் கோயில் தல வரலாறு கூறப்பட்டுள்ளது.

அகத்தியருக்குத் தன் திருமணக் காட்சியைக் காட்டிய ஈசனின் திருமணக் கோலத்தை, கருவறையில் மூலவர் பின்னால் காணலாம்.

அம்மன்

மூலவர் சன்னதிக்குச் செல்லும் வாயில் பக்கத்தில், அம்மன் சன்னதி தெற்கு நோக்கி உள்ளது. அடுத்து வள்ளி தெய்வானையுடன் முருகன். அருகில் பள்ளி அறை.

கோவில்

ஐந்து நிலை ராஜகோபுரம், 2 பிரகாரங்களுடைய இக்கோவில் 316 அடி நீளமும், 228 அடி அகலமும் கொண்டது. கோயிலுக்கு முன்புறம் குளம் உள்ளது. ராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால், அதிகார நந்தி, பிள்ளையார், கொடிமரம், பலி

பீடம், இடபதேவர் ஆகியவையும், சற்று தெற்கில் அமர்நீதி நாயனாரது வரலாற்றுத் தொடர்புடைய நான்கு கால்களுடன் கூடிய அழகிய தராசு மண்டபம் உள்ளது. அடுத்து ஒரு கோபுரம் உள்ளது.

தெற்கு வெளிச்சத்தில் அஷ்ட புஜ மாகாளி தேவியின் சன்னதி, மாகாளி எட்டுக் கைகளுடன் சூலாயுதம் தாங்கி, அமர்ந்த கோலத்தில் உள்ளார். அடுத்து விநாயகர், நடராஜர் சன்னதிகள் உள்ளன.



திருச்சுற்றில் 63 நாயன்மார்கள், கன்னி விநாயகர், முகுசுந்த லிங்கம், சங்கு கர்ண லிங்கம், சுமதி லிங்கம், வருண லிங்கம், விஷ்ணுலிங்கம், பிரம்ம லிங்கம் உள்ளன.

தொடர்ந்து நடராஜர், பைரவர், சனீஸ்வரர், சூரியன், சந்திரன், மகாலிங்கம், பாணலிங்கம், ஜுரகரேஸ்வரர், ஜுரகரேஸ்வரியைக் காணலாம். கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி, உச்சிஷ்ட கணபதி, கைலாய கணபதி, ஞான தட்சிணாமூர்த்தி உள்ளனர்.

திருச்சுற்று மண்டபத்தில் உமாமகேஸ்வரர், சங்கரநாராயணர், லிங்கோத்பவர், சுகாசனர், நடராஜர், ரிஷபாரூடர் உள்ளிட்ட சுதைச் சிற்பங்கள் உள்ளன.

உள் வடக்குப் பிரகாரத்தில் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகரை வணங்கும் கோலத்தில் பாண்டவர்களின் தாயான குந்தி தேவி உள்ளார். அடுத்து இத்தலத்தில் முக்திப் பெற்ற அமர்நீதியார் சிலை வடிவம் உள்ளது. இவர்களுக்கு எதிரில் சண்டிகேஸ்வரர், துர்க்கை அம்மன் சன்னிதிகள் உள்ளன.

அமர்நீதி

அமர்நீதி நாயனார் பெருமான் ஆட்கொண்டு, அவர் தம் மனைவிக்கும் மகனுக்கும் முக்தியருளிய தலம். இவர்களின் உருவச் சிலை கோயிலில் உள்ளது.

கயிலைக்குச் சமம்

சிவபெருமாள் வசிக்கும் கயிலை மலைக்குச் சமமாக இத்தலம் உள்ளது என்பதை, 'வடபாற் கயிலையும் தென்பால் நல்லூரும் தம்வாழ் பதியே' என்று திருநாவுக்கரசர் தன் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நிறம் மாறும் மூலவர்

மூலவர் (லிங்கம்) உத்தராயணத்தில் செம்மையாகவும், தட்சிணாயத்தில் வெண்மையாகவும் மாறும் தன்மை உடையது. சுயம்புலிங்கமாகக் காட்சியளிக்கும் இவர், பகலில் ஐந்து நிறங்களில் காட்சியளிக்கிறார். காலையில் கதிரவன் தோன்றி மாலையில் மறைவதற்கு இடைப்பட்ட காலம் 30 நாழிகையில் ஆறு நாழிகைக்கு ஒருமுறை என நிறம் மாறுகின்றார்.

முதல் 6 நாழிகை (6 முதல் 8.25 வரை) தாமிர வண்ணத்திலும், அடுத்த 6 நாழிகைகளில் (8.26 முதல் 10.48 வரை) இளஞ் சிவப்பு நிறத்திலும், மூன்றாவது 6 நாழிகைகளில் (10.49 முதல் 1.12 வரை) உருக்கிய தங்க வண்ணத்திலும், நான்காவது 6 நாழிகைகளில் (1.13 முதல் 3.36 வரை) நவரத்தினப் பச்சை நிறத்திலும், ஐந்தாவது 6 நாழிகையில் (3.37 முதல் 6 வரை) என்ன நிறம் என்று கூற இயலாத, நம் மனதில் என்ன நிறத்தை நினைத்துப் பார்க்கிறோமோ அந்த நிறத்தில் காட்சி அளிக்கிறார். இதனால் இத்தலத்து ஈசன், பஞ்சவர்ணேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். 'நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்' என்று மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

இதே போல் திருச்சி உறையூரில் ஒரு பஞ்சவர்ணேஸ்வரர் கோயில் உள்ளது. அதில் உள்ள மூலவரும் ஒரு நாளைக்கு ஐந்து முறை நிறம் மாறி அருள் புரிகிறார்.

மகாமகக் குளம்

கும்பகோணம் மகாமகக் குளத்துக்கு இணையான இத்தலத்தில் உள்ள 'சப்தசாகரம்' என்ற குளம்

சிறப்பு பெற்றது. ஆண்டுதோறும் மாசி மாதத்தில் இக்குளத் தீர்த்தம் சிறப்புடன் விளங்குவதை, ‘மகம் பிறந்தது நல்லூரில், மகாமகம் பிறந்தது கும்பகோணத்தில்’ என்கிற பழமொழி உண்டு. கும்பகோணம் என்ன புண்ணியம் கிட்டுமோ, அதே புண்ணியம் நல்லூரில் உள்ள திருக்குளத்தில் மகத்தன்று நீராடினாலும் கிடைக்கும் என்கின்றது தலபுராணம்.

பிரம்ம தீர்த்தம்

திருமாலுடன் நடந்த போட்டியில், சிவனது முடியைக் கண்டேன் என்று பிரம்மா பொய்யுரைத்தார். அதனால் உண்டான



தீவினையைப் போக்கிக் கொள்ள இத்தலத்தில், தன் பெயரால் பொய்கை (குளம்) ஒன்றை ஏற்படுத்தி நீராடி, பெருமானை பூசித்துப் பேறு பெற்றார். பிரம்மா நீராடிய குளம் பிரம்ம தீர்த்தம் என்றானது.

பிரம்மா இத்தீர்த்தத்தின் கிழக்கில் ரிக் வேதத்தையும், தெற்கில் யஜுர் வேதத்தையும், மேற்கில் சாம வேதத்தையும், வடக்கில் அதர்வண வேதத்தையும், நடுவில் சப்தகோடி மகா மந்திரங்களையும் பதினெண் புராணங்களையும் வைத்து புனிதமாக்கினார் என்று தலபுரணம் கூறுகிறது.

சப்த சாகரம்

ஒருமுறை பாண்டவர்களின் தாய் குந்திதேவி இத்தலத்துக்கு வந்தபோது நாரதரைச் சந்தித்தார். அன்று மாசி மகம் நாள் என்பதால் கடலில் நீராடுவது புண்ணியம் என்றார். கேட்ட குந்திதேவி விருப்பத்தை நிறைவேற்றித் தருமாறு ஈசனை வேண்ட, அவர் இங்கு உள்ள தீர்த்த குளத்தில் உப்பு, கரும்புச் சாறு, தேன், நெய், தயிர், பால், சுத்த நீர் என்று ஏழு கடலையும் வருமாறு செய்தார். அதில் குந்திதேவி நீராடி பேறு பெற்றாள்.

இந்த ஏழு கடல்களைக் குறிக்கும் விதத்தில் 7 கிணறுகள் இக்குளத்துக்குள் உள்ளன. அவை சப்தசாகரம் என்ற பெயர் பெற்றது. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஈசனை வேண்டி இத்தீர்த்தத்தில் பன்னிரு துறைகளிலும் நீராடி, கோவிலை 48 நாட்கள் வலம் வந்தால் நோய் நீங்கும் என்பது ஐதீகம்!

நரசிம்ம வடிவம்

கொடிய அரக்கனாகிய இரணியனைக் கொல்ல தனக்கு நரசிம்ம வடிவம் வேண்டி திருமால் இத்தலத்துக்கு வந்த தவம் இருந்தார். அவருக்கு இத்தல ஈசன் காட்சிக் கொடுத்ததுடன், நரசிம்ம வடிவத்தையும் அளித்தார். இரணியன் மாய்ந்த பின், தன் கருவறை விமானத்தின் உச்சியில் மேற்கு முகமாக இருக்க வேண்டும் என்று பணித்தார். இந்த வடிவத்தை கருவறை விமானத்தின் மேல் இன்றும் காணலாம்.

சடாரி

வைணவக் கோவில்களில் சேவிக்கும் பக்தர்களுக்கு திருமாலின் திருவடியை நினைவு கூறும் விதத்தில் சடாரியைத் தலையில் வைத்து எடுப்பது வழக்கம். சிவாலயங்களில் இந்த வழக்கமில்லை! இருப்பினும் இத்தலத்தில் ஈசனின் திருவடி பதிக்கப்பெற்ற சடாரியை, தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கு வைத்து எடுப்பது இன்றும் நடந்து வருகிறது.

இதற்குக் காரணம், சிவபெருமானிடம் திருநாவுக்கரசர், ‘எமன் வந்து என்னை அழைத்துக் கொண்டு செல்வதற்குள், உங்கள் பாதத்தை என் தலைமேல் வைத்து அருள் புரியுங்கள்.’ என்று பட்டீஸ்வரம் அருகில் உள்ள திருசக்தி முற்றம் தலத்தில் உள்ள ஈசனிடம் வேண்ட, ‘நீ நல்லூருக்குப் போ! உன் விருப்பம் நிறைவேறும்.’ என்று கூறினார். அதன்படி நல்லூருக்கு வந்து வேண்ட, ஈசன் பாதத்தை திருநாவுக்கரசர் தலையில் வைத்து ஆசீர்வதித்தார் என்கிறது தலபுராணம். அதன்படி இத்தலத்தில் சடாரி வைக்கப்பட்டு வருகிறது.

பாடல் பெற்றது

பன்னிரு திருமுறையில் பாடல் பெற்ற தலமாக இருக்கிறது. அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர், சேக்கிழார் ஆகியோர் இத்தலம் பற்றிப் பாடியுள்ளனர்.

கல்வெட்டு

செங்கலால் கட்டப்பட்ட மாடக்கோயில் உத்தமசோழன் காலத்தில் கட்டறளியாகக் கட்டப்பட்டது. இக்கோவிலில் உள்ள 23 கல்வெட்டுகளில் 22 சோழர்களுடையது. ஒன்று ஹோய்சாளா மன்னனான வீரராமநாதனின் 23—ம் ஆண்டு ஆட்சி காலம்.



கிரி சுந்தராம்பாள் சமேத ஸ்ரீ கல்யாண சுந்தரேஸ்வரர் முற்பிறவியில் சிலந்தியாக ஜம்புலிங்கப் பெருமாளை வழிப்பட்டு, அடுத்த பிறவியில் கோச்செங்கட் சோழனாகப் பிறந்தான் என்கிறது தல வரலாறு. இவன் சிவனுக்கு யானை ஏறாத மாடமாக எழுபது கோயில்களை அமைத்தான். அந்த வரிசையில் பெரிய அளவில் அமைத்த கோவிலே திருநல்லூர் பெருங்கோவில். இத்தலத்து பெருமானை திருநல்லூர் உடைய நாயனார் என்றும், தல விநாயகரை அகம்படி விநாயகர் என்றும் கல்வெட்டில் உள்ளது.

திருவிழா

இங்கு வைகாசி விசாகம், சப்தஸ்தான விழா, ஆனி மாதம் அமர்நீதியார் விழா, மார்கழி மாதம் 10 நாள் திருவெம்பாவை விழா, திருவாதிரை தரிசனம், மாசி மாத விழா, மாசி மக விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்தல ஈசனுக்கு வைகாசி விசாகம், மாசி மகம், கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமைகள், மார்கழி திருவாதிரை போன்ற நாட்களில் பிரம்ம தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடக்கிறது.

பிரார்த்தனை

சிவாலயங்களில் பக்தர்களின் வேண்டுதலை நிறைவேற்ற இறைவன் இறைவி திருமணத்தை நடத்துவார்கள். ஆனால் இறைவன் தானே மனமுவந்து இங்கேயே திருக்கல்யாணக் காட்சியைக் காணச் செய்ததால் இத்தலத்தின் ஈசனை பக்தர்கள் இருந்த இடத்தில் இருந்து வேண்டிக் கொண்டால், அவரவர் இல்லத்தில் திருமணம் கைகூடும் என்பது நம்பிக்கை!

நீண்ட நாள் திருமணமாகாமல் இருக்கும் ஆண்களும் பெண்களும் இங்கு வந்து இத்தல ஈசனுக்கு வாசனையுள்ள மலரால் மாலை கட்டி செலுத்தி பின்னர் அதை வாங்கித் தான் அணிந்து பிரகாரத்தை வலம் வந்து வழிப்பட்டுச் சென்றால், தடைபட்ட திருமணம் விரைவில் நடைபெறும் என்கிறது தலபுராணம்.

மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்கு வழிபாடு செய்தால் வேண்டியது கிடைக்கும். கருவுற்ற பெண்கள் சுகப்பிரசவத்திற்காக காளியின் சன்னதியில் வளைகாப்பு நடத்தியும் வருகின்றனர்.

பூஜை

தினமும் ஆறு கால பூஜை நடக்கிறது. ஒவ்வொரு கால பூஜைகளும் அபிஷேகம், அலங்காரம், நெய்வேத்தியம், தீப ஆராதனை என நடத்தப்படுகிறது.

கணநாதர்

இத்தலத்தின் மேற்கு கோபுரவாயிலின் மேற்புறம் பலிபீட வடிவில் கணநாதர் வீற்றிருக்கிறார். இந்த வடிவத்துடன் இத்தலத்திலும், காசியிலும் மட்டுமே கணநாதர் வழிபடப்படுகிறார். ஆண்டுக்கு ஒருமுறை இரவில் நடக்கும் பூஜை சிறப்பானது. அன்று இந்த ஊரிலும் பக்கத்து ஊரிலும் உள்ள மக்கள், தங்களது பசு ஒருவேளை கறக்கும் பாலை அப்படியே பூஜைக்கு கொடுத்து விடுகின்றனர். இந்தப் பூஜையைப் பக்தர்கள் பார்க்க முடியாது.

கும்பாபிஷேகம்

திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோயிலில் 1991 மற்றும் 2013—ல் கும்பாபிஷேகம் நடந்தது. அடுத்து திருப்பணி கும்பாபிஷேகம் செய்ய அறநிலையத்துறையிடம் அனுமதி பெற்று அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுநடந்து வருகின்றன.

கோயில் திறக்கும் நேரம்

தினமும் காலை 7.30 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 5.30 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இருப்பிடம்


தஞ்சாவூர் — கும்பகோணம் சாலையில் பாபநாசத்திற்கு கிழக்கே மூன்று கி.மீ. தூரத்தில் வாழைப்பழக்கடை என்ற கிராமத்தின் அருகில் உள்ளது. தொடர்புக்கு; 94885 88450. ஏ.ஜி கார்த்திகேயன் கோயில் கண்காணிப்பாளர்.

(தொடரும் வலம்.....)




## பேராசிரியர் ம.திருமலையின்

# அணிந்துரைகளும் மதிப்புரைகளும்




**தொகுப்பாசிரியர்:**
**ந.செ.கி.சங்கீத்ராதா**

**விலை : ரூ. 300**

**பக். : 328**

**வெளியீடு:**

**பெண்டகன் எண்டர்பிரைசஸ்,**
**கும்மிடிப்பூண்டி,**
**சென்னை–601201**

அணிந்துரையும் மதிப்புரையும் ஒரு நூலுக்கு அழகு சேர்ப்பன மட்டுமல்ல; அதன் உள்ளடக்கத்தை அணுவைப்போல அணுகி, மேலும் அந்த நூலை வாசிப்பவரை தூண்டச் செய்வன. நுழைவாயிலாக உள்ளே அழைத்துச் சென்று நூலின் எழுத்துக் கட்டுமானத்தை, அழகியலை, வாழ்வியலை, கலாசாரத்தை, பண்பாட்டை எல்லாம் காட்டுவன. அணிந்துரை எழுதுவதில் உள்ள சிரமங்களை பேராசிரியர் ம.திருமலை விவரிக்கும்போது, அது அறிவார்ந்த, இடர்ப்பாடுகள் நிறைந்த, அதேநேரம் ஆற்றவேண்டிய பணி என்பதை உணர முடிகிறது.

இந்த நூலில் பேராசிரியர் ம.திருமலை எழுதிய நூல்களுக்கு பேராசிரியர் தமிழண்ணல், மூதறிஞர் சோ.ந.க., எழுத்தாளர் ஜெயகாந்தன், டாக்டர் இராம.பெரியகருப்பன், டாக்டர் தி.சிவசங்கரன், முனைவர்கள் மோகன், மு.மணிவேல், ம.பெ.சீ., பா.மதிவாணன், கவிஞர்கள் வைரமுத்து, கலாப்ரியா, க.இராசேந்திரன் போன்றோர் வழங்கிய 16 அணிந்துரைகள் இடம் பெற்றுள்ளன. இதேபோல், ம.திருமலை மற்றவர்களுக்கு எழுதிய 43 அணிந்துரைகள் இடம் பெற்றுள்ளன.

அணிந்துரைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை அவரது அணிந்துரையிலேயே அறிவது இந்த நூலின் சிறப்பு. நூலினை அணுகி, அருகி, ஆழ்ந்து, ஆய்ந்து ஆகச் சிறந்த அணிந்துரைகளை அடையாளம் காட்டியுள்ளார் பேராசிரியர். அணிந்துரையோ, மதிப்புரையோ அவை ஒரு கடமைக்காக வழங்கப்படக் கூடாது என்பதை இந்த நூல் மிகச் சிரத்தையுடன் தெளிவுபடுத்துகிறது.

சிறுகதை



# மரச்சாமி

**நெய்வாசல் நெடுஞ்செழியன்**

**சா**மிநாதன் வீடு வந்து சேர்ந்தபோது , இரவு மணி பதினொன்று. கதவைத் திறந்துவிட்ட கமலம், 'இவ்வளவு நேரம் என்ன செஞ்சீங்க?' என்று கேட்டவாறு பதிலை எதிர்பாராது சமையல் கட்டுக்குள் சென்றாள். மனைவிக்கு உடனடியாகப் பதில் சொல்லாது மாற்று உடையை உடுத்தி, புழற்கடை பக்கம் சென்றவன் மின் விளக்கைப் போட்டு தொழுவத்தில் அசைப் போட்டு கொண்டிருந்த மாடுகளையும், தூங்கிக் கொண்டிருந்த ஆடுகளையும் பார்த்தான்.

மர வியாபாரிக்கு மனைவியாய் வர பலரும் சம்மதிக்காதபோது, எட்டாவது பெண்ணாகப் பார்த்த கமலம் ஒப்புக் கொண்டதும், எஸ்.எஸ். எல்.சி. வரை படித்திருந்த அவள் தன்னை திருமணம் செய்துகொள்ள சம்மதித்ததும் ஆச்சரியத்தை அளித்தது. முதலிரவன்று அதை அவன் வெளிப்படுத்த சிரித்தாள்.

'இந்தப் படிப்பையா பார்த்துட்டு கேக்கிறீங்க? என்னை ஒத்த பெண்களெல்லாம் நிறைய படிச்சுட்டு வேலையில இருக்கிறாளுவ. எவ்வளவோ கெஞ்சியும் எங்கப்பா என்னை படிக்க விடலை. நிறைய படிக்க வெச்சா உசந்த படிப்பு படிச்ச மாப்பிள்ளையைத் தேடணும். நிறைய சீர்வரிசை செஞ்சு கல்யாணம் பண்ணணும். இதுக்கெல்லாம் பணத்துக்கு எங்கே போறதுன்னு படிக்க வைக்கலே?' என்று எதையும் மனதில் வைத்துகொள்ளாமல், வெகுளியாய் அவள் பதில் சொல்ல அவன் அவளின் மோவாயை பிடித்து தூக்கினான்.

'நான் படிக்க வைக்கிறேன் படிக்கிறியா?'

'கல்யாணம் பண்ணிட்டு காலேஜீக்கு போகலாம். பள்ளிக்கூடத்துக்குப் போனா கிண்டல் பண்ண மாட்டாங்களா? நான் இனிமே படிச்சு என்ன பண்ணப் போறேன். என்னை படிக்க வெச்சா உங்களுக்கு சோறாக்கிப் போடறதும் புள்ளை பெத்துக் கொடுக்கறதும் யாரு?' என்றவள் தொடர்ந்து, 'ஒண்ணு செய்யுங்க? எனக்கு ஆடு, மாடு வளர்க்கறதுன்னா ரொம்ப இஷ்டம். வீட்டு ஓரத்திலே இருக்கிற காக்காணி நிலத்திலே நெல்லு போடாம புல்லைப் போட்டா ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்கு அவிழ்த்துவிடாம கட்டிப் போட்டே வளர்க்கலாம். கொட்டில் முறைன்னு சொல்வாங்க. உங்களுக்கு சரின்னு பட்டா வாங்கிக் கொடுங்க?' என்றாள்.

'தினம் தினம் ஓய்வில்லாம வேலை செஞ்சுகிட்டே இருக்கணும் முடியுமா?'

'நமக்கு முன்னே வாழ்ந்தவங்க இப்படி யோசிச்சிருந்தா ஆடு, மாடு வளர்த்திருக்க முடியுமா? காடுதிருத்தி கழனி உருவாக்கியிருக்க முடியுமா?'



எதிரில் வந்த மனையையும் அதனுடன் இணைந்திருந்த நிலத்தையும் வாங்கினாள். நிலத்தில் நெல்லும் மனையில் காய்கறிகளையும் பயிரிட்டாள்.

கமலத்தின் செயல்பாடு சாமிநாதனை பிரமிக்க வைத்தது. ‘ஆடு, மாடு வளர்த்து ஒரு பெண்ணால் மனை வாங்க முடியும்போது தன்னால் முடியாதா?’ என நினைத்தவன் தன் தொழிலில் உள்ள குறைகளைக் களைந்து 40 ஊர்களில் தன் மர வியாபாரத்தை விரிவுபடுத்தினான். விற்பனைக்கு வந்த மரங்களை வாங்கி அதன் பயன்பாட்டுக்கேற்ப, வீட்டு வேலைகளுக்கான மரங்களை சைஸாக அறுத்து மரவியாபாரிகளுக்கும், விறகு மரங்களை ‘லாட்லாட்’ஆக திருப்பூருக்கும் அனுப்பி விற்றான். அதன்மூலம் கிடைத்த பணத்தையும் கையிருப்பு ரொக்கங்களையும் நிலத்திலும் மனையிலும் முதலீடு செய்தான். இதனால் ‘சாமிநாதன்’ என்ற அவனது இயற்பெயர் மாறி, ‘மரச்சாமி’ என்ற பெயர் நிலைத்தது.

‘புரியுது, ஆனா நான் காலையில புறப்பட்டுப் போனா மூனு மணிக்கு மேலத்தான் வீட்டுக்கு வருவேன். சாயங்காலம் பணம் வசூல் பண்ணப் போய்டுவேன். உனக்கு உதவி செய்ய முடியாதே!’

‘உங்க வேலையை நீங்கப் பாருங்க? உதவிக்கு ஒரு பொம்பளையை வச்சிகிட்டு என்னால முடிஞ்ச வேலையை நான் பார்க்கிறேன். ஆளுக்கொரு வேலையை பார்த்தால்தான் உடம்பும் மனசும் நல்லாயிருக்கும். ஒருத்தரையொருத்தர் எதிர்பார்க்காம நாலுகாசு பார்க்கலாம். அதுக்குமேலே பணத்தோட அருமையும் புரியவரும்... பாருங்க?’

மனைவி கமலத்தின் யதார்த்தமான பேச்சு சாமிநாதனுக்குப் பிடித்துவிட அடுத்த இரு நாள்களுக்குப் பின்னர், சந்தைக்குச் சென்று இரண்டு வெள்ளாடுகளும் இரண்டு நாட்டு பசு கிடேரிகளும் வாங்கி வந்தான். அன்று வந்தது இந்த பதினைந்து வருடங்களில் முப்பது, நாற்பதாய் பெருகிநிற்கின்றன. தனது பராமரிப்பில் மூன்று, நான்கை மட்டும் வைத்துகொண்டு மற்றவைகளை வளர்ப்புக்கு விட்டாள். ஆடு, மாடுகள் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு வீட்டுக்கு

கணவன், மனைவி உறவு பந்தத்தின் அடிப்படையிலானது என்றாலும், ஒருவரையொருவர் உணர்ந்து, உணர்த்தி உன்னதமடையச் செய்வதும்— அதன்மூலம் மற்றவர்களுக்கும் வாழ்க்கையை உணர்த்துவதும் காலகாலமாக கடைபிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகளில் ஒன்றுதானே. அவனது வளர்ச்சியைக் கண்டு பொறுக்காத உடன்பிறந்தவன் பங்குகேட்டு வம்புக்கு வர, தர முடியாது என சாமிநாதன் எதிர்குரல் கொடுக்க, கமலம் தடுத்தாள்.

‘உங்களுக்கு நானும், எனக்கு நீங்களும்தான் ஆதர்சமா இருக்க முடியும். மத்தவங்க மூணாவது



பலம், பலவீனத்தைப் புரிந்துகொண்டு அதன் நிறைகுறைகளைப் பொருள்படுத்தாது பொறுப்பை உணர்ந்து வாழ்க்கை நடத்துவதற்கான வழியைத் தேடிப் போனால் சவாலைத் தாண்டியே சாதனைகளைப் படைக்க முடியும் என்பதை உணர்ந்தவளாக, கணவன் தலைவாசலில் தெரிந்தது.

'கை— கால் கழுவிட்டு சாப்பிட வாங்க? இவ்வளவு நேரம் என்ன பண்ணினீங்க? முன்னேயே வந்துட்டதா முத்தையா அண்ணன் சொல்லிட்டுப் போனார்' என்றாள் கமலம்.

'ஒன்பதுக்கே வந்துட்டேன், அம்மன் கோயிலிலே கூட்டம் நடந்துச்சு' என்றான் சாமிநாதன்.

மனுஷங்கதான். ஆனா அவரு யாரு உங்க தம்பி. உங்களை மாதிரி அவரை பாடுபாட வச்சிருந்தீங்கன்னா பங்கு கேட்கறதுக்கு பதிலா உங்கக் கூட இருக்கணும்னு நினைச்சிருப்பாரு. அவரை உட்கார்த்தி வச்சு சோறு போட்டீங்க? இப்போ உங்க வளர்ச்சியை நினைச்சு பொறுமுகிறார். பரவாயில்லை விடுங்க? உங்க குடும்பச் சொத்துல அவருக்குரியதை கொடுங்க? கூடவே ரெண்டு மாட்டை ஓட்டி விடுங்க? திறமையிருந்தா முன்னுக்கு வந்திடுவாரு. பிரச்னையும் வராது' என்று உறவையும் விடாது உரிமையையும் விடாது மனைவி பேசிய பேச்சு சாமிநாதனை சம்மதிக்கச் செய்தது.

சின்ன, சின்ன பிரச்னைகளைக் காரணம் காட்டி, புகுந்த வீட்டின் ஒட்டுறவை அறுத்துகொள்ளாதவளாகவும்,, பெரும் பிரச்னைகள் வரும்போது சண்டை போடாதவளாகவும் மனைவி கிடைப்பது அதிர்ஷ்டம். அதிலும் பொறுப்பினை உணர்ந்து நடப்பவளாகவும், பிரச்னையின் கனபரிமாணம் புரிந்து அதற்கேற்ப வளைந்து கொடுப்பவளாகவும் கிடைப்பது பேரதிஷ்டம் என்றே கூற வேண்டும்.

திருமணத்துக்கு பிந்தைய வாழ்வு கணவன், மனைவி இருவருக்குமே சவாலானது. ஒருவரின்

'பொறுப்பாளர்கள் மட்டுமே கலந்துக்கணும் ஊர் கூட்டம் நாளைக்குன்னு சொன்னாங்க?'

'பொறுப்பாளர்கள் கூட்டத்திலே கலந்து பேசினால்தானே நாளைக்கு மத்தவங்க முன்னாலே பேச முடியும். இரும்பு அடிக்கற இடத்திலே ஈக்கு என்னவேலை. துரும்பும் பல்குத்த உதவுமாச்சே அதான்கூப்பிட்டிருக்காங்க?'

'புதிர் போதும்… புரியும்படியா சொல்லுங்க?'

'அம்மாவாசை கழிச்சு திருவிழா வருதில்லே. திருவிழா முடிஞ்சவுடன் கோயிலைச்சுத்தி காம்பவுண்டு எடுக்கணுமாம். அதுக்காக கோயில் முன்னாலே இருக்கிற இலுப்பை மரத்தை விக்கிற முடிவுக்கு வந்திருக்காங்க?'

'நூறுவருஷ மரமாச்சே…'

'தாண்டியே இருக்கும். ஒரு பொக்கெ பொற

புரசல் இல்லாம சுத்தமா இருக்கும். அத்தனையும் வைரம்'

'வாங்கிட்டீங்களா?'

'பேசி முடிச்சு அட்வான்ஸ் பண்ணிட்டேன்.

அறுபதாயிரம் கேட்டாங்க? வெட்டி, வித்து எவ்வளவு கிடைக்குதோ, செலவு போக மீதியை அப்படியே தந்துடறேன்னு சொல்லியிருக்கேன்.'

'இலுப்பை மரம் என்னாத்துக்காகும்.'

'கோயில் வேலைகளுக்குப் பயன்படும். இப்போ இலுப்பை மரங்கள் கிடைக்கறதில்லே. முன்னெல்லாம் சிவன் கோயிலுக்கு தானமா அளிக்கப்பட்ட நிலங்களில் இலுப்பை மரங்களை வளர்த்து, அதனோட விதைகளை செக்குல ஆட்டி எண்ணெய் எடுத்து கோயிலிலே விளக்கு எரிச்சாங்க? நந்தாவிளக்குன்னு பேரு. இலுப்பெண்ணெய் விடியறவரை எரியும்.

அந்த மரங்களைக் கொண்டே கோயிலுக்கான வாசல்கள், வாகனங்கள் தேருன்னு செஞ்சாங்க. இதுக்காகவே விவசாயம் பண்ண முடியாத நிலங்களிலும் ராஜாக்கள் கோயிலுக்கு தானமா கொடுத்த நிலங்களிலும் இலுப்பை மரங்களை நட்டு வளர்த்தாங்க. எங்கெங்கு இலுப்பை மரங்கள் தோப்பா இருக்குதோ அதுவெல்லாம் கோயில் நிலங்கள்னு முடிவு செஞ்சுக்கலாம்.'

'மனுஷங்க எந்த அளவுக்கு அறிவாளியா இருக்காங்களோ, அந்த அளவுக்கு சுயநலவாதியாகவும் இருக்காங்க? அது கிடக்கட்டும் வித்தா என்ன கிடைக்கும். அறுப்புக் கூலி ஆட்கூலி எல்லாம் போக ஒரு லட்சம் ரூபாய் கிடைக்கும்' என்று அவன் சொல்ல, அவளுள் மகிழ்ச்சி அதிகரித்தது.

'எப்போ வெட்டப் போறீங்க?'

'இந்த மாச கடைசியிலே...'

'பணமிருக்கா.. நகை தரட்டுமா?' என்ற அவள் தன் வருமானத்தை கையிருப்பாக வைத்துகொள்வதில்லை. நகையாகவே மாற்றி வைத்திருப்பாள்.

'வேண்டாம் மரம் வித்த பெரியதொகை அடுத்தவாரம் கைக்கு வருது..'


'கோயில் விவகாரம் கெட்டபேரு வராம பார்த்துகுங்க? அப்புறம் மாதவி ஒரு சேதி சொன்னா அவளோட 'ஹெட்மாஸ்டர் நாளை காலைல உங்களை பார்க்க வீட்டுக்கு வர்றதா சொன்னாராம்..'

'ஏன் எந்த பாடத்திலாவது மார்க் கம்மியா வாங்கியிருக்குமோ?'

'அப்படி நான் என்ன அலுப்ப சலுப்பையான புள்ளையையா பெத்து வச்சிருக்கேன்... அது மரக்கன்று உருவாக்கி நட்டுகிட்டிருக்கில்லே... அதுபற்றி பேசணுமாம்.'

'அப்பன் ஊருக்குள்ள மரத்தை வெட்டி விக்ககறதுக்குப் பரிகாரமா இந்தப் புள்ளை மரம் வளர்க்கிறதா ஊருக்குள்ள பேசிக்கிறாங்க? பேசாம விட்டுடும்மான்னா கேட்க மாட்டேங்குது ஹெட்மாஸ்டர் அவரு பங்குக்கு என்ன பேசப் போறாரோ தெரியலே. சரி நீ போய் படு நான் கொஞ்சநேரம் டி.வி. பார்த்துட்டு வரேன்.'

டி.வி. சேனலை மாற்றி சற்றுநேரம் செய்தியை பார்த்தவன், பின்னர் வழக்கம்போல பழைய பாடல்களை ஒளிபரப்பும் சேனலை வைத்துப் பார்த்தான். ஆனால் பாடல்களில் மனம் லயிக்கவில்லை. மகளையே சுற்றிவந்தது.



ஒருநாள் பள்ளிவிட்டு வரும்போது இரண்டு பெரிய வாட்டர் பாட்டில்களைக் கொண்டுவந்து அதன் மேல்பகுதியை அளவாக வெட்டி எறிந்துவிட்டு அடிப்புறம் ஓட்டையிட்டு, அதில் மண்ணை நிரப்பி இரண்டு புளியங்கொட்டைகளை போட்டு தண்ணீர் ஊற்றினாள் மாதவி. தொடர்ந்து தண்ணீர் ஊற்றிவர அடுத்த ஒருமாதத்தில் புளியங்கன்றுகள் முளைவிட்டன. விளையாட்டாய் ஆரம்பித்தது, பாட்டில்கள் கிடைக்கும்போதேல்லாம் தொடர நூற்றுக்கும் மேற்பட்ட புளியங்கன்றுகள் வீட்டின் முன் அலங்கரித்தன.

வீட்டுக்கு வந்தவர்கள் கன்றுகளை கேட்டு

நச்சரிக்க, நட்டு தண்ணீர் ஊற்றி வளர்ப்பேன்னு உறுதிமொழி கொடுத்திட்டு எடுத்துட்டு போங்க என்று சொல்லி கேட்பவர்களுக்குத் தந்தாள்.

பக்கத்து வீட்டு குழந்தையின் பிறந்த நாளின்போது ஐந்து கன்றுகளை அவர்கள் வீட்டின் பின்பக்கத் தோட்டத்தில் நட்டுத் தர அத்தனையும் வேர் பிடித்து வளர்ந்தது. அடுத்தடுத்த வீடுகளில் உள்ள குழந்தைகளின் பிறந்தநாளுக்கு என மரக்கன்றுகளை நட்டு, இப்படி ஊரில் அவளால் நடப்பட்ட மரக்கன்றுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட கன்றுகள் மரமாகியுள்ளன. தூக்கம் கண்களைச் சுழற்ற டி.வி.யை நிறுத்திவிட்டு படுத்தான்.

மறுநாள் காலை எழுந்து ஆட்களுக்கு போன் பண்ணி, எந்தெந்த மரங்களை எந்தெந்த அளவில் வெட்ட வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தபோது ஹெட்மாஸ்டர் வந்தார்.

‘வாங்க சார்... உட்காருங்க... கமலம்.. சார் வந்திருக்காங்க.. காபி கொண்டுவா...’

‘இருக்கட்டும் சாமிநாதன்... ஒரு முக்கியமான விஷயம் பேச வந்தேன். உங்க மகளாலே எங்க பள்ளிக்கூடத்துக்கு மட்டுமில்லே... இந்த ஊருக்கே பெருமை தேடி வந்திருக்கு. இத்தனை சின்ன வயசிலே அவ மரக்கன்றுகளை உருவாக்கி, நட்டு பராமரிச்சிட்டு வர்றதைப் பத்தி மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் எழுதியிருந்தேன். அவரு அதை படிச்சு பார்த்துட்டு உங்க மகளை நேரில் சந்திக்க விருப்பம் தெரிவிச்சி போன் பண்ணியிருக்காரு. அது விஷயத்தை சொல்லணும்னுதான் வந்தேன். அநேகமா ரெண்டு, மூணு நாளில் நாம கடலூர் போறமாதிரி இருக்கும்‘ என்று அவர் சொல்லி முடிக்க இவனுக்கு மகிழ்ச்சி அதிகரித்தது.



‘கேட்கவே சந்தோஷமா இருக்குங்க சார்... என்னைக்குப் போகணும்னு சொல்லுங்க நாங்க வர்றோம்.’ காபியுடன் வந்த கமலமும் மாதவியும் இச்செய்தியைக் கேட்டு திக்குமுக்காடி போனார்கள்.

ஐந்தாவது நாள் கடலூரில் பிரம்மாண்டமான அரங்கில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் அவர்கள் பங்கேற்றனர். சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் காரணிகள் பற்றியும் அதன் புழக்கத்தைக் கட்டுப்படுத்துவதுப் பற்றியும் பேசப்பட்டது. இறுதியில் மாவட்ட ஆட்சியர் பேசினார்.

‘சுற்றுச்சூழலைச் சுகாதாரமாகவும் ஆதாரமாகவும் வைத்து கொள்வது என்பது ஒவ்வொரு உயிரின் முன்னேயும் வைக்கப்பட்டுள்ள தார்மிகப் பொறுப்பாகும். இந்தப் பொறுப்பை மனிதர்களைத் தவிர, பிற ஜீவராசிகள் அனைத்தும் உணர்ந்து கடைபிடித்து வருகின்றன. ஆனால் ஆறறிவு கொண்டவர்களாகத் தங்களைக் கூறிக் கொள்ளும் மனித இனத்தின் பெரும்பான்மையோர் அதைப் பற்றி சற்றும் கவலைப்படுவதில்லை.

இந்த மேடையில் பல கருத்துருக்கள்

உருவாக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றையாவது பின்பற்ற வேண்டும் என்பது எனது வேண்டுகோளாகும். நம் குடும்பத்தினரை அல்லது நம்மை சார்ந்தவர்களை மாற்ற வேண்டுமானால் முதலில் நாம் மாற வேண்டும். இப்படி மாறும் மனோபாவத்தை ஏற்படுத்திக் கொள்ளாதவரை மாற்றத்தை உருவாக்கவும் விதைக்கவும் முடியாது. குறைந்தபட்சம் நன்மை செய்ய முடியாவிட்டாலும் தீமைகள் செய்யாமல் இருக்க வேண்டும்.

இப்பொழுது நான் கூறப் போகும் ஒரு செய்தி பலருக்கு சங்கடத்தையும் சங்கோஜத்தையும் ஏற்படுத்தலாம். ஆனாலும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. நான் சென்ற பல கிராமங்களில் ஊர்புறச் சாலையோரங்கள் இன்னும் பொதுக் கழிப்பிடமாகவே பயன்படுத்தப்பட்டு வருவதைப் பார்த்தேன். இந்த நிலையை மாற்றி அமைக்க அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டும் மாற்றம் ஏற்படவில்லை.

அரசின் செயல்பாட்டில் குறையா? அல்லது மாற்றத்தை ஏற்கும் மனோபாவம் மக்களிடம் வராமையா? எதனால் என்பது புரியவில்லை. இதற்கெல்லாம் பதில் கூற சம்பந்தபட்டவர்கள் முன்வந்தால் மட்டுமே எல்லாவற்றையும் மாற்றிக் காட்ட முடியும். இப்படி தான் வாழும் ஊரைப் பற்றியே கவலைப்படாதவர்களுக்கு நடுவே பள்ளிப்படிப்பு படிக்கும் ஒரு மாணவி படிப்புக்கு இடையே தான் வாழும் ஊருக்கு தன்னால் இயன்ற சேவையை செய்து உயர்ந்து நிற்பதுடன் ஊருக்கும் பெருமை தேடித்தந்திருக்கிறாள். அவளை உங்களுக்கு அறிமுகம் செய்வதில் பெருமகிழ்வு கொள்கிறேன்' என்று ஆட்சியர் பேசினார். அடுத்த நிமிடம் மாதவி மேடையேற்றப்பட்டாள். மாதவியை தன் அருகே அழைத்த ஆட்சியர் மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார்.

'இந்தச் சிறுமியின் பெயர் மாதவி. சிதம்பரம் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்தில் எட்டாம் வகுப்பு படித்து வருகிறார். கடந்த ஐந்தாண்டுகளாக தனக்கு கிடைத்த பிளாஸ்டிக் பாட்டில்களில் மரக்கன்றுகளை உருவாக்கி, ஊருக்கே வழங்கியுள்ளார். இப்படி இவர் உருவாக்கிய கன்றுகளில் நூற்றுக்கும் மேற்பட்டவை மரமாகி காய்க்கும் தருவாயில் உள்ளன. வரும்காலத்தில் இந்த மரங்கள் இவரது ஊராரின் தேவைக்குரிய புளியைத் தருவதுடன் கிராம பஞ்சாயத்துக்கும் ஒவ்வொரு ஆண்டும் பெரிய அளவில் வருமானத்தை தரவுள்ளன.

மேலும் மேகத்தைக் கிரகித்து மழையாகப் பொழிய வைக்கும் சக்தி மற்ற மரங்களைவிட புளிய மரத்துக்கு அதிகம் என வனத் துறை ஆராய்ச்சியாளர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இத்தனை சிறப்புக்குரிய புளியமரக் கன்றுகளை கிராமத்திலுள்ள ஒவ்வொரு குழந்தையின் பிறந்த நாளின் போதும் அவர் வீட்டுக்குச் சென்று நட்டதுடன் எங்கே அவர்கள் தண்ணீர் ஊற்றாமல் விட்டு விடுவார்களோ? என்று இவராகவே அவர்களது வீட்டுக்குச் சென்று தண்ணீரும் ஊற்றியுள்ளார். அந்த விதத்தில் மற்றவர்களுக்கும் மரம் வளர்க்க வேண்டும் என்ற சிந்தனையை இவர் உருவாக்கியுள்ளார்.

சுமார் இரண்டாயிரம் பேர் வசிக்கும் கிராமத்தில் மரம் வளர்க்கும் சிந்தனை இவருக்குள் மட்டுமே எழுந்துள்ளது.



மற்றவர்கள் தன்னைப் பற்றியும் தன் வாழ்க்கைப் பற்றியும் நினைக்க, இவரோ ஊரைப்பற்றி கவலைப்பட்டுள்ளார். இந்தப் பொதுநலச் சிந்தனைக்காக இவரை பாராட்டவும், இவரது செயலுக்கு அங்கீகாரம் பெற்றுத் தரவுமே இவரை மேடைக்கு அழைத்துள்ளேன். இவர்போல அனைவரும் மரத்தை நேசிப்பவராக மாற வேண்டும் என்பது எனது வேண்டுகோளும் விருப்பமுமாகும்.

இவரது செயலை ஊக்குவிக்கும் விதமாக இவருக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் பாராட்டு கடிதமும் என்சார்பில் ரூபாய் ஆயிரம் ரொக்கமும் அளிப்பதுடன் மாவட்ட வனத் துறை ஆலோசகர்களில் ஒருவராகவும் இவரை நியமிக்கிறேன். இவர் பெரிய அளவில் மரக்கன்றுகளை உருவாக்க விரும்பினால் வனத்துறை வழிகாட்டும்' என்றார். ஆட்சியர் பேசி முடித்தவுடன் பலத்த கைதட்டல் எழுந்து அரங்கை நிறைத்தது. பத்திரிகையாளர்கள் மாதவியிடம் கேள்விகள் கேட்க, அவள் சளைக்காது பதில் சொன்னாள். இதற்குள் கருத்தரங்குக்கு வந்த சில முக்கிய பிரபலங்கள் மாதவிக்கு அன்பளிப்பாகப் பணம் தருவதற்கு முன்வர மாவட்ட ஆட்சியர் அதை தன் கையால் வாங்கி மாதவிடம் தந்தார்.

மகளுக்கு கிடைத்தப் பெருமையைப் பாரத்து சாமிநாதனும் கமலமும் வாயடைத்துபோயினர். அவர்களுடன் சேர்ந்து மதிய உணவு உண்டவுடன் ஆட்சியர் அவர்களுக்கு விடைதர மாதவி ஆட்சியர் கால்களில் விழுந்து வணங்கினாள். நடுத்தர வயது வடநாட்டு ஆட்சியர் அவளை தடுத்து நிறுத்தி ஆசிர்வதித்தார்.

நிகழ்ச்சி முடிந்து ஊர் செல்ல நால்வரும் பேருந்து ஏறினர். ஜன்னல் ஓரம் உட்கார்ந்து பின்னோக்கிய ஓடிய மரங்களின் பெயரை மாதவி தன் குறிப்பேட்டில் எழுதிக் கொண்டிருந்தாள். கமலமும் ஹெட்மாஸ்டரும் கண்ணயர்ந்துவிட சாமிநாதன் சிந்தனை வயப்பட்டவனாய் இருந்தான். இரவு நேரத்தோடு உணவு முடித்து வெளியே வந்த கமலம் மாடிப்படி அருகில் கணவன் சாமிநாதன் கவலையுடன் அமர்ந்திருந்ததைப் பார்த்தாள்.

‘ஏங்க தூக்கம் வரலியாக்கும்...’

‘......’

‘கோயில் மரத்துக்கு பணம் கொடுக்கறதைப்பத்தி யோசிச்சிட்டிருக்கீங்களா?’

‘...............’

இரண்டு கேள்விக்கும் அவனிடமிருந்து பதில் வராது கண்டு அவனருகில் சென்று அவனைத் தொட்டுப் பார்த்தவள் முகவாயை பிடித்து தூக்கினாள். அவன் முகம் வாடியிருந்தது.

‘மகளுக்கு கிடைச்ச பெருமையிலே உங்களை மறந்து உட்கார்ந்துட்டீங்களோ?’

‘மகள் பெருமையைத் தேடித் தந்துட்டா? ஆனா நான்தான் ஏகத்துக்க தப்பு பண்ணிட்டேன் கமலம்.’

‘ஓ... மரம் வியாபாரம் செய்யறதைச் சொல்றீங்களா? அது உங்க மக பிறக்கிறதுக்கு முன்னாலேருந்து நீங்க செஞ்கிட்டு வர்ற தொழில். அப்படியே அது தப்புன்னு தோணிச்சுன்னா மக மூலமா மரக்கன்றுகளை நட்டு பரிகாரம் தேடிக்கறதா நினைச்சுக்கோங்க?’

‘இந்த மேடையில் உருவாக்கப்பட்டுள்ள விஷயங்களில் ஆளுக்கொன்றையாவது பின்பற்றணும்னு கலெக்டர் சொன்னதும் என்மனசைவிட்டு மறையாது போலிருக்கு’ என்று சாமிநாதன் சொன்னபோது, அவன் குரல் தழைந்ததைப் பார்த்து கமலம் பதறினாள். அவன் கரங்களை ஆதுரத்துடன் பற்றிக் கொண்டாள்.

‘என்னாயிடுச்சுன்னு இப்படி கலங்கிறீங்க? எனக்கு கூட நீங்க நாள் பூரா லோலோன்னு அலையறது பரிதாபமா இருக்கும். பிடிக்கலேன்னா விடுங்க நாம கட்டியிருக்கிற கடையிலே பெரிய அளவுக்கு மளிகை வியபாரம் தொடங்கினா போச்சு.’

இவர்களுடைய பேச்சில் உள்ளேயிருந்து வந்த மாதவியும் கலந்து கொண்டாள்.

‘மளிகைக்கடை வேணாம்பா? மரக்கன்றுகளை அறிவியல் பூர்வமா வளர்க்க வனத் துறை மூலம் வழிகாட்ட தயாரா இருக்கிறதா கலெக்டர் சொன்னாரில்லே... இதுக்கெல்லாம் பேங்கிலே கடன் தராங்கன்னு ஹெட்மாஸ்டரும் சொன்னாங்க. ஹைவேஸ் ரோட்டிலே இருக்கிற நிலத்திலே நாம செய்யலாம்‘ என்ற மகளின் யோசனை சாமிநாதனை மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. குழப்பம் நீங்கி தெளிவு பெற்ற சாமிநாதன் எழுந்தான்.

‘நீங்க போய் படுங்க... நான் தர்மகர்த்தாவை போய் பார்த்துட்டு வந்துடறேன்.’

‘அவருகிட்டே மரம் வேணான்னு சொல்லப் போறீங்களா? கோயில் வேலை நின்னுடப் போவுதுங்க. கோயில் மரத்தை வெட்டி விக்கறதோட நிறுத்திக்கலாம்‘

தர்மகர்த்தா அவனை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். ‘என்னப்பா உன் மகள் கலெக்டரோட எடுத்த படம் மாலை பேப்பரில் வந்திருக்கு பார்த்தேன். உன் மகள், என் பேத்தி பிறந்ததை தெரிஞ்சுகிட்டு வீட்டுக்கு வந்து புளியங்கன்றுகளை நட்டுச்சுப்பா. நான் அன்னைக்கு கிண்டல் பண்ணினேன்.

இன்னைக்கு அந்தக் கன்று வளர்ந்து நிக்குது. அநேகமா இந்த வருஷம் பூ வைக்கும்னு நினைக்கிறேன். உனக்கு நல்ல பெண்டாட்டி அமைஞ்சமாதிரி நல்லமகளும் கிடைச்சிருக்கா எல்லாம் திரவுபதியோட அருளாசிதான் “ என்று மகளோடு மனைவியையும் உயர்த்தி பேசியவருக்கு நன்றி தெரிவித்தான்.

‘கோயில் மரத்துக்கு பணம் கொண்டாந்திருக்கேன். வாங்கிக்கோங்க?’

‘நாளைக்கு கோயில் கொடியேறப்போகுது. சரியான நேரத்திலே பணம் கொண்டாந்திருக்கே..?’

‘ஒரு சேதிங்க...’ என்று அவன் சொன்ன செய்தி கேட்டு தர்மகர்த்தா பிரம்மித்து போனார். மறுநாள் அதிகாலை நான்கு மணிக்கே எழுந்தவன், கோயிலடிக்கு தனக்கும் இன்னும் இருவருக்கும் சேர்த்து காபி அனுப்புமாறு கூறிவிட்டு மரத்தடிக்கு வந்தான். சற்று நேரத்தில் அவனிடம் வேலை பார்க்கும் இருவர் மொபெட்டில் வந்து இறங்கினர். ‘பொழுது புலர்வதற்குள் மரத்தை வெட்டுவதற்கான ஆயுதங்களை செய்வதற்காக தங்களை அழைத்திருப்பாரோ?’ என்ற சிந்தனையுடன் வந்தவர்களிடம் வேலையை கூறிவிட்டு தானும் அவர்களோடு சேர்ந்து வேலையில் ஈடுபட்டான்.



முதலில் மரத்தைச்சுற்றி சுத்தம் செய்தான். சாணம் தெளித்தான். வீட்டில் இருந்த மர ரீப்பர்களை கொண்டு வரச் செய்து ஒரு தச்சரின் உதவியுடன் தட்டி செய்து மரத்தின் நான்கு புறமும் அடைத்தான். கோயிலுக்கு வெளிப்புறத்தில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த அம்பாளின் பழைய புடவைகளில் நான்கை எடுத்து மரத்தைச் சுற்றி கட்டினான். புடவை கட்டிய பின்னர் மஞ்சளை கரைத்து மரத்தின் மீது தெளித்தான்.

பின்னர் அதன் மீது குங்குமம் வைத்தான். மரம் இப்பொழுது உருமாறி சாட்சாத் அம்பாளே நேரில் வந்து நிற்பது போல காட்சியளிக்க அவன் உடல் சிலிர்த்தது. சுவரோரம் இருந்த பெரிய அகல் ஒன்றை எடுத்து அலம்பி பையிலிருந்த எண்ணெயை எடுத்து ஊற்றி திரியிட்டு விளக்கேற்றினான்.

அகல் விளக்கின் வெளிச்சம் சிறிது சிறிதாக பரவ மரத்தின் மீதிருந்த பறவைகள் இன்னொலி எழுப்பின. சூரியனும் தன் பொற்கதிர்களை மரத்தின்மீது பாய்ச்ச அந்த இடம் பார்க்க பேரகழாய் இருந்தது. அப்பொழுது அந்த வழியே சைக்கிளில் வேகமாக வந்த வழிபோக்கன் சைக்கிளைவிட்டு இறங்கி அவனருகே வந்தான்.

‘ஏங்க ராதாவிளாகத்துக்கு இப்படித்தானே போகணும்?’

‘ஆமாம்..’

‘இது என்ன கோயிலுங்க?’

‘திரவுபதி அம்மன்...’

‘இந்த மரத்திலே என்ன சாமிங்க இருக்கு’

எதிர்பாராத இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல தடுமாறியவன் ஒருவாறாக சுதாரித்துகொண்டு மரத்தையும் சாமியையும் இணைத்து மரச்சாமி என்றான். சொன்னபிறகே அது மற்றவர்கள் தன்னை அழைக்கும் பெயர் என்பது நினைவுக்கு வந்தது.

‘என்னது மரச்சாமியா? மரம் பேர்லேயே சாமியா இதுவரையிலும் கேள்விபட்டதில்லை.. ஆனா பொருத்தமான பேருங்க. நூறு வருஷ மரமா தெரியுது. இத்தனை வயசிலே எத்தனை பேருக்கு நல்லது செஞ்சிருக்கும். மனுஷங்க அதிகப்பட்சமா அறுபது, எழுபது வருஷம் வாழவாங்க. ஆனா மரம் நூறு, இருநூறு வருஷம் வாழும், நூறு வருஷம் வாழ்ந்தவங்க காலிலே விழுந்து ஆசிர்வாதம் வாங்குகிறோம்.

ஆனா இருநூறு வருஷம் வாழும் மரத்தை வணங்காட்டியும் வெட்டாம இருக்கலாம் இல்லையா? இந்த மரத்தடியிலே தினமும் விளக்கேத்தி வச்சு மனம் உருகி கும்பிட்டா வீட்டிலேயும் நாட்டிலேயும் சுபிட்சம் நிலவுங்க. மனசு வெச்சா மரமும் சாமிதாங்க?’ என்ற வழிபோக்கனின் பேச்சையும் செயலையும் சற்றும் எதிர்பார்த்திராத சாமிநாதன் சிலிர்த்த உடலுடன் அவன் போவதையே பார்த்துகொண்டிருந்தான்.

‘மனசு வெச்சா மரமும் சாமிதாங்க? மனசு வெச்சா மரமும் சாமிதாங்க?’ என்று அந்த வழிபோக்கன் சொல்லிவிட்டுப் போன அந்த வார்த்தைகளை தன்னையும் அறியாது சாமிநாதன் மீண்டும், மீண்டும் முணுமுணுக்க அதை ஆமோதிப்பது போல பறவைகளும் குரல் கொடுத்தன.

# அறிவோம் தமிழர்

## நல்ல தலைவர்— காமராஜர்!

பதினான்கு ஆண்டுகள் பதவியிலிருந்த நெதர்லாந்து பிரதமர் மார்க் ரூட்டே ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு, தன் பதவியை அடுத்த பிரதமரிடம் ஒப்படைத்துவிட்டு சிரித்த முகத்துடன் சைக்கிளில் செல்வது போன்ற காட்சி சமூக வலைத் தளங்களில் பகிரப்பட்டது. நம் நாட்டில் இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா? கனவிலாவது நடக்குமா? என்றும் கூடவே ஆதங்கத்துடன் கேட்டிருந்தார்கள். நம் நாட்டிலும் இவரைவிட எளிமையான தலைவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

உள்துறை, ரயில்வே துறை , பிரதமர் எனப் பதவி வகித்த லால் பகதூர் சாஸ்திரி தன் பதவிக் காலத்தில் அலாகாபாதில் வாடகை வீட்டில் இருந்தார் என்பதும் , 'ஹோம்லெஸ் ஹோம் மினிஸ்டர்' என்று அழைக்கப்பட்டார் என்பதும் நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும் ?

இரண்டு முறை இடைக்கால பிரதமராக இருந்த குல்சாரிலால் நந்தா, தன் கடைசிக் காலகட்டத்தில் அடையாளம் தெரியப்படாமல் வாழ்ந்து மறைந்ததை எப்படி மறக்க முடியும்? முதல்வராக இருந்த காமராசர் இறந்த போது, அவரது உடைமை சில நூறு ரூபாய்களும், இரண்டு ஜோடி ஆடைகளும்தான் என்பதை எவரால் மறுக்க முடியும்? அவரது அமைச்சரவையில் காவல் துறை அமைச்சராக இருந்த கக்கன், சட்டப்பேரவைக்கு மக்களோடு மக்களாகபேருந்தில் பயணம்செய்ததும், அரசு மருத்துவமனையில் பொதுமக்களோடு பொது மனிதராக அனுமதிக்கப்பட்டதையும் நினைத்தாலே வியப்பு மேலிடுகிறது.

திரிபுராவில் 20 ஆண்டுகள் முதல்வராக இருந்த மாணிக் சர்க்கார், பதவியை விட்டு விலகியவுடன் ஒரே ஒரு ஜோல்னா பையுடன் வெளியேறியதும், கார், பங்களா, தன் குடும்பத்தின் நான்கு தலைமுறையினருக்கு சொத்து சேர்க்காததும் கனவல்ல நிஜம்தான். முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் குடியரசுத் தலைவர் மாளிகையிலிருந்து கொண்டுவந்த சொத்து என்ன தெரியுமா ? பெட்டி நிறைய புத்தகங்கள் மட்டுமே. நம் நாட்டிலும் நாம் வாழ்ந்த காலத்திலேயே பதவி, பணம், வீடு, புகழ் இவற்றை சேர்த்துக் கொள்ளாத எளிமையான தன்னலமற்ற தொண்டுள்ளம் படைத்த தலைவர்களும் வாழ்ந்திருக்கிறார்கள். இப்போது ஏன் அப்படிப்பட்ட தலைவர்கள் உருவாகவில்லை? உருவாக்கப்படவில்லை? என்று கேட்பவர்கள் பின்வரும் விவரங்களைப் படியுங்கள்.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் மக்கள்தொகை குறைவு. மக்களில் 90 சதவீதம் வரை படித்தவர்கள். மந்தை மனப்பான்மை இல்லாதவர்கள் என்கிற எதார்த்தத்தை நாம் முதலில் ஒப்புக்கொள்ள வேண்டும். அங்கு பதவி என்பது அலுவலக வேலை மாதிரி. தங்கள் பதவிக்காலம் முடிந்ததும் அரசியலுக்கு டாடா காட்டி விட்டு சொந்த வாழ்க்கைக்கு எளிதாக திரும்பும் வழக்கம் உடையவர்கள். ஒபாமா சாதாரண குடிமகனாக கடைகளுக்கு வந்து வரிசையில் நிற்கிறார். இங்கு இன்று அரசியல்வாதிகளுக்கு கடைசி வரை எக்கச்சக்க சலுகைகள், மரியாதைகள்.

வெளிநாடுகளில் உள்ள தலைவர்கள் (டிரம்ப் தவிர) வெற்றி, தோல்வி இரண்டையும் ஒரே நிலையில் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உள்ளவர்கள். நாம் தோற்றாலும் நாடும், மக்களும் நன்றாக இருக்க வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனை உள்ளவர்கள். வாரிசு அரசியல் அங்கு அறவே கிடையாது. ஒரே மதம் என்பதால், பெரிய அளவில் மத வேறுபாடுகள், ஜாதி பிரிவினைகள் கிடையாது. மதத்தை, ஜாதியை முன்நிறுத்தி வாக்கு சேகரிக்கும் வழக்கம் கிடையாது. அதே சமயம் இனப் பாகுபாடு உண்டு. ஆனால், அது பொதுமக்களைப் பாதிக்காது.

தவறு செய்தால் தப்பித்துக் கொள்ளும் ஓட்டை — உடைசல் சட்டங்கள் மேலை நாடுகளில் கிடையாது. எந்த வழக்கும் வாய்தா, முன்ஜாமீன், பின் ஜாமீன் என்று சீரியல் மாதிரி இழுக்கும் நீதிமுறை கிடையாது. தெருவுக்கு 4 கட்சிகள், ஜாதிக்கு 100 கட்சிகள் என ஒவ்வொரு கட்சியிலும் பல பிரிவுகள் என்கிற அலங்கோல நிலை அங்கே இல்லை.மக்களும் அரசியல்வாதிகளை பெரிதாக எண்ணிப் போற்றுவதில்லை. தெய்வமாக நினைத்து

# பெருமை


உதயம் ராம்

கோயில் கட்டுவதில்லை. 'நீ எங்களைக் காப்பாற்றும் கடவுள் அல்ல; எங்களைப் பாதுகாக்கும் பணியை செய்யும் ஓர் அதிகாரி' அவ்வளவுதான் என்ற மனநிலையில் இருப்பவர்கள். பெரும்பாலும், எல்லோருமே தன்னிறைவு பெற்றவர்கள் என்பதால், அரசின் இலவசங்கள், சலுகைகளுக்காக ஏங்குவது, அரசியல் கட்சித் தலைவர்களிடம் மண்டியிடுவது போன்ற இழிநிலை அங்கே கிடையாது. அங்குள்ள மக்கள் எந்தத் தலைவன் தவறு செய்தாலும் கட்சி, இன வேறுபாடின்றி மொத்தமாக வீதிக்கு வந்து போராடும் போராட்ட குணம் உடையவர்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக அங்குள்ளவர்கள் தான் எப்படியிருந்தாலும், தங்களிடம் என்ன குற்றங்கள், குறைகள் இருந்தாலும் தன் தலைவன் நல்லவராக இருக்க வேண்டும்; குற்றங்கள் செய்யாதவராக இருக்க வேண்டும் என்பதில் உறுதியான கொள்கை உள்ளவர்கள். எந்த தேசத்தில் ஆட்சி செய்வோர் குற்றவாளிகளாகவும், மக்கள் நிரபராதிகளாவும் இருக்கிறார்களோ அந்த தேசத்தில் நல்ல தலைவர்கள் உருவாக வாய்ப்பே இல்லை.

பழைமையும் பெருமையும், ஜனநாயகத்துக்கு முன்னுதாரணமாக விளங்கும் நம் பாரத நாடு இந்தப் பட்டியலில் இடம்பெற்று விடுமோ என்ற அச்சம் இப்போது அதிகரித்து வருகிறது. இந்த அச்சத்தை நீக்கி, இந்தியாவிலும் நல்ல தலைவர்களைத் தேட வேண்டிய பொறுப்பு நம் அரசமைப்புக்கும், நமக்கும் உள்ளது. மக்கள் மாறினால் மட்டுமே மக்களாட்சி மலரும். காரணம், மக்களில் இருந்துதானே தலைவர்கள் உருவாகிறார்கள்; உருவாக்கப்படுகிறார்கள். எனவே, முதலில் நாம் மாறுவோம்! பின்பு நம் நாட்டை மாற்றுவோம்! நல்ல தலைவர்களைக் காண்போம்!

*1964*—இல் ஜவாஹர்லால் நேரு நோய்வாய்ப்பட்டிருந்த காலகட்டம். அப்போது, மேலைநாட்டுப் பத்திரிகையாளர்களில் சிலர், நேருவுக்குப் பிறகு இந்தியா சிதறுண்டு போகும் என்றார்கள்; ஆனால், வேறு சிலர் இந்தியா சிதறாமல் நிற்கலாம் என்றாலும், அங்கு ஜனநாயகம் நீடிக்க வாய்ப்புகள் குறைவு"என்று ஆரூடம் கூறினர். அதைப் பொய்யாக்கி, இந்தியாவில் ஒற்றுமையையும், ஸ்திரத் தன்மையையும், தொடர் வளர்ச்சியையும் உறுதி செய்ததில் அன்றைய காங்கிரஸ் தலைவர்களுக்குப் பெரும்பங்கு உண்டு. அவர்களில், முதன்மையானவராகக்





குறிப்பிடப்பட வேண்டியவர் கு.காமராஜ். ஆனால், இன்று அவர் தமிழ்நாட்டைத் தவிர்த்து—தேசத்தின் பிற பகுதிகளில் மறக்கடிக்கப்பட்ட தலைவராக ஆகிவிட்டாரே! என்று கவலையுடன் பதிவு செய்திருக்கிறார் புகழ்பெற்ற வரலாற்று ஆய்வாளர் ராமச்சந்திர குஹா.

அகில இந்திய காங்கிரஸ் தலைவராக காமராஜ் பதவி வகிக்கிறார். அது சமயம் நேரு தன் வீட்டில் நலிந்த நிலையில், ஓய்வு எடுத்து வருகிறார். அவரை காமராஜ் சந்திக்கிறார். 'ஐயா! எனக்கு உங்கள் அறிவுரை தேவை. உங்களுக்கு முழுமையான ஓய்வு தேவை என்கிறார்கள் மருத்துவர்கள். அப்படி நீங்கள் ஓய்வில் இருந்தால், உங்கள் பொறுப்பை நாங்கள் யாரிடம் கொடுப்பது?'"எனக் கேட்கிறார் காமராஜ். அதற்கு நேரு; 'சாஸ்திரியை வைத்துப் பாருங்கள்' என்கிறார். சிறிது நேரத் தயக்கத்துக்குப் பின்னால், 'இந்திரா காந்தியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'"என்று காமராஜ் கேட்க, அதற்கு நேரு தந்த பதில்; 'இப்போது வேண்டாம்' என்பதாகும்.

அதன் பிறகு, சென்னை திரும்பிய காமராஜ் , தன் நம்பிக்கைக்குரிய சகாவான சட்டப்பேரவைத் தலைவர் செல்லபாண்டியனிடம் இந்த உரையாடலைப் பகிர்ந்து கொள்கிறார். அத்துடன் சேர்த்து, காமராஜ் பேரவைத் தலைவரிடம், "பாண்டியன்! இந்திரா காந்தியின் பெயரை நான் சொன்னவுடன், தலைவர் நேரு, 'இப்போது வேண்டாம்' என்றுதான் சொன்னாரே தவிர, 'வேண்டாம்' என்று சொல்லவில்லை! ஆகவே, நம் தலைவர் மனதில் இந்திரா காந்தியின் பெயரும் இடம்பெற்றிருக்கிறது. இது எனது ஊகம்' என்றாராம்.

இவ்வாறு தன் தலைவனின் ஆழ்மனத்தில் கிடந்த எண்ணத்தை, தானே கேட்டறிந்து, அப்படியே முதலில் சாஸ்திரி, அடுத்து இந்திரா என்று நிறைவேற்றிக் காட்டிய தூய்மையான தேசத் தொண்டர் காமராஜர்.

காமராஜர் ஆட்சியைக் கொண்டு வருவோம்"என்று அரசியல் கட்சித் தலைவர்கள் அறிவிப்பதை நாம் நாளும் கேட்கிறோம். ஆனால், அதே சமயம் அப்போது, அரசின் உயர் பதவி வகித்த ஆளுமைகளின் பதிவுகளை, கருத்துகளை அறிந்து கொள்ள வேண்டுமல்லவா?

பி.சபாநாயகம் 1953—55—ஆம் ஆண்டுகளில் சேலம் மாவட்ட ஆட்சியராகப் பணிபுரிந்தார். அப்போது, ஒரு குறிப்பிட்ட வருவாய்க் கோட்டாட்சியர் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.வின் கோரிக்கை நியாயமற்றது என அதை நிராகரித்தார். இதனால், அந்த அலுவலரை மாற்றியே தீருவேன் என பகிரங்கமாக அறிவித்தார் அந்த எம்எல்ஏ. அதன்படி, பணியிட மாறுதல் ஆணையும் வந்தது; அதிகாரிகள் திகைத்தனர். ஆனால், அதிகாரியை ஆட்சியர் விடுவிக்கவில்லை. மாறுதல் பிறப்பித்தது சரியானது அல்ல என, சபாநாயகம் அரசுக்கு சுட்டிக்காட்டினார். முதல்வர் கவனத்துக்கு இது எடுத்துச் செல்லப்பட்டது. பிறப்பித்த அரசு ஆணை ரத்து செய்யப்பட்டு மறு ஆணை வந்தது. அரசு நிர்வாகத்தில் அரசியல்வாதிகளின் தலையீடு தவிர்க்கப்பட வேண்டும் என்பதே காமராஜ் ஆட்சியின் அடையாளம்.

தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசின் முன்னாள் செயலர் கே.வி.ராமநாதன் ஆட்சியராகப் பொறுப்பேற்கும் போது, அவருடன் புதிதாக நியமிக்கப்பட்ட சில மாவட்ட ஆட்சியர்களும் முதல்வர் காமராஜை சந்திக்கிறார்கள். அப்போது, அவர் சொன்ன அறிவுரை ஒன்றுதான்; 'முதல்வர் உங்களிடம் சொல்லச் சொன்னார்; செய்யச் சொன்னார் என்று பல பிரமுகர்கள் வருவார்கள்; நீங்கள் அதை நான் சொல்லியதாக எடுத்துக் கொள்ள வேண்டாம்; எதையும் ஆராய்ந்து பார்த்து சட்டப்படி, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதன்படி எடுங்கள்' என்பதுதான். சார்புத் தன்மை இல்லாமல் சட்டப்படி நிர்வாகம் நடைபெற வேண்டும் என்பதுதான் அவரது ஆட்சியின் தாரக மந்திரம்.

கட்சிப் பணி, மக்கள் சந்திப்பு, சுற்றுப்பயணம், அலுவலர்களுடன் கலந்துரையாடல்—என முதல்வருக்குப் பொறுப்புகள் அதிகம். அதை நன்கு உணர்ந்த காமராஜ் முக்கிய விஷயங்களில் முடிவெடுக்கும் பொறுப்புகளை, மூத்த அமைச்சர்களான சி.சுப்பிரமணியம், எம்.பக்தவச்சலம், ஆர்.வெங்கட்ராமன் — ஆகியோரிடம் பகிர்ந்தளித்திருந்தார்.

ஆணைகள் பிறப்பித்தப் பிறகு, தன் பார்வைக்கும்,



மருத்துவமனை) தனது 94—ஆவது வயதில் இறந்தார். அங்கு அவரது மகன் நரசிம்மனும், பேரன் கோபால் கிருஷ்ண காந்தியும், கல்கி சதாசிவமும், எம்.எஸ். அம்மாவும் இருக்கிறார்கள். செய்தி தெரிந்தவுடன் காமராஜர் வருகிறார்; அப்போதைய முதல்வர் கருணாநிதியும் வருகிறார். இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு அவரது உடலை எங்கே கொண்டு செல்வது என்ற பேச்சு எழுகிறது. அவர் வாழ்ந்த சென்னை தி.நகர் வீடு என்கிறார் நரசிம்மன். இல்லை; அவர் நேசித்த கல்கி தோட்டம் என்கிறார் சதாசிவம்.

பின்ஏற்புக்கும் வந்தால் போதும் என்ற ஏற்பாடும் செய்திருந்தார். இந்த முறையைத்தான் இன்று அதிகாரப் பகிர்வு என்ற மேலாண்மை நிர்வாகத் திறன்என்று குறிப்பிடுகிறார்கள். அத்தகைய அதிகாரப் பகிர்வுதான் தாமதத்தை நீக்கியது. இதுவும் காமராஜின் வெற்றிக்கு ஒரு காரணியாகும் என்கிறார் முன்னாள் தலைமைச் செயலாளர் வி.கார்த்திகேயன்.

காமராஜ் அதிகார ஆணவமோ, பதவி மோகமோ இல்லாத எளிய, இனிய மனிதர்; அரசு அலுவலர்களை அன்புடனும், மனித நேயத்துடனும் நடத்தி அவர்களுடைய திறமைகளை வளர்த்து, அவர்களது உழைப்பின் மூலம், தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் ஓயாது உழைத்தவர்; ஆகவேதான், மக்கள் மனங்களில் என்றும் வாழ்பவர் அவர் என்றும் புகழாரம் சூட்டுகிறார். சட்டப்படியே அனைத்தும் நடக்க வேண்டும் என்று சொன்னவர் அவர்; ஆனால், சமூக நீதிக்காக இட ஒதுக்கீடு செய்ய சட்டத்தில் இடமில்லை என்பதை அறிந்தவுடன் அரசமைப்புச் சட்டத்தையே திருத்த வழிகண்ட முதல் சட்டத் திருத்தத்தின் மூலவர்களில் ஒருவர் இவர்.

சுதந்திரப் போராட்டத் தியாகி, காந்திய பொருளாதார நிபுணர் ஜே.சி.குமரப்பா தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, அவருக்கு அரசு விருந்தினர் விடுதியில் தங்கும் வசதியும், அரசு வாகனமும், பாதுகாப்பும் வழங்க வேண்டும் என்று முதல்வர் காமராஜ் சொன்ன போது, அதற்கு விதியில் இடமில்லையே என்றாராம் தலைமைச் செயலாளர். இவ்வளவு பெரிய தியாகி, மேதைக்கு மிக முக்கிய பிரமுகர் (விவிஐபி) தகுதி இல்லை என்றால், விதியில் இடமில்லை என்றால் அந்த விதியையே திருத்துங்கள்; நான் கையெப்பமிடுகிறேன் என்றார் காமராஜ்.

1972—ஆம் ஆண்டு, டிசம்பர் 25—ஆம் தேதி மூதறிஞர் ராஜாஜி சென்னை பொது மருத்துவமனையில் (இன்று ராஜீவ் காந்தி

இதைக் கேட்ட காமராஜ், 'தேசத்தின் மிக உயர்ந்த பதவி வகித்த பெருமைக்குரியவர் இவர்; அவரை வீட்டுக்கும், தோட்டத்துக்கும் எடுத்துச் செல்வது சரியல்ல. மவுன்ட் ரோட்டில் அரசினர் கட்டட வளாகத்தில் அவர் பெயரிலேயே 'ராஜாஜி ஹால்' உள்ளது. அங்கு எடுத்துச் செல்வோம்; பொதுமக்கள் அங்கு வந்து அஞ்சலி செலுத்தட்டும்' என்றார். அருகிலிருந்த கருணாநிதியும் அதை அப்படியே ஏற்றார்.

உறங்கும் நேரம் தவிர, எப்போதும் மக்கள், மக்கள் என்று காமராஜ் தவித்துக்கொண்டிருப்பார்"என்றார் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன். இது ஒரு தாயின் தவிப்பு; தன்னலமற்ற தலைவனுக்கான தனி அடையாளம். அவர் பேசுவது குறைவு! பிறர்பேசுவதைக் கேட்பதே அதிகம். தொண்டர்களின் உணர்வுகளை அறிய அவர்கள் தோள்கள் மீது கைபோட்டு நடந்தார். மக்களின் தேவைகளை அறிய மக்களிடமே அவர் நேரடியாகத் தொடர்பு கொண்டார். இதுவே ராமச்சந்திர குஹாவின் கணிப்பு.

விருதுபட்டி என்ற சிறு நகரில் வேர்விட்டு, தமிழகமெங்கும் விழுதுகள் பரப்பி, தேசத்துக்கே நிழல் தந்த ஆலமரம் 1975—இல் சாய்ந்தது. அதற்குப் பின்பு 50 ஆண்டுகள் கடந்த பின்பும் புதிய வேர் தெரியவில்லையே! அதற்கு நாம் விதை போடவில்லையா? நீரூற்றி வளர்க்கத் தவறினோமா? அல்லது வளரும்போதே விழுதுகளை வெட்டினோமா? அனைத்துத் தடைகளையும் மீறித்தானே அந்தத் தலைமகன் வளர்ந்தான்;

பாசம் மிகு தமிழ்த்தாயே! உன்னிடம் கேட்கும் வரம் ஒன்று உண்டு!
மீண்டும் ஒரு தலைமகனை நீ பெற்றுத் தா!
அதுவரை தேசமே காத்திருக்கும்!




# சிவகாமியின்

## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

### ஜயஸ்தம்பம் 51

**வா**தாபி நகருக்கு இரண்டு காத தூரம் கிழக்கே ஒரு குன்று இருந்தது. சுற்றிலும் காடு அடர்ந்த அந்தக் குன்றின் ஒருபக்கத்துச் சரிவில் அடுத்தடுத்துக் குடைந்த குகைகள் இரண்டு இருந்தன. இரண்டு குகைகளும் குடையும் வேலை பூர்த்தியாகாமல் அரைகுறையாக விடப்பட்டிருந்தன. பௌத்தர்களோ சமணர்களோ அந்தக் குகைகளைக் குடைய ஆரம்பித்திருக்க வேண்டும். அப்புறம் எந்தக் காரணத்தினாலோ வேலையை நடுவில் நிறுத்தி விட்டுப் போயிருக்க வேண்டும். குகைகளில் ஒன்றுக்குள்ளேயிருந்து சல சல வென்ற சப்தத்துடன் ஒரு சிற்றருவி வெளியே வந்து கொண்டிருந்தது. குகையின் வெளியில் அந்த அருவி அங்குமிங்கும் தவழ்ந்து விளையாடி முத்து நீர்த்துளிகளை வாரி இறைத்துவிட்டுக் கீழ்நோக்கிச் சென்று அடர்ந்த விருட்சங்களின் நிழலில் மறைந்தது.

இவ்வளவு அழகான இயற்கைக் காட்சியின் ரம்யத்தைக் கெடுத்து அருவருப்பையுண்டு பண்ணக்கூடிய பொருள்கள் சில அருவியின் இருபுறத்துப் பாறைகளிலும் விருட்சங்களின் அடியிலும் காணப்பட்டன. அவை மனிதர்களின் மண்டை ஓடுகள், மாட்டுக் கொம்புகள் முதலிய காபாலிகர் கூட்டத்தின் சின்னங்களாகும். பாறைகள் சிலவற்றில் இரத்தக்கறை படிந்திருந்ததிலிருந்து, அந்தப் பாறைகள் சமீபத்தில் பலிபீடங்களாக உபயோகப்பட்டிருக்கின்றன என்பது தெரிய வந்தது.




மாலை நேரத்து மஞ்சள் வெயிலினால் பச்சை மரங்களும் பசும்பொன் நிறம் பெற்றுத் திகழ்ந்த நேரத்தில், மேற்கூறிய குகைகளுக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு மொட்டைப் பாறையிலே நாலுபேர் உட்கார்ந்திருந்தார்கள். தொலை தூரம் பிரயாணம் செய்திருந்த காரணத்தினால் அவர்கள் பெரிதும் களைப்படைந்திருந்தார்கள். ஆடைகள் அழுக்கடைந்திருந்தன. தலையில் ரோமம் சடை விழுந்திருந்தது. முகவாய்க் கட்டையில் ரோமம் அடர்ந்திருந்தது. அவர்களுடைய இளம்பிராயத்துக்குப் பொருந்தாத சுருக்கங்கள் முகத்தில் காணப்பட்டன. கண்கள் குழிவிழுந்து போயிருந்தன. ஆயினும், அந்தக் கண்களிலே ஒரு அசாதாரண ஒளி, இணையில்லா மனோதைரியத்தையும் எடுத்த காரியத்தை நிறைவேற்றும் உறுதியையும் காட்டும் ஜீவசக்தி, பிரகாசித்தது.

குன்றின் உச்சியில் ஒரு மனிதன் நின்று நாலாபுறமும் உற்று நோக்கிக்கொண்டிருந்தான். கீழே மொட்டைப் பாறையில் உட்கார்ந்திருந்தவர்கள் அடிக்கடி அவனை அண்ணாந்து நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று மேலே நின்ற மனிதன் குதூகலம் நிறைந்த குரலில், "அதோ!" என்றான். அந்தக் குரலிலிருந்தே அவன் நமது பழைய நண்பன் குண்டோதரன் என்பதை அறிந்து கொள்கிறோம்.

"அதோ!" என்ற சத்தத்தைக் கேட்டதும் மொட்டைப் பாறையில் உட்கார்ந்திருந்த நால்வரின் முகங்களும் மலர்கின்றன. அவன் சுட்டிக்காட்டிய திக்கை அவர்கள் ஆவலுடன் உற்றுப் பார்க்கிறார்கள். மரங்கள் அடர்ந்த காட்டுக்குள்ளேயிருந்து ஒருவன் வருகிறான். அவன் வேறு யாருமில்லை; பல்லவ




நாட்டு ஒற்றர் தலைவன் சத்ருக்னன்தான், மற்றவர்களைப் போல் அன்றிச் சத்ருக்னன் நன்றாக க்ஷவரம் செய்து கொண்டு சுத்தமான முகத்துடன் விளங்குகிறான். அதிலிருந்தே அவன் நகரத்துக்குப் போய் வருகிறான் என்று அறிந்து கொள்ளலாம்.

தோளிலே துணிப்பை தொங்க வந்த சத்ருக்னனை ஐந்து பேரும் சூழ்ந்து கொண்டார்கள். “சத்ருக்னா! காயா? பழமா சீக்கிரம் சொல்!” என்றார்கள்.

“பழந்தான்” என்று சொல்லிக் கொண்டே, சத்ருக்னன் தோளில் தொங்கிய பையை எடுத்து அவிழ்த்தான். அதிலிருந்த பழங்கள் கீழே விழுந்து உருண்டு ஓடின. அவற்றைப் பொறுக்குவதற்கு எல்லாரும் பட்ட அவசரத்திலிருந்து அவர்கள் எவ்வளவு தூரம் பசித்திருந்தார்கள் என்று தெரிய வந்தது. பசித்ததோ, இல்லையோ தரையில் விழுந்த பழங்களின் மேல் கவனம் செலுத்தாமல், சத்ருக்னன் என்ன சொல்லப் போகிறான் என்பதிலேயே கவனம் செலுத்திய ஒருவரும் அவர்களில் இருந்தார். அவர்தான் மாமல்லர் என்று சொல்ல வேண்டியதில்லை.

“சத்ருக்னா! பழம் என்கிறாயே? அப்படி என்றால் என்ன? சிவகாமியைப் பார்த்தாயா?” என்று கேடார்.

“ஆம் பிரபு, பார்த்தேன்!” என்று கூறி மறுபடியும் சத்ருக்னன் மௌனம் சாதித்தான்.

“ஏன் இப்படிப் பேசாமல் நிற்கிறாய்? மேலே சொல், சத்ருக்னா! எங்கே பார்த்தாய்? எந்த நிலையில் பார்த்தாய்?” என்று மாமல்லர் கேட்டார்.

“பிரபு! சிவகாமி அம்மையைப் பார்த்தேன். சௌக்கியமாக இருக்கிறார், கவலைக்கு ஒரு காரணமும் இல்லை. எங்கே பார்த்தேன், எப்படிப் பார்த்தேன் என்பதை விவரமாகச் சொல்ல வேண்டும் எல்லாரும் உட்காருங்கள், சொல்கிறேன்!” என்றான் சத்ருக்னன்.

அவ்வண்ணமே அனைவரும் பாறை மீது உட்கார்ந்தார்கள். சத்ருக்னன் சொல்லத் தொடங்கினான்: “நேற்று மாலை வளையல் வியாபாரியின் வேஷத்தில் வாதாபி நகருக்குள் பிரவேசித்தேன். கோட்டை வாசலுக்குள் பிரவேசிப்பதில் எவ்விதக் கஷ்டமும் இருக்கவில்லை. ஜனங்கள் தாராளமாய் நகருக்குள் வந்து கொண்டும், போய்க் கொண்டுமிருக்கிறார்கள். எந்த எதிரியின் படையெடுப்பையாவது எதிர்பார்த்தால் அல்லவா கோட்டையில் கட்டுக்காவல் வைக்கப் போகிறார்கள்? வாதாபியின் வீரப்படைகள் எட்டுத் திசையும் சென்று திக்விஜயம் செய்து கொண்டிருக்கும்போது....”

அச்சமயம் சேனாதிபதி பரஞ்சோதி குறுக்கிட்டு,



“என்ன உளறுகிறாய், சத்ருக்னா! திக்விஜயமாவது மண்ணாங்கட்டியாவது? தென்னாட்டுக்குச் சென்ற வாதாபிப் படைகள் தோற்றுத் திரும்பி ஓடி வந்திருக்கின்றன! வேங்கிக்குப் போன சளுக்க சைனியத்தின் பாடும் ஆபத்துத்தான் என்று தெரிகிறது. அப்படியிருக்க வாதாபிப் படைகளின் திக்விஜயமாவது...?” என்றார்.

சத்ருக்னன் பணிவுடன் கூறினான்: “சேனாபதி! வாதாபிப் படைகளின் திக்விஜயம் என்று நான் கூறியது என்னுடைய சொந்த மொழியல்ல. வாதாபி நகரத்தின் பிரதான நாலு வீதிச் சந்திப்பிலே ஒரு நெடிதுயர்ந்த ஜயஸ்தம்பம் நாட்டியிருப்பதைப் பார்த்தேன். அந்த ஜயஸ்தம்பத்திலே பிராகிருத மொழியில் எழுதியிருக்கும் மொழிகளையும் படித்தேன். கிட்டத்தட்ட அதில் எழுதியிருப்பதை ஞாபகம் உள்ள வரை அப்படியே சொல்லிப் பார்க்கிறேன்: “மகா ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ரணதுங்க சூர சளுக்க குலதிலக சப்தலோக தேவேந்திர புலிகேசிச் சக்கரவர்த்தி தென் திசையை நோக்கி விஜயம் செய்யப் புறப்பட்டுச் சென்று மகேந்திர பல்லவனை வடபெண்ணைக் கரையில் முறியடிக்க, மகேந்திரன் போரில் புறமுதுகிட்டோ டிக் காஞ்சிக் கோட்டைக்குள் பதுங்கிக் கொள்ள, புலிகேசிச் சக்கரவர்த்தி மேலும் தெற்கு நோக்கித் திக்விஜயம் கிளம்பிக் காவேரி நதிக்கு யானைப்பாலம் அமைத்துக் கடந்து, அங்கே சக்கரவர்த்தியிடம் அடைக்கலம் புகுவதற்குக் காத்திருந்த சேர சோழ களப்பாள பாண்டிய மன்னர்களின் சிரங்களில் தம் திருப்பாத கமலங்களை வைத்து அருள் புரிந்து, திரும்புங்காலையில், காஞ்சிக் கோட்டையைப் பலங்கொண்டு தாக்க, மகேந்திர பல்லவன் சரணாகதியடைந்து காப்பாற்ற வேண்டும் என்று காலில் விழுந்து கெஞ்ச, அவ்விதமே மகேந்திரனுக்கு அருள் புரிந்து, அவனுடைய உபசாரங்களையும் காணிக்கைப் பொருள்களையும் ஏற்றுக் கொண்டு, தென்னாட்டின் திக்விஜயத்தைப் பூர்த்தி செய்து, ஜயபேரிகை முழக்கி, வெற்றிச் சங்கு ஊதி, வாதாபி நகரத்துக்குத் திரும்பி வந்தது சாலிவாகன சகாப்தம் நாளது ஆண்டு, திங்கள், தேதி; கடல் சூழ்ந்த நில உலகம் உள்ளவரையில் இந்த வாதாபி நகரமும் இந்த திக்விஜய ஜயஸ்தம்பமும் சளுக்க சக்கரவர்த்தி குலமும் என்றென்றைக்கும் நின்று நீடித்துப் பொருகித் தழைத்து விளங்குவதாக!”

இவ்விதம் சத்ருக்னன் கூறி வந்ததைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள், “என்ன பொய்! என்ன கர்வம்! அந்த ஸ்தம்பத்தை இடித்துத் தள்ளாமல் விடுவதில்லை” என்றெல்லாம் கூறினார்கள்.

சிறிது அவர்கள் இடம் கொடுத்ததும், சத்ருக்னன் மேலும் கூறினான்: “பிரபு அந்த ஜயஸ்தம்பத்தில் இவ்விதம் நான் படித்ததும் என்னை நான் மறந்து விட்டேன். ஸ்தம்பத்தை நோக்கி ஒரு உதை விடலாம் என்று எண்ணிக் காலையும் தூக்கி விட்டேன். கடவுள் அருளால் நல்ல சமயத்தில் எதற்காக வாதாபி நகருக்கு வந்தோம் என்பது ஞாபகம் வந்தது. ஏதோ கால் தடுக்கி விழுந்தவனைப்போல் தொப்பென்று கீழே விழுந்து சமாளித்துக் கொண்டேன். வீதியில் ஜனக்கூட்டம் ‘ஜேஜே’ என்று இருந்தது. யாராவது பார்த்திருந்தால் விபரீதமாய்ப் போயிருக்கும்!” என்று கூறி நிறுத்தினான்.

“சத்ருக்னா! வாதாபிக்கு வந்த காரியம் உனக்கு நினைவில் இருந்தது பற்றிச் சந்தோஷம். ஆனால் அதைப்பற்றி இன்னமும் நீ சொல்லவில்லை!” என்று மாமல்லர் கோபம் தொனிக்கக் கூறினார்.

“பிரபு! மன்னிக்க வேண்டும். சளுக்கர்களின் பொய் சொல்லும் திறமைக்குச் சிறந்த ஞாபகச்சின்னமான அந்த ஜயஸ்தம்பத்தை விட்டு மேலே கிளம்பிச் சென்றேன். வாதாபி நகரின் மிதமிஞ்சிய ஐசுவரிய போகத்துக்கும் வாதாபி மக்களின் படாடோ ப வாழ்க்கைக்கும் பல அறிகுறிகளைப் பார்த்துக் கொண்டு போனேன். இந்தப் பெரிய நகரத்தில், கிழக்கு மேற்கிலும் தெற்கு வடக்கிலும் குறைந்தது காத தூரமுள்ள இந்தப் பிரம்மாண்டமான பட்டணத்தில், சிவகாமி அம்மையை எப்படித் தேடுவது, யாரை விசாரிப்பது என்று சிந்தனை செய்து கொண்டே போனேன். கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல், அடுத்தாற் போல் வந்த நாற்சந்தி வீதி முனையில் அம்மையைச் சந்தித்தேன்...”

“என்ன? நாற்சந்தி முனையிலா?” என்று பல குரல்கள் ஏக காலத்தில் எழுந்தன.

“ஆம்; நாற்சந்தி முனையிலேதான் பார்த்தேன். அம்மை அங்கே செய்து கொண்டிருந்த காரியத்தைக் கேட்டால் நீங்கள் பெரும் ஆச்சரியப்படுவீர்கள். எனக்கும் பார்த்தவுடனே ஆச்சரியமாயிருந்தது; வேதனையாகக் கூட இருந்தது. ஆனால், விசாரித்து விஷயம் தெரிந்து கொண்டதும் அளவில்லாத பெருமை அடைந்தேன். பிரபு! தமிழகத்துப் பெண்குலத்தின் பெருமையைச் சிவகாமி அம்மை நிலைநாட்டி விட்டார். நூறு காத தூரத்துக்கு அப்பால் எதிரிகளின் கோட்டையில் அநாதையாகவும் தன்னந்தனியாகவும் இருக்கும் நிலைமையில் அம்மையார் தமிழகத்துப் பெண்குலத்தின் தயாள குணத்தை நிலை நாட்டியிருக்கிறார்...”

“சத்ருக்னா! ஏன் இப்படி வளைத்து வளைத்துப் பேசிக் கொண்டிருக்கிறாய்? சிவகாமி என்ன காரியம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தாய்?” என்று மாமல்லர் கடுமையான குரலில் கேட்டார்.

“பிரபு சொல்லி விடுகிறேன்; வாதாபி நகரின்



நாற்சந்தியில் சிவகாமி அம்மை நடனம் ஆடிக்கொண்டிருந்தார்.....”

“ஆகா!” “இது என்ன?” “அவமானம்! அவமானம்!” “இதைத்தானா தமிழகத்துக்குப் பெருமை என்று சொன்னாய், சத்ருக்னா!” என்று தலைக்குத் தலை கூவினார்கள்.

“மன்னிக்க வேண்டும்; கொஞ்சம் பொறுத்துக் கொண்டு மீதியையும் கேளுங்கள். சிவகாமி அம்மை ஒரு பெருங் கும்பலுக்கு மத்தியில் நின்று ஆடுவதைப் பார்த்ததும் எனக்கும் சொல்ல முடியாத அவமானம் உண்டாயிற்று. கோபமும் ஆத்திரமும் பொங்கிக் கொண்டு வந்தன. கூட்டத்தில் நின்ற வாதாபி மக்கள் கொச்சையான பாஷையில் பேசிக் கொண்ட அருவருப்பான வார்த்தைகளைக் கேட்டதும் என் காதுகள் கொப்பளித்தன. ஓடிப் பாய்ந்து அம்மையின் முன் சென்று, ‘நிறுத்துங்கள் இந்த அவமானத்தை!’ என்று கூவ வேண்டும் என்பதாக ஆத்திரம் உண்டாயிற்று. நல்லவேளையாக அந்தச் சமயத்தில், நடனமாடிய அம்மைக்குப் பின்னால் நின்றவர்கள் மீது என் பார்வை விழுந்தது, ஆகா! அதை எப்படிச் சொல்வேன்? தமிழகத்தைச் சேர்ந்த ஸ்திரீ புருஷர்கள் பலரை அங்கே கையைப் பின்னால் சேர்த்துக் கட்டி நிறுத்தியிருந்தார்கள். அவர்களுக்கிடையே கையில் சாட்டை பிடித்த யமகிங்கரர் போன்ற மனிதர்கள் சிலர் நின்று கொண்டிருந்தார்கள். அந்தக் காட்சியைக் கண்டதும் பிரமித்து நின்றுவிட்டேன். பிரமை நீங்கிய பிறகு கூட்டத்திலிருந்தவர்களின் பேச்சுக்களை ஒற்றுக் கேட்டும், சந்தேகம் தோன்றாதபடி விசாரித்தும், மேற்படி அதிசயக் காட்சியின் காரணத்தை நன்கறிந்து கொண்டேன்...”

பிறகு சத்ருக்னன், சிவகாமி அம்மை நாற்சந்தியில் நடனமாட நேர்ந்தது ஏன் என்னும் காரணத்தைத் தான் தெரிந்து கொண்டபடி அவர்களுக்குக் கூறினான்: “தமிழகத்து ஆடவர் பெண்டிரைக் கொடுமையான சாட்டையடித் தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்காகவே சிவகாமி நடனமாடுகிறாள்” என்று தெரிந்ததும் மாமல்லர் முதலியவர்களுக்குத் தேகத்தில் புளகாங்கிதம் உண்டாயிற்று. பிறகு மேலே நடந்ததைப் பற்றி ஆவலுடன் கேட்டார்கள்.

“இனிய கானத்தைக் கேட்ட நாகசர்ப்பத்தைப் போல் நான் சிவகாமி அம்மையின் நடனத்தைப் பார்த்துக் கொண்டு பிரமித்து நின்றேன். அம்மை நடனத்தை முடித்துச் சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு திரும்பினார். திரும்பியதும் சில கண நேரம் அவருடைய கண்களில் சொல்ல முடியாத வியப்பும் திகைப்பும் காணப்பட்டன. அவர் பார்த்த திசையை நானும் நோக்கினேன்; அங்கே யார் நின்றது என்று நினைக்கிறீர்கள்?”

“யார்? யார்?”, “புலிகேசியா?” என்று கேள்விகள் எழுந்தன.

“இல்லை நம் சிநேகிதர் நாகநந்திதான்!” என்றான் சத்ருக்னன்.

(சபதம் தொடரும்)

# வளம்

## பூமித் தாயைக் காப்போம்

மனித இனத்தை மட்டுமல்ல, உலக உயிர்களைத் தாங்கியிருப்பது பூமியாகும். பூமியிருந்தால்தானே உயிர்கள் உயிர்வாழ முடியும். பூமி உயிர்களால் நிரம்பி வழிகிறது. அந்த பூமியைக் காப்பாற்ற வேண்டிய கடமை ஒவ்வோர் உயிருக்கும் உள்ளது. மனித உயிர்களுக்கு இந்தக் கடமை அதிகமாக உள்ளது.

‘அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார்ப் பொறுத்தல் தலை’ என்றார் திருவள்ளுவர். தன்னைத் தோண்டுகிறவர்களையும் தாங்கி நிற்கும் பூமியைப்போல தம்மை இகழ்வாரைப் பொறுத்தலே மிகச் சிறந்த பண்பாகும் என்று அவர் கூறுகிறார்.


பூமி என்பது வெறும் மண்ணும், மக்களும் அல்ல; மலை, கடல், காடுகள், ஆறுகள், ஏரிகள் எல்லாம் சேர்ந்ததுதான். இவை எல்லாம் அழிக்கப்படுகின்றன. மலைகளிலும், காடுகளிலும் ஆண்டாண்டு காலமாக வாழும் மக்களையும், கடல்சார் மக்களாகிய மீனவர்களையும் விரட்டியடித்துவிட்டு, அந்த நிலப் பரப்பில் இருக்கும் கனிமவளங்களைக் கொள்ளையடிக்கின்றனர்.

‘ஒவ்வொரு மனிதனின் தேவையையும் நிறைவேற்ற முடியும். ஆனால், ஒரே ஒரு மனிதனின் பேராசையைக்கூட நிறைவேற்ற முடியாது’ என்றார் மகாத்மா காந்தி. பேராசை கொண்ட மனிதனின் கொள்ளையால் இயற்கை வளங்கள் இல்லாமல் போகின்றன. இதற்கு அரசு அதிகாரிகள் துணை போகின்றனர் என்று சென்னை உயர்நீதிமன்றமே உறுதிசெய்துள்ளது.

உலகெங்கும் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 22—ஆம் தேதி பூமி தினம் **(Earth Day)** கொண்டாடப்படுகிறது. சுற்றுச்சூழலைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு வருவதே இதன் நோக்கம்.

முதன்முதலில் 1970—ஆம் ஆண்டு ஏப்ரல் 22—ஆம் தேதி அமெரிக்க செனட்டர் கேலார்டு நெல்சன் **(Gaylord Nelson)** புவி தினத்தை அறிமுகப்படுத்தினார்.

நாம் வாழும் இந்தப் பூமியை அன்னை பூமி என்று அழைக்கிறோம். நம் பூமித் தாய்க்கு வயது 4.5 பில்லியன் ஆண்டுகள் ஆகும். முதன் முதலில் மனிதக் குரங்கு ஆப்பிரிக்காவில் 25 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது. அந்த மனிதக் குரங்கின் பெயர் சகேலாந்த்ரோபஸ் டெக்கான்சிஸ் **(Sahelanthropus tchadensis).** புவியில் 3.8 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தண்ணீர் போன்ற திரவப் பொருள் காணப்பட்டது. இந்த பூமியில் 71 சதவீதம் கடல்களால் சூழப்பட்டுள்ளது. சூரியனிலிருந்து பூமி 14,95,98,262 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. 450 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு மீன்கள்தான் முதன்முதலில் பூமியில் தோன்றிய உயிரினமாகும். பூமியிலிருந்து 600 கிலோ மீட்டர் வரை காற்று



# காப்போம்

பரவியிருக்கிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

2.2 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்தான் நாகரிக மனிதன் தோன்றினான். முதல் நாகரிக மனிதனுக்கு பெயர் ஹோமோ ஹேபில்லிஸ் **(Homo habilis)** என்று பெயர்.

பூமியின் மொத்த தண்ணீரின் அளவு 138,60,00,000 கியூபிக் கிலோ மீட்டர்கள். மேலும் நன்னீர், நிலத்தடி நீரின் அளவு, ஆறு, ஏரி, குளம் இவற்றின் அளவு 1,06,33,450 கியூபிக் கிலோ மீட்டர்கள் ஆகும். ஒவ்வொரு நாளும் 1,170 கியூபிக் கிலோ மீட்டர்கள் அளவுள்ள தண்ணீர் பூமியிலிருந்து ஆவியாகி விடுகிறது. நிலத்தடி நீரின் அளவு மட்டும் 84,00,000 கியூபிக் கிலோ மீட்டர்கள். பூமியில் உள்ள பனிக்கட்டிகளாக உள்ள தண்ணீரின் அளவு மட்டும் 2,92,00,000 கியூபிக் கிலோ மீட்டர்கள்.

## உதயை மு. வீரையன்

புவியில் உள்ள மனிதன் உள்ளிட்ட உயிரினங்களை சூரியனின் வெப்பத்திலிருந்து ஓசோன் மண்டலம் காத்து வருகிறது.

மனிதன் தன் பேராசையால் பூமித் தாயை கொஞ்சம் கொஞ்சமாக அழித்து வருகிறான். 1950} லிருந்துதான் நகர மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. பூமியில் மனிதர்களால் வெளிவிடப்படும் கரியமில வாயு (கார்பன் டை ஆக்ஷைஸடு), சூரியனிலிருந்து வெளிவரும் வெப்பத்தைப் பிடித்துவைத்து பூமியின் வெப்பநிலை உயர்வுக்குக் காரணமாகிறது. ஒவ்வோர் ஆண்டும் ஏறக்குறைய 40 பில்லியன் மெட்ரிக் டன் அளவு கரியமில வாயுவை மனிதன் வெளிவிடுகிறான். கடந்த 134





கரியமில வாயு கடலில் அதிகமாகக் கரைவதால் கடல் அமிலத் தன்மையுள்ளதாக மாற வாய்ப்புள்ளது. இதனால் கடல்வாழ் உயிரினங்களின் வாழ்க்கையே கேள்விக்குறியாகிவிடும்.

வரும் 2030—2038—ஆம் ஆண்டுகளில் பூமியின் வெப்பநிலை மிகவும் அதிகரிக்கும். மேலும், இந்த ஆண்டுகளில் வறண்ட வானிலையே காணப்படும்.

இயற்கையைச் சார்ந்துதான் மனிதன் வாழ வேண்டும். இதை உணர்ந்தால் மனிதன் இயற்கையை அழிக்கமாட்டான். இனி வருங்காலத் தலைமுறையினர் வாழ்வதே கேள்விக்குறியாக உள்ளது.

ஏனெனில், இன்று உலகெங்கும் காணப்படும் ஒரு பிரச்னை தண்ணீர். உலகில் வளமாக உள்ள பகுதிகளையெல்லாம் பாலைவனமாக மாற்றி வருகிறோம். வளர்ச்சி என்ற பெயரால் இயற்கை வளங்களை அழித்து வருகிறோம்.

வருடத்தில், 1998, 2005, 2010, 2013 ஆகிய நான்கு ஆண்டுகள் பூமி அதிக வெப்ப நிலையோடு காணப்பட்டது. வெப்பநிலை உயர்வால் ஒவ்வொரு பத்தாண்டுக்கும் இரண்டு சதவீத உணவு உற்பத்தித் திறன் குறைய வாய்ப்புள்ளது. கடந்த 15 ஆண்டுகளாக பூமியின் வெப்பம் அதிகரித்துள்ளது.

அதற்கு உதாரணமாக, தமிழ்நாட்டின் திருச்சியை எடுத்துக் கொள்வோம். அண்மையில் கடந்த சில நாள்கள் நகரத்தின் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது. மேலும், கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக திருச்சி மிக அதிக வெப்பநிலையுடைய பகுதியாக மாறி வருகிறது. 1896 மே 2}ஆம் தேதி அதிகபட்சமாக 43.3 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.


பசுமையை அழித்ததால் போதிய பருவ மழை பெய்யத் தவறியதும், நிலத்தடி நீரை அதிக அளவில் சுரண்டியதுமே அதிக வெப்பநிலைக்குக் காரணமாகும். 2010—இல் திருச்சியின் வெப்பநிலை 40.4 டிகிரி செல்சியஸ், 2012—இல் 40.8 டிகிரி செல்சியஸ், 2013—இல் 41.8 டிகிரி செல்சியஸ், 2014—இல் 41.8 டிகிரி செல்சியஸ் இப்படி வெப்பநிலை உயர்ந்துள்ளது.

20—ஆம் நூற்றாண்டில் புவியின் வெப்பம் 0.6 டிகிரி செல்சியஸ் உயர்ந்துள்ளது. 95 சதவீதம் சூரிய வெப்பத்தைக் கடல் உறிஞ்சிக் கொள்கிறது. ஆனால், நாம் அந்த கடல் வளத்தையும் அழிக்க ஆரம்பித்து விட்டோம்.

நம் கண் முன்னே உயிரினங்கள் அழிந்து வருகின்றன. புவியின் வெப்பநிலை உயர்வைத் தடுக்க ஒரே வழி, உடனடியாக கரியமில வாயுவின் அளவைக் குறைக்க வேண்டும். பூமியில் உள்ள அனைத்துப் பாகங்களிலும் அடுத்த எட்டு ஆண்டுகளில் அதிக அளவில் மரங்களை நட்டு, மரங்களின் எண்ணிக்கையை உயர்த்தி “எங்கும் பசுமை’ என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

அடுத்ததாக நீர் ஆதாரங்களை பேணிக் காக்க வேண்டும். நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த வேண்டும்.






மழை நீரை 100 சதவீதம் சேமிப்பதை உறுதிப்படுத்த வேண்டும். பிளாஸ்டிக் பைகளை அறவே ஒழிக்க வேண்டும்.

தண்ணீரை வியாபாரமாக்கக் கூடாது. இவற்றையெல்லாம் செய்தால்தான் புவியின் வெப்பநிலை குறைந்து இயற்கை வளம் பெறும்.

• நாம் வாழும் இந்த பூமி சூரிய மண்டலத்தின் ஐந்தாவது பெரிய கோள். வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் இவை பூமியைவிடப் பெரியவை. சூரிய குடும்பத்தில் மொத்தமுள்ள எட்டு கோள்களில், வேறு எந்த கோளுக்கும் இல்லாத உயிர்கள் வாழக் கூடிய தனிச் சிறப்பு பூமிக்கு மட்டுமே உண்டு.

• சூரிய குடும்பத்திலுள்ள மற்ற கோள்களைப் போலவே, பூமியும் சூரியனைச் சுற்றி வருகிறது. பூமியின் விட்டம் 12,742 கி.மீ. அதன் சுற்றளவு 40,075 கி.மீ. இந்த பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்ள 23 மணி நேரம் 56 நிமிடம் 4.09 வினாடி எடுத்துக் கொள்கிறது. பூமி ஒரு மணி நேரத்திற்கு கிட்டத்தட்ட 1,000 மைல் (சுமார் 1674 கி.மீ.) வேகத்தில் சுழல்கிறது.

• ஒரு வினாடிக்கு 30 கி.மீ. தொலைவு என பூமி ஒரு முறை சுற்றுப் பாதையை முடிக்க 365 நாட்கள் (ஓர் ஆண்டு) ஆகிறது. இது ஒரே திசையில் அதாவது தன்சுழற்சியில் மேற்கிலிருந்து கிழக்காக சுற்றுகிறது. பூமி கிரகம் சுழலும் போது, சூரியனை எதிர்கொள்ளும் புறம் பகலைப் பெறுகிறது, மற்றொரு புறம் இருளில் உள்ளது.

• சுற்றுச்சூழல், நீர்நிலைகள் பாதுகாப்பு, மரம் வளர்ப்பு ஆகியவை குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி, பூமியையும், அதன் மீது வாழும் உயிரினங்களையும் காக்கும் வகையில் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் 22—ஆம் தேதி 'உலக பூமி தினம்' கொண்டாடப்படுகிறது.

• அமெரிக்காவைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் 'கேலார்ட் நெல்சன்' என்பவரின் தீவிர முயற்சியால் 1970—ஆம் ஆண்டு உலக பூமி நாள் 'எர்த் டே நெட்வொர்க்' எனும் அமைப்பால் தொடங்கப்பட்டது. இதன் மூலம் உலகம் முழுக்க உள்ள சுற்றுசூழல் ஆர்வலர்களை ஒன்று திரட்டி, பூமித் தாயின் மீது தொடுக்கப்பட்டு வரும் தாக்குதல்களை தடுத்து நிறுத்தவும், பூமியின் தற்போதைய நிலை குறித்த விழிப்புணர்வு பிரசாரங்களையும், அது தொடர்பான கருத்து பரிமாற்றங்களையும் உலக மக்களிடையே இந்நாளில் ஏற்படுத்தி வருகிறது. இந்த அமைப்பு, இதுவரை 193 நாடுகளை தன்னுடன் இணைத்துக் கொண்டு செயல்பட்டு வருகிறது. வரும் 2050—ஆம் ஆண்டிற்குள் மனிதனின் பேராசையினால் பூமியை அண்டி வாழும் ஐம்பது சதவீத உயிரினங்கள் பூமியை விட்டு விலகி விடும் என்ற அதிர்ச்சி செய்தியை புவியிலாளர்கள் தெரிவிக்கின்றனர். இது பூமித் தாய்க்கு நாம் செய்யும் மாபெரும் துரோகமாகும்.

இந்த பிரபஞ்சத்தில் அனைவருக்குமான ஒரே வீடு, நாம் வாழும் இப்பூமி தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பூமியில் பசுமை நிறைந்த நாட்டில் வளத்திற்கு பஞ்சமிருக்காது. பூமித் தாய் வளம் இழந்து, வறட்சியானால் நாட்டில் பஞ்சம் ஏற்படும்.நம்மை சுமந்து காக்கும் பூமியை, நாம் நல்ல முறையில் காக்க வேண்டும். அது மனித குலத்தின் கடமை. நாம் வாழும் நம் பூமியை இப்போது நாம் சேதப்படுத்தினால், வருங்கால சந்ததியினர் வாழ மற்ற கோள்களைத் தான் நாட வேண்டும், எனவே, இந்த பூமி தினத்தில் பூமியை செம்மைப்படுத்தி, வளப்படுத்தி காப்போம், அனைத்து உயிரினங்களையும் வாழ வைப்போம் என உறுதி கொள்வோம்.

இயற்கை வளம் பெற்றால் உயிரினங்களும் மனித குலமும் புவியில் உயிர் வாழ முடியும். நம் வருங்காலத் தலைமுறையினருக்கு இயற்கை என்னும் பொக்கிஷத்தை கொடையாகக் கொடுத்து நம் பூமித் தாயைக் காப்போம்.



# மருத்துவத்

## தசை இழப்பை சந்திக்காமல் கொழுப்பைக் குறைப்பது எப்படி?

உடல் எடையைக் குறைக்க பல வழிகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் வெவ்வேறு செயல்முறையை பின்பற்றுகின்றன. இருப்பினும் அவை அனைத்தும் ஒரே விஷயத்தை அடிப்படையாகக் கொண்டவை. அது தான் கலோரி டெஃபிசிட் எனப்படும் கலோரி பற்றாக்குறை. அதாவது நீங்கள் எடுத்துக் கொள்ளும் கலோரிகளின் அளவைக் காட்டிலும் கூடுதல் கலோரிகளை செலவிடுவது.

உடல் சேகரித்து வைத்திருக்கும் கொழுப்பை உடலுக்கு தேவையான ஆற்றலாக பயன்படுத்துவது தான் இதன் பின்னால் இருக்கும் அம்சம் என்று கூறுகிறார் பாப்லியஸ் ப்ராகா. பிரேசிலின் சாவோ பாலோவில் உள்ள நூவே டி ஜூலியோ என்ற மருத்துவமனையில் விளையாட்டு வீரர்களுக்கான மருத்துவராக அவர் பணியாற்றி வருகிறார்.

இந்த கலோரிகள் பற்றாக்குறையை ஆரோக்கியமான உணவு பழக்க வழக்கங்கள் மற்றும் வழக்கமான உடற்பயிற்சிகள் மூலம் எட்ட முடியும். இருப்பினும் எவ்வளவு கலோரிகளை செலவிடுகிறோம், உணவின் தரம் ஆகியவற்றை கருத்தில் கொள்ளும் போது எடை இழப்பானது உடலின் கொழுப்பை குறைப்பதால் மட்டும் ஏற்படாது. தசைகளின் நிறையையும் குறைத்து உடல் எடை குறையும். கூடுதலான கொழுப்பை போன்றே குறைவான தசை நிறையை கொண்டிருப்பதும் ஆபத்தானது தான். உங்களின் வளர்சிதை மாற்றம் மெதுவாகும், கொழுப்பைக் குறைக்க தேவையான உடலின் செயல்திறன் குறையும், சருமம் தொய்வுற ஆரம்பிக்கும்.

தசை இழப்பானது உங்களின் உடல் வலிமை, நீண்ட கால ஆரோக்கியம் ஆகியவற்றை பாதிக்கும். உடல் எடைக் குறைப்பை சீராக கொண்டு செல்வதை கடினமாக்கும். 'அக்கார்டியன் தாக்கத்தை' அதிகரிக்கும். எவ்வளவு எடையைக் குறைத்திருக்கின்றோம் என்பதைக் காட்டிலும், உடலில் மதிப்பு மற்றும் செயல்பாட்டை கொண்ட அம்சங்களை எவ்வாறு பாதுகாக்கின்றோம் என்பது தான் தரமான எடைக் குறைப்பு பயிற்சியாக அறியப்படுகிறது, என்று கூறுகிறார் எலைன் டியாஸ். அவர் சாவோ பாலோ பல்கலைக்கழகத்தில் நாளமில்லா சுரப்பியியலில் முனைவர் பட்டம் பெற்ற, வளர்சிதை மாற்ற ஆலோசகராக பணியாற்றி வருகிறார்.

### உடல் எடையைக் குறைக்கும் போது தசையிழப்பை சந்திப்பது ஏன்?

ஒருவர் உடல் எடை குறைப்பு நடவடிக்கைகளில் இருக்கும் போது, குறைவான ஆற்றலே கிடைக்கிறது என்பதை உடல் புரிந்து கொள்கிறது. தன்னை தற்காத்துக் கொள்ளும் பாதுகாப்பு செயல்முறையாக உடல் உடனடியாக பாதுகாப்பு 'நிலைக்கு' செல்கிறது. ஓய்வாக இருக்கின்ற நேரத்திலும் அதிக ஆற்றலை பயன்படுத்தும் திசுக்களைக் கொண்டது தசைகள். கலோரி பற்றாக்குறையில் உடல் இருக்கும் போது, 'ஆடம்பரமாக' செயல்படும் திசுக்களாக






ஜியுலியா கிரான்சி


தசைகள் பார்க்கப்படுகின்றன. புரியும்படி சொல்ல வேண்டும் என்றால், நிறுவனம் ஒன்றில் நெருக்கடி ஏற்படும் போது செலவுகளைக் குறைக்க அதிக செலவீனங்களைக் கொண்ட துறைகளின் பட்ஜெட்டைக் குறைப்பது போன்று தான் இதுவும்.

இத்தகைய சூழலில் உடல், தசைகளின் இயக்கத்தை குறைக்கிறது. உடல் எடை குறைப்புக்கான கட்டுப்பாடுகள் அதிகமாக இருந்தாலோ அல்லது மிகவும் மோசமான திட்டமிடுதலோடு களம் இறங்கினாலோ உடலின் ஆற்றலை சேமிக்க தசை திசுக்கள் உடைபடும். தசைகளைப் பாதுகாக்க, அதற்கு என்ன தேவையோ அதனை நீங்கள் தர வேண்டும்.

நீரேற்றம் மற்றும் புரதம்

நம்முடைய தசைகளில் 70% நீரால் ஆனவை. எனவே அவை சரியாக செயல்பட தேவையான அளவு நீர் அருந்துவது அவசியம். உடலின் ஒவ்வொரு கிலோ எடைக்கும் 30 முதல் 40 மில்லிலிட்டர் வரை நீர் அருந்த வேண்டும்.

உடலில் செல்களின் இயக்கத்திற்கும் தசைகளை மீட்கவும் நீர் மிகவும் அவசியமானது. நீர்ச்சத்தை இழந்தால் நிறை மற்றும் செயல்திறன் என இரண்டையும் தசைகள் இழக்கும்," என்று தெரிவிக்கிறார் வளர்சிதை மாற்ற ஆலோசகர் எலைன் டியாஸ். தேவையான அளவு புரதத்தை உட்கொள்வதும் அவசியம்.




ஊட்டச்சத்து மற்றும் விளையாட்டுக்கான சர்வதேச சமூகத்தின் படி, தசைகளின் வளர்ச்சிக்கும், 'லீன் மாஸை' சீராக பராமரிக்கவும், உடற்பயிற்சியுடன் உடலின் ஒவ்வொரு கிலோ எடைக்கும் 1.4 கிராம் முதல் 2 கிராம் வரை புரதத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒருவர் 70 கிலோ எடை கொண்ட நபராக இருந்தால் அவர் நாள் ஒன்றுக்கு 98 முதல் 140 கிராம்புரதத்தை ஒரு நாளைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

சிறந்த கலோரி டெஃபிசிட் முறை

கலோரி டெஃபிசிட் அல்லது, நீங்கள் செலவிடும் கலோரியை விட எவ்வளவு குறைவான அளவு கலோரியை எடுத்துக் கொள்கிறீர்கள் என்பதில் கவனம் தேவை. அது மிதமான அளவாக இருக்க வேண்டும். "பற்றாக்குறை 500 கலோரிகள் வரை செல்லலாம். மிகவும் தீவிரமாக அதை பின்பற்றினால் உடலானது தசைகளுக்கான ஆற்றலை செலவிடத் துவங்கும். கலோரி பற்றாக்குறை மிகவும் அதிகமானால் 'அக்கார்டியன்' தாக்கத்திற்கு வழி வகுக்கும். ஏன் என்றால் நீங்கள்




உங்களின் தசைகளை இழக்கும் போது உடலின் வளர்சிதை மாற்றம் குறையும்," என்று நிபுணர்கள் விளக்குகின்றனர்.

ஓய்வாக இருக்கும் போது சுவாசித்தல், இரத்தத்தின் சுழற்சி போன்ற முக்கியமான செயல்பாடுகளை நடத்த தேவையான குறைந்தபட்ச ஆற்றல் அளவு 'அடிப்படை வளர்சிதை அளவு' என்று அழைக்கப்படுகிறது. பெண்களுக்கு இது குறைவாக உள்ளது. எனவே பெண்களும், ஏற்கனவே குறைந்த அளவே தசைகள் கொண்டிருக்கும் நபர்களும் கலோரி பற்றாக்குறை முறையை பின்பற்றும் போது கவனமாக இருக்க வேண்டும்.

500 கலோரி அளவுக்கு குறைக்க முடியவில்லை என்றால், 300—ல் இருந்து ஆரம்பிக்கலாம் என்று அறிவுறுத்துகிறார் டியாஸ். டியாஸின் அறிவுரையை வலியுறுத்தும் ப்ராகாவும், "இது பாதுகாப்பான முறை. ஆனால் இது புரதம் உட்கொள்ளுதல் உள்ளிட்ட நல்ல சமநிலையை அடிப்படையாகக் கொண்டிருக்கும் முறை," என்று கூறுகிறார். உதாரணத்திற்கு சாதம், பீன்ஸ், இறைச்சி அல்லது முட்டை மற்றும் காய்கறிகள் அடங்கிய தட்டை அவர் குறிப்பிடுகிறார். "குறைந்தது மூன்றில் ஒரு பங்கு உணவு புரதம் நிறைந்ததாக இருக்க வேண்டும் என்பது முக்கியம்."

உடல் இயக்கம் மிகவும் முக்கியம் உணவோடு சேர்த்து உடற்பயிற்சியும் முக்கிய பங்காற்றுகிறது. கொழுப்பைக் குறைத்து தசை வலிமையை அதிகரிக்க வேண்டும் என்பது தான் இலக்கு என்றால், நீங்கள் தேர்வு செய்யும் உடற்பயிற்சியும் மிகவும் முக்கியமானது. "வலிமை கூட்டும் உடற்பயிற்சிகளான **(Strength exercises)**, எடை பயிற்சி **(weight training)** போன்றவை தசை நிறையை பராமரிக்கவும் அதிகரிக்கவும் உதவும்.

டியாஸைப் பொறுத்தமட்டில், கொழுப்பை குறைத்தல் அல்லது தசை நிறையை அதிகரித்தல் என ஏதேனும் ஒன்றில் மட்டும் உடல் கவனம் செலுத்துவது இயல்பானது. "இருப்பினும் சில நேரங்களில், மெனோபாஸ் முடிந்த பெண்களுக்கு, திட்டமிடல் சரியாக இருந்தால் இரண்டையுமே அடைய இயலும்." குறைந்த அளவு கொழுப்பை வைத்திருப்பதைக் காட்டிலும், நல்ல அளவில் தசைகளை பராமரிப்பதும் முக்கியமானது.

உடல் பருமன், டைப்—2 நீரிழிவு நோய், மன அழுத்தம், கார்டியோ வாஸ்குலார் நோய், வயோதிகத்தால் ஏற்படும் உடல் நலக்கோளாறுகள் போன்றவற்றில் இருந்து உங்களை பாதுகாக்க தசை நிறை உதவும். "அதனால் தான் வயதாகும் போது தசைகள் மிகவும் முக்கியமானவை. உடலுக்குத் தேவையான ஹார்மோன்களை உற்பத்தி செய்யும் சுரப்பியல் உறுப்பாகும். இது மூளை செயல்பாட்டை மேம்படுத்தும் இரிசினை சுரக்கிறது. இது அல்சைமர், பார்கின்சன் உள்ளிட்ட சில நோய்கள் ஏற்படுவதில் இருந்தும் உங்களைக் காக்கும்," என்று டியாஸ் கூறுகிறார்.

உங்களின் தசைகளை பராமரிக்க தேவைப்படும் மற்றொரு முக்கியமான விசயம், உங்களின் உணர்ச்சிகளில் கவனம் செலுத்துதல். "உடல் எடையைக் குறைத்து, உடலை கட்டுக்கோப்பாக வைத்திருக்க நீங்கள் மேற்கொள்ளும் பயணம் கூடுதலாக உங்களுக்கு அழுத்தத்தை தரக் கூடாது. அதிகப்படியான தேவையை (உடல் எடை குறைப்பு இலக்கை) நோக்கி ஓடினால் உங்களின் ஆரோக்கியத்தை நீங்கள் மேலும் மோசமாக்கிக் கொள்வீர்கள்," என்று எச்சரிக்கிறார் ப்ராகா.

ஒருவரின் யதார்த்த வாழ்க்கையோடு தொடர்புடையதாக அவரின் திட்டமும் அமைய வேண்டும் என்பது மிகவும் முக்கியம் என்கிறார் ப்ராகா. "உடற்பயிற்சிக்கான நேரம், வேலை, ஓய்வு அனைத்தும் தினசரி வாழ்வில் சரியானதாக இருக்க வேண்டும். முடிவுகள் வாழ்க்கைத் தரத்தோடு சேர்ந்து வர வேண்டும். அது தான் உண்மையான இலக்கு," என்றும் அவர் கூறுகிறார்.

பொறுப்பு துறப்பு: இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். அய்தமிழ் இந்த தகவல்களுக்கு பொறுப்பேற்காது.)



படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

# வெறுப்போம்

## இன்செல்’ மனிதர்கள் ஜாக்கிரதை !

அறிவும், ஆற்றலும், திறமையும் அனைவருக்கும் சமம். எந்த நாடு பெண்மையைப் போற்றுகிறதோ, அதுவே அந்த நாடு முன்னேறுவதற்கான முதல்படி. சமூகம் என்பது பெண்களையும் உள்ளடக்கியதே. அவர்கள்தான், இந்த சமூகத்தையும், உயரிய பண்பாட்டையும், நெறிமுறைகளையும், நல்ல பழக்கவழக்கங்களையும் பேணிக் காப்பவர்கள்.


உலகின் இரு கண்களாக ஆண், பெண் உள்ளனர். உள்ளூர் தொடங்கி, உலகம் வரைக்கும், அறிவியல் தொடங்கி, அரசியல் வரைக்கும், மண் முதல் விண் வரை அனைத்துத் துறைகளிலும், ஆண்களுக்கு இணையாக பெண்களும் சாதனை படைத்து, அப்பழுக்கற்ற திறமைகளுக்கு சொந்தக்காரர்களாக இந்தக் கால பெண்கள் விளங்குகிறார்கள்.

நிலம், ஆறு, மொழி முதலியவற்றை தாயாகச் சிறப்பித்துக் கூறுவது நம் நாட்டின் பண்பாகும். “தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்‘ என்று பெண்களைப் போற்றுகிறார் வள்ளலார். “பெண்களைப் பேணிக் காக்காத இல்லம், இறைவன் இல்லா ஆலயம்‘ என்றனர் நம் முன்னோர்.

“பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான், புவி பேணி வளர்த்திடும் ஈசன், மண்ணுக்குள்ளே சில மூடர், நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார்’ என்றார் மகாகவி பாரதியார். அதாவது, பெண்களுக்கு அறிவும், ஞானமும் பிறப்பிலேயே உள்ளது. பெண்களின் அறிவுக்கு பிற்போக்குக் கட்டுப்பாடுகளால் தடை போட்டு, அவர்கள் கல்வி பெறக் கூடாது; வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது; சுதந்திரமாக இருக்கக் கூடாது என பெண் முன்னேற்றத்துக்கு எதிராக சொல்லி வைத்தவர்களை மூடர்கள் எனச் சாடுகிறார் மகாகவி பாரதியார்.

ஒரு பெண்ணுக்கு கல்வி அளித்தால், அந்தக் குடும்பத்திற்கே கல்வி அளித்தது போலாகும். எனினும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளும், வன்ம எண்ணங்களும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன. தன்னை விரும்ப மறுக்கும் பெண்ணைத் தாக்குவது, கத்தியால் கீறுவது, குத்திக் கொல்வது, அமிலத்தை வீசி முகத்தைச் சிதைப்பது, ரயில், வாகனங்களில் பயணிக்கும் போது கீழே தள்ளுவது, வரதட்சிணை காரணமாகத் தற்கொலை செய்யத் தூண்டுவது போன்ற பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் நாளும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன.

இன்றைக்கு கல்வி, வேலைவாய்ப்பு, பொது வாழ்வில் பங்கேற்பு எனப் பெண்களின் வளர்ச்சி பெருமையுடன் அடையாளப்படுத்தப்பட்டாலும், இன்னமும் அவர்களின் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. நாடு பொருளாதார வளர்ச்சியிலும், கல்வி வளர்ச்சியிலும் எவ்வளவுதான் முன்னேறினாலும், இன்னும் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் தீர்ந்தபாடில்லை. இதற்குக் காரணம், ஆண்களிடையே காணப்படும் ஆதிக்க மனநிலைதான். பெண்களுக்கு எதிரான இத்தகைய ஆண் ஆதிக்க மனநிலையும், பாலின பாகுபாடுகளுக்கும் காரணம் அவர்களின்



# வெறுப்பை !

பெற்றோர்தான். அதாவது, ஆண் மகவுதான் தன்னை எதிர்காலத்தில் காப்பான் என்பதற்காக, ஆண் குழந்தைகளை அதிக முக்கியத்துவமும், சுதந்திரமும் கொடுத்து வளர்ப்பதும், பெண் குழந்தைகளைத் தாழ்த்தி, மனம் நோகும்படி எடுத்ததற்கெல்லாம் குறை சொல்லி வளர்ப்பதும் அவர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களின் தன்னம்பிக்கையைச் சீர்குலைக்கிறது.

பசியும், தாகமும், உறக்கமும், உடல் வலியும், மன வலியும் இருவருக்கும் ஒரே மாதிரிதான் என்பதை பெற்றோர் உணர வேண்டும். அவர்களின் அனைத்துச் செயல்பாடுகளிலும், இருவரையும் ஒரே மாதிரி பாராட்டி, ஊக்கப்படுத்த வேண்டும். பெற்றோரே, ஆண், பெண் குழந்தைகளைப் பாகுபாடு காட்டி வளர்த்தால், நாட்டில் கருணையற்ற ஆண்களும், தன்னம்பிக்கையற்ற பெண்களும்தான் உருவாவர். இதற்கு அரசுகளைக் குறை சொல்லிப் பயனில்லை.




**பாறப்புறத் ராதாகிருஷ்ணன்**

இப்போது உலகம் முழுவதும் சமூகவலைதளங்களில் “இன்செல்’ எனப்படும் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிராக வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடும் குழுக்கள் இயங்குவதாக கண்டறியப்பட்டுள்ளது. இதை 1997—ஆம் ஆண்டில் கனடா நாட்டைச் சேர்ந்த அலனா என்ற மாணவி “அலனாவின் விருப்பமில்லாத பிரம்மச்சரிய திட்டம்‘ என்ற தனது தனிப்பட்ட இணையதளம் மூலம் உருவாக்கினார். பிறகு, 2010—களில் இந்த வார்த்தை மிகவும் பிரபலமானது.

இன்செல் என்பது ‘ தன்னிச்சையான செலிப்ரேட் ‘ என்பதைக் குறிக்கிறது , மேலும் இது இன்செல் சமூகத்தில் உள்ள தனிநபர்களால் தங்களை விவரிக்க ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சொல்லாகும். இன்செல் சமூகம் என்பது ஆண்களை (பெரும்பாலும் இளம், வெள்ளை ஆண்கள்) கொண்ட ஒரு ஆன்லைன் சமூகமாகும். இன்செல் சித்தாந்தம் , இன்செல்களுக்கு பாலியல் மற்றும் காதல் உறவுகள் மறுக்கப்படுகின்றன, மேலும் இதற்கு பெண்கள்தான் காரணம் என்ற கருத்தை மையமாகக் கொண்டுள்ளது . இன்செல் கலாச்சாரத்திற்குள் பெண்களும் சிறுமிகளும் ஒரே மாதிரியாக, புறநிலையாக மற்றும் மனிதாபிமானமற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள் — அவர்கள் மரபணு ரீதியாக தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். அவற்றின் உச்சத்தில், இன்செல்ஸ் பெண்கள் மற்றும் எப்போதாவது பாலியல் ரீதியாக சுறுசுறுப்பான ஆண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை உள்ளிட்ட வன்முறையை, இன்செல்ஸ் பாலியல் உறவுகளை மறுப்பதற்கான ‘தண்டனையாக’ மன்னிக்கிறது (அவர்கள் உரிமையுடையவர்கள் என்று நம்புகிறார்கள்).

சமூகத்திற்குள் தவிர்க்க முடியாத ஒரு

> **We are – each and every one of us – unlearning misogyny. It's going to take some time. But be aware and active of your prejudices. Notice when they kick in and resist. Fight to stay soft and open. Step back and squint hard.**
>
> GLENNON DOYLE

படிநிலை இருப்பதாக இன்செல்ஸ் நம்புகிறார்கள் — பெரும்பாலும் உடல் கவர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது — மேலும் அவர்கள் தங்களை இதன் அடிமட்டத்தில் வைக்கிறார்கள். முன்னரே தீர்மானிக்கப்பட்ட நடத்தை மற்றும் சூழ்நிலையின் இந்த கோட்பாட்டை ஆதரிக்க, மரபியல் மற்றும் பரிணாம உளவியல் தொடர்பான கோட்பாடுகளுடன் (உதாரணமாக, 'மிகச் சிறந்தவர்களின் உயிர்வாழ்வு' என்ற கருத்து) சில நேரங்களில் பலவீனமான இணைப்புகள் உருவாக்கப்படுகின்றன. பெண்கள் அனைவரும் ஆல்பா ஆண்களுடன் 'இணைந்து' இருக்க விரும்புவதற்காக 'திட்டமிடப்பட்டுள்ளனர்' என்றும், இதைச் செய்வதற்காக மற்ற ஆண்களை கையாளவும் ஏமாற்றவும் செய்வார்கள் என்றும் சிலர் நம்புகிறார்கள்.

இன்செல்ஸ் இந்த உணரப்பட்ட படிநிலையின் அடிமட்டத்தில் இருப்பதாக நம்புவதால், இன்செல் தகவல்தொடர்புகள் பெண்கள் மற்றும் சில ஆண் குழுக்களுக்கு எதிரான ஆத்திரம் மற்றும் வெறுப்பை மையமாகக் கொண்டது மட்டுமல்லாமல், சுய வெறுப்பு, பயனற்ற தன்மை மற்றும் நம்பிக்கையின்மை போன்ற உணர்வுகளையும் உள்ளடக்கியது.

'கருப்பு மாத்திரையை எடுத்துக் கொண்ட' இன்செல்கள் (இந்தக் கட்டுரையில் இன்செல் சொற்களஞ்சியத்தை பின்னர் பார்ப்போம்) தங்கள் உணரப்பட்ட விதியை ஏற்றுக்கொண்டனர் — அவர்கள் எப்போதும் தாழ்ந்தவர்களாகவும், இருப்பதாக அவர்கள் நம்பும் படிநிலையின் அடிமட்டத்தில் இருப்பவர்களாகவும் இருப்பார்கள்.

இன்செல் சமூகத்தின் சுய—அறிக்கை ஆராய்ச்சி அனைத்து பின்னணியிலிருந்தும் இன்செல்கள் இருப்பதாகக் காட்டினாலும், பெரும்பாலான இன்செல் சித்தாந்தம் இன வெறுப்பின் கூறுகளையும், சிறப்பியல்பு பெண் வெறுப்பையும் உள்ளடக்கியது. பெண்களுடன் அதிக வெற்றி பெற்றதாகக் கருதப்படுவதால், கறுப்பின ஆண்கள் பெரும்பாலும் குறிவைக்கப்படுகிறார்கள், மேலும் வெள்ளை மேலாதிக்க சித்தாந்தங்களுடன் தொடர்புகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

பொதுவாக, "இன்செல்' என்றால், "தன்னிச்சையற்ற பிரம்மச்சாரி' என்று பொருள். அதாவது, "இன்வாலன்டரி செலிபேட்' என்பதன் சுருக்கம். இத்தகையோர், பெண்களை வெறுக்கும் எண்ணங்களையும், அவர்களுக்கு எதிரான செயல்களில் ஈடுபடுபவர்களாகவும் இருப்பார்கள். அதோடு இவர்கள், ஜனநாயகத்துக்கு எதிராக, வன்முறை மற்றும் தீவிரவாதத்தையும்

> "Gender equality is not about women, and it is not about men - it is about making workplaces work for everyone. Together, we can fix work, not women."
>
> Michelle King

ஆதரிப்பவர்களாகவும், இனவெறி சிந்தனை கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

பெண் வெறுப்பு கருத்துகள் அல்லது நடத்தைகளைக் கொண்ட ஒருவரை விவரிக்க "இன்செல்' என்ற வார்த்தையை இழிவுபடுத்தும்

> **This is not a men vs. women issue. It's about people vs. prejudice.**
>
> **Laura Bates**
> *Everyday Sexism*

வார்த்தையாகவும் பயன்படுத்தலாம். பெண்கள் மீது வெறுப்பு அல்லது கோபத்தை வெளிப்படுத்தும் ஆண்களைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

இதன் பொருள், தாமாக விரும்பி பிரம்மச்சாரியாக இருப்பவர்கள் அல்லது தாங்கள் விரும்பாத நிலையிலும் பிரம்மச்சாரியாக இருப்பவர்கள் என்று பொருள். சில நேரங்களில், இந்த வார்த்தை பாலின வெறுப்பு, வன்முறை, தீவிரவாதம் போன்ற கருத்துகளுடன் தொடர்புடையதாகவும் கருதப்படுகிறது. "இத்தகைய, இன்செல் கலாசாரத்துடன் தொடர்புடையவர்கள், பெண்களை வெறுக்கும் மனநிலையைக் கொண்டவர்களாக இருப்பார்கள். குரூர மனம் கொண்டு, போதைப் பழக்கத்துக்கு அடிமையானவர்களாகவும் இருப்பார்கள். எனவே, இவர்களிடம் எப்போதும் பெண்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனெனில், இவர்கள் தங்களின் மனமகிழ்ச்சிக்காக, சுயநலத்துக்காக பெற்ற தாயையும், மனைவியையும், உடன்பிறந்த சகோதரியையும்கூட கொல்லத் துணிவார்கள்' என்கின்றனர் மனநல நிபுணர்கள்.

இப்போது உலகம் முழுவதும் பெரும் பிரச்னையாகப் பார்க்கப்படுவது, இளம் சிறார்கள் மற்றும் ஆண் பதின்ம பருவத்தினரிடையே வளரும் பெண் வெறுப்பு, தீவிர பெண்ணிய எதிர்ப்பு மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை போன்ற "இன்செல்' கலாசாரத்தின் மூலம் நடைபெறும் சீரழிவுகளை சமூகமும், அரசுகளும் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன என்பதுதான்.

பிரான்ஸில் "இன்செல்' கலாசாரத்தால் பாதிக்கப்பட்ட 18 வயது இளைஞர் கைது செய்யப்பட்ட பிறகு, இந்த பிரச்னை உலகம் முழுவதும் பூதாகரமாக வெடித்துள்ளது. இந்த இளைஞரைக் கைது செய்து, தீவிரமாக விசாரித்து, அவரிடமிருந்த பையைச் சோதனையிட்டதில், பெண்களைத் திட்டமிட்டுக் கொல்ல இரண்டு கத்திகளை அதில் வைத்திருந்தது கண்டறியப்பட்டது. பிரான்ஸ் ஒரு மதச்சார்பற்ற நாடு என்பதால், இந்த வழக்கை பயங்கரவாத எதிர்ப்பு வழக்குரைஞர்கள் கையாளப் போகிறார்கள்.

பல நாடுகளில் "பாலின அடிப்படையிலான வன்முறை' பயங்கரவாதமாகக் கருதப்படுகிறது. பாலின அடிப்படையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சமூக வலைதளங்கள் மூலம் பரப்பப்படுவதால், இத்தகைய இழிவான செயல்களில் ஈடுபடுபவர்கள் எளிதில் அடையாளம் காணப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்கள்.

"இன்செல்' கலாசாரம் எனப்படும் பெண்கள் மீதான வெறுப்புணர்வு கடந்த பல ஆண்டுகளாக சமூகவலைதளங்களில் செழித்தோங்கி வந்துள்ளது. மற்ற வன்முறைகளைப் போல அல்லாமல், இந்த பெண் வெறுப்பு வன்முறைக் கலாசாரத்தை உலகம் தாமதமாக இப்போதுதான் உணர்ந்துள்ளது. சிறுவர்கள், பல பதின்மவயது இளைஞர்கள் சமூகவலைதளங்கள் மூலம் தங்களை இந்தக் குழுக்களில் இணைத்துக் கொண்டு பெண்களுக்கு எதிரான வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என்ற உண்மை இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

உலகம் முழுவதும் பெண்களின் உரிமைகள் கடுமையான பல போராட்டங்களுக்குப் பிறகுதான் வென்றெடுக்கப்பட்டுள்ளன. மேலும், அவர்களின் போராட்டங்கள் இன்னும் முடிவடையவில்லை. இந்தியாவிலுள்ள ஆணாதிக்க சமூகங்களில், இத்தகைய "இன்செல்' குழுக்கள் வளர்ந்து வருவது, பெண்களின் முன்னேற்றத்துக்கும், பாலின சமத்துவத்துக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் தடைக்கற்களாகவே அமையும்.

திரைப்படங்களும், தொலைக்காட்சி நெடுந்தொடர்களும், காட்சி ஊடகங்களும் பெண்களுக்கு எதிரான வன்முறைக் காட்சிகளையும், உருவகச் சொல்லாடல்களையும் முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். இதை கண்ணுறும் இளந்தலைமுறையினர், தங்களையும் கதாநாயகனாக நினைத்துக் கொண்டு சமூகத்தைச் சீரழிக்கின்றனர்.

எனவே, பெண்கள் மீது வெறுப்புணர்வை வளர்த்து, வன்முறையைத் தூண்டி, பிரச்னைகளை ஏற்படுத்தி, சமூகவலைதளங்களில் வலம்வரும் இத்தகைய குழுக்களைக் கண்டறிந்து அவர்களைக் கடுமையான சட்டங்கள் மூலம் தண்டிப்பது அரசுகளின் கடமை. அதே நேரத்தில், இத்தகைய இழி செயல்களில் ஈடுபடும் இளஞ்சிறார்களை பெற்றோர்களும், ஆசிரியர்களும் கண்காணிப்பது மிகவும் அவசியம்.

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

2025

## JANUARY




## FEBRUARY





## MARCH




## APRIL




## MAY




## JUNE




## JULY




## AUGUST




## SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |


## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email:
editor@ithamil.com


VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
Eat the Best!!!
VARSHA
1Kg
Traditional taste that Lingers
VARSHA
VARSHA